Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை : 7 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 30 சனிக்கிழமை (14 – 03 – 1998) SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்: 41

# கிழக்குப் போக்குவரத்துக்கான கட்டுப்பாடு 2வாரங்கள் தளர்வு

## 27 ஆம் திகதி தொடக்கம் அது நடைமுறைக்கு வரும்

கொழும்பு, மார்ச் 14

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு வாகனங்களை எடுத்துச் செல்வதற்கு கடந்த புதன்கிழமை விதிக்கப்பட்டிருந்த தடை அடுத்த இரு வாரங்களுக்குத் தளர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தடை உத்தரவு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தளர்த்தப்பட்டிருக்கும் என்றும் —

அதன் பின்னர் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாத வகையில் இத்தடை உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதானைக் குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து கிழக்கிலிருந்து வெளியிடங்களுக்கு வாகனங்களை எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

சோதனை நிலையங்களில் வைத்துப் பொருள்களையும் ஆள்களையும் வாகனங்களுக்கு மாற்றும் நடைமுறை தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்படாத நிலையில் —

வாகனங்களை எடுத்துச் செல்ல திடீரென தடை விதிக்கப்பட்டதால் கிழக்குக்கான போக்குவரத்து

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் போரில் புலிகள் மிகச் சிறப்பாகச் செயற்பாடு

### புலிகளின் உத்தியோகபூர்வ ஏடு தகவல்

வவுனியா, மார்ச் 14

படையினரை அழித்து, அவர்களது ஆயுதங்களைப் பறித்தெடுத்தல் என்ற இராணுவத் திட்டத்தை வன்னிப் போர்முனையில் புலிகள் இயக்கம் மிகச் சிறப்பாகவே நடைமுறைப்படுத்தி வருகிறது.

புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

'ஓயாத அலைகள்' தாக்குதலில் இருந்து 'வெற்றி உறுதி'க்கு எதிராக நடக்கும் சமர் வரை வன்னிப் போர்க்களத்தில் சிங்களப் படை சந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் நேற்று 4 படையினர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 14

நேற்று மாலை 6.30 மணியளவில் பருத்தித்துறை வீதியில் — புத்தூர் சந்திப் பகுதியில் — இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 4 படையினர் உயிரிழந்தனர்; நான்கு படையினர் காயமடைந்தனர்.

டிராக்டரில் சென்றோர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

அப்பாவிப் பெண் ஒருவரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இச் சம்பவம் குறித்து மேலதிக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## முன்னாள் யாழ். செயலக அதிகாரி விடுதலை

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் முன்னாள் நிர்வாக அதிகாரி திரு. வ. விக்னேஸ்வரமூர்த்திக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஷிராணி திலகவர்த்தனா இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

1995 ஆம் ஆண்டுக்கு முற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் மோதல்!

கொழும்பு, மார்ச் 14

அம்பாறை மாவட்டம் வெல்லாவெளியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2-45 மணியளவில் புலிகளுடன் நடந்த மோதலில் புலி உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகப் படை வட்டாரங்கள் அறிவித்தன. (உ-7-9)

## மாங்குளத்தில் கிபிர் தாக்குதல்!

வவுனியா, மார்ச் 14

விமானப்படையின் கிபிர் விமானங்கள் நேற்றுக்காலை 7.00 மணியளவில் மாங்குளத்துக்கு வடக்கேயுள்ள மக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

புலிகளின் தளங்கள் தாக்கி அழிக்கப்பட்டதாக படை வட்டாரங்கள் அறிவித்தன. (உ-3-7)

## சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, மார்ச் 14

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் ஓய்வு பெற்ற கடற்றொழில் பரிசோதகரான எஸ். கணேசமூர்த்தி (வயது-60) என்பவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மட்டக்களப்பு, கல்முனை வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது. (உ-21)

## புலி உறுப்பினர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 14

வவுனியா பறையனாளங்குளத்தில் நேற்று முன்தினம் நண்பகல் 1.15 மணியளவில் புலிகள் உறுப்பினர் ஒருவரை தாங்கள் சுட்டுக் கொன்றதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது. (உ)

## ஜீப்பை நோக்கி தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 14

அம்பாறையிலிருந்து மகாஓயா நோக்கி இரு வெளிநாட்டுப் பிரசைகளுடன் சென்றுகொண்டிருந்த பஜரோ ஜீப் மீது நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஜீப் சேதமடைந்தது.

இச் சம்பவத்துக்கு புலிகள் மீது அரசுத் தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது. (உ-7-9)

## நகரில் யானை!

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். நகரப் பகுதியில் நேற்று யானை ஒன்று உலா வந்தது.

பாகன் ஒருவன் ஏறி இருக்க — இராணுவத்தினர் புடை சூழ — வீதியோரங்களில் திரண்டிருந்த மக்களுக்கு தும்பிக்கையை ஆட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தவாறு யானை ஊர்வலம் வந்தது. (உ-9)

## கண்ணாட்டியில் இறந்த இளைஞன் யார்?

மன்னார் வீதியில் கண்ணாட்டி என்ற இடத்தில் நேற்று முன்தினம் நடந்த சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்ட இளைஞன் ஒருவரின் சடலத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க' நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அச்சடலம் தமது அமைப்பு உறுப்பினருடையது அல்ல என்று தெரிவித்து சடலத்தைப் பொறுப்பேற்க விடுதலைப் புலிகள் மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அரைக்காற்சட்டையுடன் காணப்படும் அந்தச் சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

## அம்பனில் மோதல்!

வவுனியா, மார்ச் 14

வடமராட்சி அம்பன், குடத்தனைப் பகுதிகளை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் மோதல் ஒன்று இடம்பெற்றது. சேத விவரங்கள் தெரியவரவில்லை.

இதனைத் தொடர்ந்து படையினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் என்று ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது.

இந்தத் தாக்குதலில் இரு

( 8 ஆம் பக்கம் பார்க்க)

### சவூதியில் இருந்து

## 5மாதங்களின் பின்னர் வந்து சேர்ந்த சடலம்!

வவுனியா, மார்ச் 14

சவூதி அரேபியாவில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி கார் விபத்தில் இறந்த — சில்லாலை வாசியான அகஸ்ரீன்பிள்ளை எட்வேர்ட் ஜெயராஜா என்பவரின் சடலம் ஐந்து மாதம் கழிந்து நேற்று வவுனியா வந்து சேர்ந்தது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றதால் அவரது சடலம் அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைகள் முடிவடைந்ததையடுத்து இவரது சடலம் நேற்று விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### சின்னத்தம்பி மார்க்கண்டு

( சமாதான நீதிவான் )
( தலைவர், மானிப்பாய் கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். )

பல பொது ஸ்தாபனங்களில் முக்கிய பொறுப்புக்கள் வகித்தவரும், எமதுசங்கத்தின் தலைவருமான

**சின்னத்தம்பி மார்க்கண்டு**

அவர்கள் 11-03-98 அன்று இயற்கை மரணம் அடைந்ததைக் கேட்டு அதிர்ச்சி அடைவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி, அவரின் பிரிவினையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உபதலைவர், பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர்,
பணியாளர்கள், பொதுச் சபைப்
பிரதிநிதிகள், கிளைக்குழு
உறுப்பினர்கள், கூட்டுறவாளர்கள்,
மானிப்பாய் கோ. ப. ப. நோ. கூ.
சங்கம்.

[சி/3104]

---

## கண்ணீர் அஞ்சலி

### சி. மார்க்கண்டு (J. P.)

எமது ஆலய முன்னாள் தலைவரும், பல வருடங்களாக மானிப்பாய் கிராம சபைத் தலைவருமாக இருந்த எமது மதிப்புக்குரிய திரு. சி. மார்க்சண்டு அவர்களின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபை,
சுதுமலை வடக்கு
ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்.
[54050]

---

## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், முன்னாள் மானிப்பாய் கிராம சபைத் தலைவரும், சமாதான நீதிவானும், நீண்டகால சமூக சேவையாளருமான

### அமரர் மார்க்கண்டு J. P.

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலிகள்!

மானிப்பாய்
வணிகர் கழக சங்கத்தினர்.

(54041)

---

## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத் தலைவரும், பணியாளர் தோழனுமாகிய

அமரர்

### சின்னத்தம்பி மார்க்கண்டு

அவர்கள்

11-3-98 இயற்கை எய்தியதையிட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன் அவரதுபிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
மானிப்பாய்க் கிளை.
[54056]

---

## சமய சந்நிதியில்

சுன்னாகம் இராமநாதக் கல்லூரி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேதநடராஜர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணிக்கு நடைபெறஉள்ளது.

மஹா கும்பாபிஷேகத்தை ஆலய பிரதம குரு அ. நா. சோமஸ்கந்தக் குருக்கள் நடத்திவைப்பார். (ஐ-9-13)

### கூட்டம்

சுன்னாகம், மார்ச் 14

[illegible]மயிலிட்டிக் கிராம சபைப் பிரிவு இடம் பெயர்ந்தோர் சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு உரும்பிராயிலுள்ள யொவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் வலி — வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-27)

---


முதலாம் தவணைப்
பயிற்சிப் பரீட்சை
ஆண்டு 1 – O/L வரை
15-03-98 ஞாயிறு
22-03-98 ஞாயிறு
**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(54059)

நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
சனி – ஞாயிறு
இரு தினங்கள் மட்டும்.
அஜித்குமார் – கஜோல்
நடித்த
காதல் மன்னன்
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/2756)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று சனி
விஜய் – சங்கவி நடித்த
"கோயம்புத்தூர் மாப்பிள்ளை"
நாளை ஞாயிறு
M. G. R. நடித்த
"நீரும் நெருப்பும்"
திங்கள் – செவ்வாய்
பிரசாத் - மதுபாலா நடித்த
'செந்தமிழ் செல்வன்'
நேரம் 10-30 — 2-30
(53782)

யாழ்.
**றீகல்** வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
12-03-98 முதல்
சுப்பஸ்ரார்
ரஜனி - நக்மா
ரகுவரன் நடித்த
**'பாட்ஷா'**
(மூன்றாவது தினமாக நடைபெறுகின்றது)
தினசரி 10·30 - 2·30
(பழைய நேரம்)
(54068)


---

## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் ப. நோ. கூ. ச. தலைவர்

அமரர்

### சின்னத்தம்பி மார்க்கண்டு

அவர்கள் 11-3-98 புதன்கிழமை சிவபதம் அடைந்தமையினை முன்னிட்டு மானிப்பாய் ப. நோ. கூ. சங்க ஐக்கிய நாணய சங்கமும், ஊழியர்நலன் புரிச் சங்கமும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ஐக்கிய நாணய சங்கம்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்
மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம்.
[54055]

---

## கண்ணீர் அஞ்சலி

சிறந்த கூட்டுறவாளரும், சமுகசேவையாளரும் மானிப்பாய் ப. நோ கூ. சங்க தலைவருமான

### சின்னத்தம்பி மார்க்கண்டு

(J. P.)

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம்.

அன்னாரின் இழப்பு கூட்டுறவாளர்களுக்கும் மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்திற்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் பேரிழப்பாகும். அவரது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மானிப்பாய் ப. நோ. கூ. சங்க பணிப்பாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்.
(சி/3107)

---

யாழ். மாவட்ட
விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## கண்ணீர் அஞ்சலி

எமது சமாச அங்கத்துவ சங்கமான
மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவரான

### அமரர் சி. மார்க்கண்டு

அவர்களின் மறைவை ஒட்டி அன்னாரது குடும்பத்தினருக்கும், மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

யாழ். மா. வி. உ. நு. கூ. ச. சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3109)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் இரா. கந்தசாமி
அவர்களின் தந்தையாரான

### கந்தசாமி இராமதேவன்

அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கலைப்பீடம்,
முதலாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(54052)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவி இரா. இளநகை
அவர்களின் அன்புத் தந்தையாரான

### கந்தசாமி இராமதேவன்

அவர்களின் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முகாமைத்துவ மாணவர்கள்
2 ஆம் வருட B பிரிவு
யாழ். பல்கலைக்கழகம்.

(54048)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நூலகம்

# 'வெற்றி உறுதி' படைகள் கைப்பற்றிய பிரதேசங்களுக்குள் ஊடுருவும் புலிகள்

வவுனியாவுக்கும்— கிளிநொச்சிக்கும் இடையில் பாதுகாப்பான தரைவழி விநியோகப் பாதையைத் திறப்பதற்காக 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை அரசுப் படைகள் ஆரம்பித்து நேற்றுடன் மேலும் ஒரு மாதம் கடந்துவிட்டது. சுமார் 76 கிலோமீற்றர் நீளமான இந்தத் தரைவழிப் பாதையில் கடந்த பத்து மாத கால இராணுவ நடவடிக்கை மூலம் 45 கிலோ மீற்றர் தூரத்தை அரசுப் படைகள் கைப்பற்றி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாக அறிவிக்கப்படுகின்றது. இப்போது மாங்குளத்துக்கு சற்றுத் தொலைவில் படைகள் நிலை கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

தற்போது கைப்பற்றி வைத்திருக்கும் 45 கிலோ மீற்றர் நீளமான பாதைப் பிரதேசத்தைத் தக்க வைத்துக் கொண்டுதான், எஞ்சிய பாதையையும் கைப்பற்றி, வவுனியாவையும் கிளிநொச்சியையும் படைகள் இணைத்தாக வேண்டும்.

இந்தப் பாதையைத் திறப்பதற்கு — அரசுப் படைகளை வழிநடத்தும் அரசியல்வாதியான — பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை விதித்த பல காலக்கெடுகள் காலாவதியாகி வருவது தெரிந்ததே. அது குறித்து பிரஸ்தாபிப்பதே ஒரு கேலிக்குரிய விடயமாகிவிட்டது!

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி வந்த — சுதந்திரப் பொன்விழா நாளில் — பாதை திறக்கப்பட்டுவிடும் என்பது அமைச்சர் ரத்வத்தை கடைசியாகக் கூறிய காலக்கெடு. அதுவும் காலம் கடந்து போய்விட்டது.

தமிழ் — சிங்களப் புத்தாண்டிற்கு முன்பதாக எப்படியும் பாதையைத் திறந்தாக வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் ரத்வத்தை உத்தரவிட்டிருப்பதாக தற்போது தெரியவருகின்றது.

ஆனாலும் இந்தக் காலக்கெடுவும் முன்னையது போல காலாவதியாகிப் போகும் சாத்தியமே தென்படுவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் ஏற்கனவே படையினர் கைப்பற்றி, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பாதைப் பிரதேசத்துக்குள் படையினர் மீது புலிகள் புதிய தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினர் கைப்பற்றிய பாதைப் பிரதேசத்துக்குள் புலிகளின் உளவுப் படைப் பிரிவு அடிக்கடி ஊடுருவி தகவல்களை அறிந்து செல்ல முயற்சிப்பது குறித்தும்—

அந்தத் தகவல்களை வைத்துக்கொண்டே 'வெற்றி உறுதி' படையினர் மீது பெருத்த எடுப்பில் ஊடுருவித் தாக்குதல்களை புலிகளால் மேற்கொள்ள முடிகிறது என்பதும்—

படை வட்டாரங்களுக்கு நன்கு தெரியும்.

'வெற்றி உறுதி' படையினர் மீது வெவ்வேறு இடங்களில் இத்தகைய பாணியில்— 'செய் அல்லது செத்துமடி' எனப் பெயரிடப்பட்ட வரிசையில்— ஆறு தாக்குதல்களை நடத்திபடையினருக்கு பேரழிவைப் புலிகள் ஏற்படுத்தியது இப்படித்தான்.

ஆனால் இப்போது புலிகள் தமது உத்தியை மாற்றியிருக்கிறார்கள் போலத் தெரிகின்றது.

இதுவரை காலமும் உளவுத் தகவல்களை வைத்துக்கொண்டு 'வெற்றி உறுதி' படையினர் மீது பெரும் ஊடுருவுத் தாக்குதல்களை நடத்தி வந்த புலிகள், இப்போது சத்தமின்றி படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவும்போது — உளவுத் தகவல்களைப் பெற்றுக்கொண்டு திரும்பாமல் — கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி அங்கேயே சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்தி, கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் கடமையிலிருக்கும் படையினருக்கு நிரந்தரத் தலையிடியாக மாறி வருகின்றார்கள்.

முன்னர் என்றோ ஒரு நாள் — எப்போதோ ஒரு நேரத்தில் — நடைபெறக்கூடிய பெருத்த எடுப்பிலான அதிரடி ஊடுருவலை எதிர்பார்த்திருக்க வேண்டியிருந்த படைகள், இப்போது அடிக்கடி சிறியளவிலான ஊடுருவலை எந்த முனையிலிருந்தும் — எந்த நேரத்திலும்— எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.




கடந்த ஒரு வார காலத்துக்குள் இத்தகைய — குறிப்பிடத்தக்க — மூன்று தாக்குதல்களைப் புலிகள் நடத்தியிருக்கின்றார்கள்.

கடந்த 4 ஆம் திகதி நண்பகல் ஒலுமடுவுக்கு அருகில்— மாங்குளத்துக்கு கிழக்குப் பகுதியில் — படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவியிருந்த புலிகள் மறைந்திருந்து நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் படைத்தரப்பு உயரதிகாரி ஒருவர் படுகாயமடைந்தார்; அவரின் ஜீப் பலத்த சேதமடைந்தது; பின்னால் வந்த மற்றொரு ஜீப் சிதறியது; இரு படையினர் உயிரிழந்தனர்; நான்கு படையினர் படுகாயமடைந்தனர்.

ஸ்ரீலங்கா பீரங்கிப் படையணியின் (563 ஆவது படைப் பிரிவின்) கட்டளைத் தளபதியான கேணல் ஜெகத் ஜெயசூரியாவே படுகாயமடைந்தவராவார். கேணல்கள் வரிசையில் மிகமூத்தவரான இவர் உடனடியாக அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவியிருந்த புலிகள்இந்தஅதிகாரியை இலக்கு வைத்துத்தான் இத்தாக்குதலை நடத்தினார்களா அல்லது எழுந்தமானமாக அவர்கள் நடத்திய தாக்குதலில் கட்டளை அதிகாரி சிக்கினாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

எது எப்படியென்றாலும் இத்தாக்குதல் நடந்து சில மணி நேரத்துக்குள், தாக்குதலில் காயமுற்ற அதிகாரியின் பெயர் விவரங்களோடு அதுபற்றிய செய்தியை 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

படையினரின் பிரதேசத்துக்குள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்திய பின்னர், அதன் தொடராக எழக்கூடிய அல்லது நிகழக்கூடிய சம்பவங்கள் பற்றிய தகவல்களையும் தொடர்ந்து திரட்டக் கூடிய நிலையிலேயே புலிகளின் ஊடுருவல் இடம் பெற்றிருக்கின்றது.

இத்தாக்குதலுக்கு இரண்டு நாள் கழித்து வன்னியில் புளியங்குளம்— முல்லைத்தீவு வீதியில் — படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நயினாமடுவுக்கும் மதியமடுவுக்கும் இடைப்பட்ட நெடுங்கேணிப் பிரதேசத்துக்குள் — ஊடுருவி மற்றொரு தாக்குதலைப் புலிகள் நடத்தினர். அங்கு புலிகளால் வெடிக்க வைக்கப்பட்ட இரு கிளைமோர் குண்டுகளால் கடற்படையினர் ஒன்பது பேர் உயிரிழந்தனர்; மற்றும் ஆறு படையினர் காயமடைந்தனர்.

இதனையடுத்து அப்பிரதேசத்தில்நிலை கொண்டிருக்கும்கஜபா,வலகம்பா,விஜபா பட்டாலியன்கள் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இதன் பின்னர் கடந்த 11 ஆம் திகதி நண்பகலில் மாங்குளத்துக்கு மேற்கே ஒற்றையன் குளம் பகுதியில் புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் இரு இராணுவக் கப்டன்கள் உயிரிழந்ததாகவும் பன்னிரண்டு படையினர் காயமடைந்ததாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலில் நான்கு படையினர் உயிரிழந்ததாகவும், இரு படையினர் காயமுற்றதாகவும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

'வெற்றி உறுதி' நடவடிக்கை மூலம் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் தற்போது நிலை கொண்டிருக்கும் துருப்புகள் மீது மோட்டார் தாக்குதல்களை நடத்துவதன் மூலமும் புலிகள் அவர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய மோட்டார் தாக்குதல்களுக்குரிய இலக்குகளை வகுப்பதற்கும் —

அத்தகைய தாக்குதல்களின் போது மோட்டார்க் குண்டுகள் வீணாகிப் போகாமல் — அதிக இழப்பை

**பாசுபதன்**

படைத்தரப்புக்கு ஏற்படுத்தச் செய்யவும் —

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவி புலிகளின் உளவுப் பிரிவினர் திரட்டி வரும்பெறுமதியான தகவல்களே பெரிதும் உதவுவதாகக் கூறப்படுகின்றது.

இதுவரை காலமும் ஊடுருவி உளவுத்தகவல்களை மட்டும் திரட்டி வந்த புலிகளின் உளவுப் பிரிவினர் இப்போது உளவுத் தகவல்களைத் திரட்டுவதோடு கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தாக்குதல் வலையை விரிப்பதற்கும் தவறுவதில்லை.

★ ★ ★

### கருவிகளுக்கு காத்திருப்பு

மாங்குளத்திலிருந்து ஒரு சில கிலோ மீற்றர்தொலைவு வரை 'வெற்றி உறுதி' படைகள் முன்னேறியிருப்பதாக தற்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

1990 இல் இரண்டாவது ஈழ யுத்தம் ஆரம்பமான கையோடு மாங்குளம் இராணுவ முகாமை புலிகளிடம் பறி கொடுத்ததுடன் மாங்குளம் மீதான கட்டுப்பாட்டை அரசுப்படைகள் இழந்திருந்தன. இப்போது மாங்குளத்தைப் பிடிப்பதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

'வெற்றி உறுதி'ப் படைகளின் முன்னோக்கிய நகர்வை புலிகளின் மோட்டார், பீரங்கித் தாக்குதல்களே பெரிதும் பின்னடைய வைத்திருப்பதாக களமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகளின் மோட்டார், பீரங்கிகளுக்கு சரியான பதிலடியைக் கண்டுபிடிக்கும் வரை முன்னேற்ற நடவடிக்கைகளை விஸ்தரிப்பதோ, கைப்பற்றிய பிரதேசங்களைத் தக்க வைப்பதோ இலகுவானதல்ல என்பது படை வட்டாரங்களுக்கு நன்கு தெரியும்.

எனவே புலிகளின் மோட்டார், பீரங்கிகள் ஏவும் தளங்களை துல்லியமாகக் கணக்கிட்டு தகவல்களைத் தரக்கூடிய கருவிகளைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் அரசுத்தரப்பு மும்முரமாக ஈடுபட்டது. அவற்றை பெரும் பொருட் செலவில் அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்யவும் வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

அந்தக்கருவிகளை இயக்குவதற்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான படை அதிகாரிகளின் குழு ஒன்று அமெரிக்கா சென்றுள்ளது. அந்தக் குழுவின் வருகையை அரசுத்தரப்பு எதிர் பார்த்திருப்பதாகத் தகவல். அந்தக் குழு கொழும்பு வந்ததும்— கருவிகள் யுத்த முனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதும்— 'வெற்றி உறுதி' நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் என்றும்—

புலிகளின் மோட்டார், ஷெல் தாக்குதல் தளங்களை இந்தக் கருவிகள் மூலம் அடையாளம் கண்டு தாக்கி அழித்தவாறு படைகள் முன்னேறும் என்றும் —

உயர் படை வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

மாங்குளம் கைபற்றப்பட்டதும் அது பற்றிய தகவலை பெரிய எடுப்பில் பிரசாரப்படுத்தவும்—

அந்தப் பிரசாரச் சூட்டோடு தென்னிலங்கையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி வெற்றியைச் சூடவும்—

அரசுத் தரப்பு திட்டமிட்டிருப்பதாக தென்னிலங்கையின் பிரபல இராணுவ அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

★ ★ ★

### பலாலியில் மனித உரிமை பேணும் பிரிவு

வடக்கில் நிலைகொண்டுள்ள படைகள் அடிப்படை மனித உரிமைகளை பேணுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மேலும் பல முன்னேற்ற நடவடிக்கைகளைத் தாம் எடுக்கப் போவதாக வடக்கின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்திருக்கின்றார்.

புதிய நடவடிக்கையாக — பலாலியில் மனித உரிமை பேணும் பிரிவு ஒன்று விசேடமாக அமைக்கப்படும். யாழ்ப்பாணத்திலோ அல்லது பிறஇடங்களிலோ உள்ளவர்கள் தொலைபேசி மூலம் இந்தப் பிரிவுடன் எந்நேரமும் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்கும். அங்கு உயரதிகாரி ஒருவர் பதில் தரக் காத்திருப்பார்.



மேஜர் ஜெனரல் பலகல்ல

ஏதேனும் கைது மற்றும் அது போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தால் அல்லது யாரேனும் கைதாகி காணாமற் போனால் அல்லது கைதான பின்னர் தகவல் இல்லாது போனால் அது பற்றி அவரது உறவினர்கள் அல்லது நெருக்கமானவர்கள் தொலைபேசி மூலம் இப்பிரிவுக்கு தகவல் தெரிவிக்க முடியும். இப்பிரிவு அத்தகவல்களைப் பதிவு செய்து கொள்வதுடன் சம்பந்தப்பட்ட நபர் குறித்து அடுத்த 24 மணி நேரத்துக்குள் தகவல்களைத் திரட்டி, உறவினர்களுக்கு அது பற்றி அறிவிக்கும் என்று ஜெனரல் பலகல்ல குறிப்பிட்டார்.

கைதுகள், தடுத்து வைத்தல் போன்றவை குறித்து இந்தப் பிரிவுக்கு உறவினர்கள் உடனடியாக தொலைபேசி ஊடாகத் தகவல் தருவதன் மூலம் கைதானவரின் உயிருக்கு தீங்கு ஏற்படாமல் —அவர் பாதுகாப்பாக இருப்பதை— உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

படையினர் தவறான வழியில் செயல்பட இடமளிக்காமல் கண்காணித்து கட்டுப்படுத்தவும் இம்முறை உதவும் என்று அவர் கருதுகின்றார்.

இந்தப் பிரிவு பற்றியும் அதனோடு தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் குறித்தும் அடுத்து வரும் தினங்களில் அறிவிக்கப்படும் என்றும்—

மக்கள் இந்தப் பிரிவைப் பயன்படுத்துவதிலேயே அதன் வெற்றி தங்கியிருப்பதாகவும்—

ஜெனரல் பலகல்ல குறிப்பிட்டார்.

பலாலியில் இயங்கும் இப்பிரிவு ஒரு சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட படையணியுடன் அல்லது படைப் பிரிவுடன் தொடர்பு கொண்டு விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்ட நபர்குறித்து விடயங்களை அறிந்து கொள்ளும்; அவரின் அல்லது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்

( 7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (புறோயிலர்), நல்லின முட்டைகள் விற்பனைக்கு உண்டு. (குறிப்பு:- சனி, ஞாயிறு காலை 11 மணிவரை) சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: சு. சுபநாதன், பொன்னையா வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (53913)

புதிய Rx – 100 YAMAHA மோட்டார் சைக்கிள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:-இல.26, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம், (54038)

### ருஷ்ய மொழி

Russian For Beginners யாழ்ப்பாணத்திலேயே (நகருக்கண்மையில்) கற்பிக்கப்படும். பகுதிநேர / வார இறுதி வகுப்புகள் 29-03-98 இல் ஆரம்பம். குறைந்த கட்டணம், மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி சுயமுகவரிமுத்திரை கொண்ட கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். Chekhov Centre, இல. 714, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [53979]

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும். சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொருநாளும் கிடைக்கும் (காலை தொடக்கம் மாலை வரை) Lacky Farm Sales Centre, Palaly Road, Thunelvely. (54039)

### தவறிவிட்டது

156, பருத்தித்துறை வீதி, நல்லூர், கயிலாசநாதன் சரஸ்வதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை பிரதான வீதிக்கும், நல்லூருக்கும் இடையில் 09-03-98 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். (54021)

யோகேஸ்வரன் செந்தூர்ராஜ் என்பவரது விசேட அடையாள அட்டை சுன்னாகத்திற்கும், மருதனாமடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ''டயா'' எலக்ரொனிக்ஸ் கொம்லெக்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி. (சன்மானம் வழங்கப்படும்) (54040)

### SPOKEN ENGLISH

ஆரம்பத்திலிருந்து A/L சித்தியடைந்த மாணவர்களுக்கும், வெளிநாடு செல்பவர்களுக்கும், O/L, ஆண்டு 6—10 மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும். ஆசிரியர், இல. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (53950)

### திருமணசேவை

எங்களிடம் எல்லா மதத்தினருக்கும் எஞ்சினியர், எக்கவுண்டன், டாக்டர் லண்டனிலிருந்து வந்து நிற்பவருக்கும் மணமகள்தேவை. குறிப்பு புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (54037)

### கோழிக்குஞ்சுகள்

பதினைந்து நாள் வளர்ச்சியடைந்த பிறிமா கைலைன் பிறவுண், வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' மாக்கற் கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [53989]

### தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்ப்பதற்குப் புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களை திருத்தி பொருத்துவதற்கும் பூஸ்ரர்களை பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் (B. Sc) (Ceylon) Dip in Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி-3068]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்

பொன்னையா குணரத்தினம் (துரை)

அன்புத் தெய்வமே! காலமெல்லாம் எமக்கென வாழ்ந்து பாசமழை பொழிந்து உங்கள் குரல் ஓய்ந்து 31 நாள்கள் மறைந்த போதிலும் அப்பா... அப்பா.. எங்கள் குரல் ஓயவில்லை. பாசமிகு கணவராய், தந்தையாய்,
சகோதரனாய்,
மைத்துனராய், சிறிய பெரிய தந்தையாய்,
மாமனாராய்
உடன்பிறவா சகோதரராய், பேரனாய், நல்நண்பராய் நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள்
நினைவலைகள்
எம்மைவிட்டு என்றும் நீங்காது நிலைக்கும்!

நாளை 15 – 03 – 98 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இவரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள், மருமக்கள்,
உடன்பிறவாச் சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

504, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம். (54002)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 25 — 12 — 1935

விண்ணில்: 24 — 02 — 1997

அமரர்

**தம்பியப்பா பூபாலபிள்ளை**

(இளைப்பாறிய இலங்கை மின்சார சபை ஊழியர்)


திதி: 14 - 03 - 98

ஆண்டு ஒன்று சென்றாலும் அழியாத
உங்கள் அன்பு முகம் பாசத்தின் சிகரம்
என நீங்கள் வந்தீர்கள்.....பாதியிலே
எம்மைவிட்டு எங்கு சென்றீர்?

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
உறவினர்கள்.

பங்களா லேன்,
மல்லாகம். (53958)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் முத்து நடராஜா**

பிறப்பு: 14 — 02 — 1936 இறப்பு: 23 — 02 — 1997

திதி; 14—03—1998

மீளாத்துயில் கொண்ட பாசக்குலவிளக்கே
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன?
உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன?
உங்கள் திருமுகம் பார்த்தால் போதாதே
ஆனதே அகவை ஒன்று!
உயிர் பிரிந்து உடல் அழிந்தென்ன?— எங்கள்
இதயத்தில் நிறைந்திருக்கும் எமதருமை அப்பாவே!
உங்களைத் தேடுகிறார்கள் கண்ணனும், தீபாவும்,
தீரனும்
மாமா! நின் முகம் தரணியிலே நிலைத்து நிற்க
முடியாமல்
போனதற்கு கொடிய வினைதான் காரணமே அன்றி
நின் (எம்) குரல் கேட்டும்
காலன் மனம் கரையவில்லையே அப்பப்பா!
ஓலமிட்டுப் பார்த்துவிட்டோம்
ஓய்ந்து விட்டீர்களே அப்பா!
ஓராண்டு சென்றாலும் ஓயாது எம்துயர்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரன்.

பிரதான வீதி, வல்வெட்டி. (53940)

யாழ். நகரில்!

தரம்மிக்க பேப்பர் வகைகளையும்,
எசன்ஸ் வகைகளையும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

## பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ் அன் பேப்பர் மேர்ச்சன்ற்

* றோணியோ பேப்பர்
* நியூஸ்பிறின்ட்
* ரைப்பிங்சீற்
* பாங் பேப்பர்
* போஸ்டர் பேப்பர்
* ரிசு பேப்பர்

மற்றும்

* பொக்ஸ் போர்ட்
* சிப்போர்ட்
* பிறிஸ்டல் போர்ட்

- ஆகிய சகலவிதமான பேப்பர் வகைளையும் -
- அச்சகத்திற்குத் தேவையான -
ஓ மைவகைகள் ஓ
ஓ றோணியோ மைவகைகள் ஓ
ஆகியவற்றையும்
வேண்டிய அளவில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

**பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ்**

104 (298), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3098)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 14

அரசாங்க பாடசாலைகளில் தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக்கடிதம் கிடைத்தும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போனவர்களுக்கு மீண்டும் நேர்முகப்பரீட்சை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியாதிருந்தவர்களே இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர்களை யாழ். கல்வித்திணைக்களம் வலயம் — 1 இல் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

# தகுதிகாண் ஆசிரிய நியமனம் பெறும் மேலும் 124 பேரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

குறிக்கப்பட்ட பிரதேசங்களில் அரசாங்கப் பாடசாலைகளில் தமிழ் மொழி மூலதகுதி காண் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் கடமையாற்ற நியமிக்கப்பட்ட 336 பேரில் 150 பேரின் விவரங்கள் ஏற்கனவே உதயனில் வெளியாகியுள்ளன. மேலும் 124 பேரின் விவரங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

★ எஸ். பவானி (மிருசுவில் மேற்கு)
★ பி. ராதா (வரணி வடக்கு)
★ கே. கௌசி (நுணாவில் மேற்கு)
★ கே. கே. குகதாசன் (அல்லாரை வடக்கு)
★ ஆர். முருகதாஸ் (உசன்)
★ பி. பத்மவேணி (உசன்)
★ எம். ஆனந்தராஜா (கரம்பைக்குறிச்சி கிழக்கு)
★ எஸ். மதிவதனி (கைதடி மேற்கு)
★ வி. தங்கலட்சுமி (அல்லாரை வடக்கு)
★ எஸ். புஸ்பராணி (சரசாலை வடக்கு)
★ கே. அருள்வேந்தன் (வரணி வடக்கு)
★ எம். விக்னேஸ்வரி (மீசாலை கிழக்கு)
★ என். சிறீதரன் (மட்டுவில் தெற்கு)
★ எவ். டி. எடிசன் (மிருசுவில்)
★ ஜி. ஜீவராணி (நாவற்காடு)
★ கே. இந்துமதி (அல்லாரை வடக்கு)
★ எம். சிவகுமார் (தவசிகுளம்)
★ எ. எ. அகிலா (சுண்டுக்குளி)
★ எவ். மரியடொறிற்றா (நாவாந்துறை)
★ என். உஷாவாணி (யாழ்ப்பாணம்)
★ பி. லலிதலக்ஷ்மி (நாவற்காடு, அச்சுவேலி)
★ பி. விஜயமாலா (யாழ்ப்பாணம்)
★ எம். றோஸ் மேரி (சுண்டுக்குளி)
★ எஸ். பத்மராஜா (திருநெல்வேலி கிழக்கு)
★ ஆர். அஜந்தினி (யாழ்ப்பாணம்)
★ ஆர். வலந்தினி (கரம்பன்)
★ எஸ். எஸ். ஜொஸ்சி (யாழ்ப்பாணம்)
★ எஸ். மகேஸ்வரி (கொழும்புத்துறை)
★ பி. லித்வின் விலாஜினி (யாழ்ப்பாணம்)
★ எஸ். சுஜராஜி (வடலியடைப்பு)
★ பி. ரஜனி (சங்கானை)
★ எ. ஜெயராணி (வட்டு வடக்கு)
★ எஸ். தயாநிதி (தொல்புரம் மேற்கு)
★ வி. வானதி (சுழிபுரம்)
★ பி. இந்திராணி (அராலி மத்தி)
★ இ. செல்வகுமாரன் (சுழிபுரம்)
★ கே. சிவகுமாரன் (கற்குழி, வவுனியா)
★ எஸ். சுமித்திரா (அராலி தெற்கு)
★ பி. அருள்செல்வி (அராலி மத்தி)
★ டி. அருந்தவன் (சித்தன் கேணி)
★ ரி. லிங்கநாயகி (வட்டு வடக்கு)
★ இ. சாந்தினி (சங்கானை)
★ வி. குமுதினி (உடுவில்)
★ எல். சுயந்தினி (கந்தரோடை)
★ எ. ரி. ஜெயதர்சினி (நாரந்தனை வடக்கு)
★ எ. பீற்றர் (யாழ்ப்பாணம்)
★ வி. எ. அனுபா (கொழும்புத்துறை மேற்கு)
★ எஸ். டில்சா (யாழ்ப்பாணம்)
★ எஸ். தாரணி (யாழ்ப்பாணம்)
★ யே. எவ். சுந்தரநாயகி (யாழ்ப்பாணம்)
★ எம். சுபாசினி (யாழ்ப்பாணம்)
★ எம். பி. அன்று (யாழ்ப்பாணம்)
★ [illegible] (ஆனைக்கோட்டை)
★ பி. சுதாஜினி (கோண்டாவில் மேற்கு)
★ எஸ். பகீரதி (கொழும்புத்துறை)
★ பி. மேரி பினிக்கா (யாழ்ப்பாணம்)
★ எல். யே. பத்திநாதர் (கொய்யாத்தோட்டம்)
★ எஸ். ரஞ்சிதகுமாரி (மீசாலை வடக்கு)
★ எஸ். லோகேஸ்வரி (அளவெட்டி வடக்கு)
★ ரி. யசோதா (யாழ்ப்பாணம்)
★ எ. எவ். கிறிஸ்ரினிறஜனி (திருகோணமலை)
★ எம். சாந்தகுமாரி (கைதடி கிழக்கு)
★ டி. செல்வன் (பாசையூர்)
★ எஸ். கயல்விழி (கொழும்புத்துறை)
★ பி. மணிமேகலா (சுண்டுக்குளி)
★ பி. சசிகலா (கொக்குவில் கிழக்கு)
★ ரி. மனோகரி (கலட்டி)
★ எம். மஞ்சுளாதேவி (கோண்டாவில்)
★ எல். சசிரேகா (கொக்குவில்)
★ எம். சத்தியகுமார் (யாழ்ப்பாணம்)
★ கே. சுகந்தி (கொக்குவில்
★ எஸ். சுஜாதா (கைதடி)
★ எம். மாலினி (நாயன்மார்கட்டு)
★ ரி. ஸ்ரீசந்திரகுமார் (திருநெல்வேலி கிழக்கு)
★ ரி. சுஜந்தினி (யாழ்ப்பாணம்)
★ என். சண்முகலிங்கம் (அரியாலை)
★ பி. மைந்தினி (நல்லூர் கிழக்கு)
★ எஸ். கனகசேகரம் (கொக்குவில்)
★ பி. பாலமுரளிதரன் (திருநெல்வேலி வடக்கு)
★ எஸ். சுகந்தி (கொக்குவில் மேற்கு)
★ வி. வினோதராணி (வண்ணார்பண்ணை)
★ ஏ. கே. ஜெயந்தி (வண்ணார்பண்ணை)
★ என். ரத்னவடிவேல் (வண்ணார்பண்ணை)
★ ஆர். கோதரஞ்சனா (யாழ்ப்பாணம்)
★ எஸ். நளினி (கொக்குவில் மேற்கு)
★ எம். சுபாஷினி (யாழ்ப்பாணம்)
★ ரி. ஜெயகுமார் (கொக்குவில் மேற்கு)
★ அருளம்பலம் (திருநெல்வேலி கிழக்கு)
★ எம். ரோஜநிர்மலா (அரியாலை)
★ பி. எ. பகீரதி (இணுவில்)
★ எம். மதிச்செல்வி (கோண்டாவில் கிழக்கு)
★ ஆர். ரத்தினம் (அரியாலை மேற்கு)
★ எஸ். அருட்செல்வி (யாழ்ப்பாணம்)
★ எஸ். உதயகலா (அரியாலை)
★ பி. பாலகணேசா (வலி. வடக்கு)
★ ரி. பாலசுந்தரி (கொக்குவில்)
★ கே. ஒளிவளர்மதி (கொக்குவில் மேற்கு)
★ எம். ஜெஸ்மினி ஜெந்தினி (நல்லூர்)
★ ரி. சிறீதரன் (யாழ்ப்பாணம்)
★ ஜே. டெய்சினா (நல்லூர்).
★ கே. யமுனா (கலட்டி)
★ எஸ். அலன்கோ (வண்ணார்பண்ணை)
★ கே. ஜெகதீஸ்வரி (அரியாலை)
★ கே. குமுதினி (கொக்குவில் மேற்கு)
★ எஸ். கே. சூரியவதனி (சித்தன்கேணி)
★ எம். மகேந்திரன் (தொட்டிலடி)
★ கே. கணேசகாந்தி (மூளாய் தெற்கு)
★ ஆர். பாமதி (அராலி மத்தி)
★ எஸ். சிவகுமார் (சித்தன்கேணி)
★ எஸ். சுதாகரன் (சங்கானை)
★ கே. சுதாளினி (ஆனைக்கோட்டை)
★ பி. சுகந்தி (காங்கேசன்துறை)
★ எஸ். சிவலோஜினி (தொல்புரம் கிழக்கு,
★ ரி. நாகசோதி (வட்டுக்கோட்டை)
★ சி. அமலரூாணி (செம்பியன்பற்று)
★ எஸ். சிறிபவானி (திருகோணமலை)
★ சி. அமலரட்ணம் (தாளையடி)
★ எஸ். மாலதி (வவுனியா)
★ எஸ். சிதம்பரகாந்தன் (ஆழியவளை)
★ எ. வளர்மதி (நெல்லியான்)
★ ஜே. அனீஸ் ரஜினி (தாளையடி கிழக்கு)
★ ஆர். யுளித்துருபா (தாளையடி கிழக்கு)
★ எஸ். யோகநாயகி (செம்பியன்பற்று)
★ வி. சசிக்குமார் (ஆழியவளை)

(ஐ-7-ரீ)

# மருதானை குண்டு வெடிப்பு: பொலீஸ் பொறுப்பதிகாரி விசாரிக்கப்படுகின்றார்!

மருதானையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கொம்பனித்தெரு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரகசியப் பொலீஸாரினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

அதேநேரம் — கொழும்பு போக்குவரத்துப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் இருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ள கொம்பனித்தெரு பொலீஸ்நிலைய தமிழ்ப் பெண் சார்ஜன்ட் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

கொம்பனித்தெரு விமானப்படைச் சோதனைச் சாவடியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த பெண் உடுப்பு மாற்றுவதற்கும் இந்தத் தமிழ்ப் பொலீஸ் சார்ஜன்ட் உதவியிருக்கலாம் எனப் பொலீஸார் நம்புகின்றனர்.

தற்போதுள்ள நிலையை நோக்கும் போது பொலீஸ் படையில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் உள்ளதா என்பதை அறிய புலனாய்வுப் பிரிவு தீவிரமாக விசாரணை நடத்தி வருவதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

இந்த விசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலீஸ் குழு ஒன்று நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

மருதானை குண்டுவெடிப்பு இடம்பெறுவதற்கு சில மணி நேரத்துக்கு முன்பே அக் குண்டு வெடிப்பின் சூத்திரதாரியென கருதப்படும் புலேந்திரன் கொழும்பை விட்டு வெளியேறி மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வாகரைக்கு சென்று விட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது என்று புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

(இ-21-3-7)


## தென் இந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீனம்

[அமெரிக்க, இலங்கை மிஷன்]

உடுப்பிட்டி

### 150 ஆம் ஆண்டு நிறைவு விழா

1847—1997

நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு
15-03-98 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30

நடத்துபவர்:
அருட்பெருந்திரு. கலாநிதி S. ஜெபநேசன்
காலை 11.00 பகிரங்கக் கூட்டம்
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(53957) உடுப்பிட்டி திருச்சபையினர்.

## வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சியப் பொறுப்பாளர்

உயர்திரு,

### சி. பேரின்பநாயகம்

அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளதை பெருமையுடன் வரவேற்று, அவர் நீடூழி வாழ்ந்து மக்களுக்கு நற்றொண்டு ஆற்றிட வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்க கூட்டுறவு
ஊழியர் தொழிற் சங்கம்,
சுன்னாகம்.

(54029)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 14 — 01 — 1918

இறப்பு: 28 — 03 — 1994

### சின்னப்பு குணரத்தினம்

திதி: 14 — 03 — 1998

ஆண்டு நான்கு சென்றாலும் ஆறிடுமோ எம் இதயம்; ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி - கு. பொன்னம்மா
பிள்ளைகள் - நவரத்தினராஜா லோஜினி
(யாழ். போதனா வைத்தியசாலை)
ராஜேஸ்வரி சுந்தரலிங்கம்
(செல்வம் பற்றி சார்ஜ் உரிமையாளர்)
ரஞ்சிதா சிவானந்தம்
நடராஜா யசோதரா (ஆஸ்திரேலியா)
பேரப்பிள்ளைகள்: தர்ஜினி, சுஜன்
நிரோஜா (ஆஸ்திரேலியா)

மார்விட்டபுரம்,
தெல்லிப்பழை.

(54030)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழக சஞ்சிகை வெளியீட்டு நிதியுதவிக்கான

## கலை விருந்து

1) நடன அர்ப்பணம்
2) மெல்லிசை
3) காலம் தந்த கோல மகள் (நாட்டிய நாடகம்)

காலம்: 14 - 03 - 1998 (இன்று) சனிக்கிழமை
மு. ப. 9-30 — 12-30
பி. ப. 2-30 — 5-30

இடம்: கைலாசபதி கலையரங்கு,
யாழ். பல்கலைக்கழகம்.

அனுமதிச்சீட்டுகள் நுழைவாயிலில்.

வரலாற்றுக்கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(54026)

வலி. கிழக்கு வட பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி (வ. து)

## அறிவித்தல்

**மருந்தகத்திற்கான
விற்பனை உதவியாளர் தேவை**

மேற்படிபதவிக்குவிண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்ப முடிவுத் திகதி: **20 - 03 - 1998**
நண்பகல் 12. 00 மணி

பதவியின் தகைமை: மருந்தகங்களில் விற்பனை உதவியாளராகக் கடமையாற்றிய அனுபவம், திறமை போன்றவற்றிற்கான சான்றிதழ்கள், சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.
இப் பதவிக்கு பெண் விற்பனையாளர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம்: திறமை, அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

இப் பதவிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் **24 - 03 - 98** ஆந் திகதி முற்பகல் 10. 00 மணிக்கு சங்கத்தின் தலைமைப் பணிமனையில் இடம்பெறும்.

முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பதாரிகள் தாங்களே விண்ணப்பத்தைத் தயாரித்து சங்கப் பணிமனைக்குஅனுப்பிவைக்க வேண்டும்.

பொது முகாமையாளர்,
வலி. கிழக்கு (வ. ப) ப. நோ. கூ. ச.
அச்சுவேலி.

[சி/3106]

## கோண்டாவில் பகுதி சுற்றிவளைப்பு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் தலைமையகத்துக்கு பின்புறமாகவுள்ள பகுதி நேற்று முன்தினம் அதிகாலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றது.

அப்பகுதி மக்கள் விசாரணைக்காக முகாம்பகுதிக்கு அழைத்து வரப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அதே நேரம் — அப்பகுதி ஊடான போக்குவரத்து வழமைபோல் இருந்தது.

(இ-ரீ)

## அதிபர் நியமனம்

தனங்கிளப்பு அ. த. க. பாடசாலைக்கு புதிய அதிபராக ந. ஏரம்பமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். இப் பாடசாலையின் அதிபர் வ. சின்னப்பு இளைப்பாறியதையடுத்து புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-117)

## கலை விருந்து

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ், பல்கலைக்கழக வரலாற்றுக்கழகம் சஞ்சிகை வெளியீட்டு நிதியுதவிக்காக நடத்தும் ''கலை விருந்து'' நிகழ்வு இன்று சனி கைலாசபதி கலையரங்கில் காலையும், பிற்பகலிலும் இரு அமர்வுகளாக இடம்பெறும்.

(ஐ-5)

## கோப்பாய் கோட்ட விளையாட்டு விழா

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக் கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வழங்குவார்.

(ஐ-118)

## முயற்சி

அகதிகள் புனர்வாழ்வு
நிறுவனத் திறன்விருத்தி மையம்

**பயிற்சி நெறிகள் ஆரம்பம்**

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| பயிற்சி நெறிகள் | வேண்டப்படும் தகைமைகள் |
| --- | --- |
| 1. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து (கிழமையில் ஐந்து நாள்கள்) | க. பொ. த. (சாதாரணம்) தமிழ் திறமைச் சித்தி உட்பட ஆறுபாடங்களில் சித்தி. |
| 2. தமிழ், ஆங்கில தட்டச்சு (சனி, ஞாயிறு வகுப்புக்கள், வேலை செய்வோர் உயர்கல்வி கற்போருக்கு முன்னுரிமை) | தமிழ்/ ஆங்கிலம் திறமைச் சித்தி உட்பட ஆறுபாடங்களில் சித்தி |
| 3. தையல் இயந்திரம் திருத்துதல் (சனி, ஞாயிறு வகுப்புக்கள்) பெண்கள் மட்டும் | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி |
| 4. வயறிங் – றிவைண்டிங் (கிழமையில் ஐந்து நாள்கள்) | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி |
| 5. நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் – குழாய் பொருத்தல் (கிழமையில் ஐந்து நாள்கள்) | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி |
| 6. தட்டச்சு இயந்திரம் திருத்துதல் (சனி, ஞாயிறு வகுப்புக்கள்) பெண்களுக்கு முன்னுரிமை | க. பொ. த. (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தி |
| 7. நவீனமுறையில் உடையமைத்தல் | க. பொ. த. (சாதாரணம்) ஆறுபாடங்களில் சித்தி |

★ பயிற்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

**விண்ணப்ப முடிவு திகதி: 25 – 03 – 1998**

சுய விவரங்களுடன் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

—நிர்வாகம்

(சி–3105)

## அதிரடி அரங்கு

**பல** ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ். மாநகர முதல்வராக பெண்மணி ஒருவர் பதவியேற்றிருக்கின்றார். இப்போது ஜனாதிபதி பெண்மணி; பிரதமர் பெண்மணி. இந்த வரிசையில் யாழ்ப்பாணத்துக்கு ஒரு பெண் மேயர்.

பதவியேற்பு வைபவத்தின் போது பதவிப் பிரமாணம் செய்த பலரின் தமிழ் வார்த்தைப் பிரயோகத்தைப் பார்த்து சிலர் முகம் சுழித்தனர்.

''தமிழகத்தையே தனது ஆளுமையால் கட்டியாண்ட காமராஜர் என்ன படித்தவரா? படிக்காத மேதைதானே! எனவே வார்த்தை உச்சரிப்பை விட்டு அவர்களின் திறமையைப் பாருங்களேன்!'' — என்று சமாதானம் கூறினார் மற்றொரு அன்பர்.

என்றாலும் கட்சியின் பெயரில் ''தமிழர்'' விடுதலைக் கூட்டணி என்று வைத்துக் கொண்டு தமிழைப் பிழையாக உச்சரித்ததுதான் இடித்தது.

பதவியேற்புவைபவத்தை சிலர், அரசியல் மேடையாக்கி 'நாற' அடித்தது பலரையும் முகம் சுழிக்க வைக்கத் தவறவில்லை.

பதவியேற்புக்கான சுபநேரம் காலை 10.15 மணி முதல் 11.15 மணி வரை என்றிருந்தது. ஆனால் முற்பகல் 10 40 மணிக்கு மாநகரசபை முன்றலுக்கு — வீதிக்கு வந்த மேயரும் உறுப்பினர்களும் சுபநேரத்துக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருப்பதாகக் கூறி வெளியே நின்றுவிட்டார்கள்; 10.45 மணிக்குப் பின்னரே உள்ளே வந்தனர்.

இதனை அவதானித்த சர்வதேச தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த— வெளிநாட்டவரான— பிரதிநிதி ஒருவர் ''இங்கும் மல்லாவி நேரமா?''—என்று சந்தேகம் கிளப்பினார்.

''சுபநேரம் பார்ப்பதற்கு பஞ்சாங்கம்தான் பார்க்க வேண்டும். பஞ்சாங்கம் மல்லாவி நேரத்தில் அச்சிடப்பட்டதற்கு மேயர் என்ன செய்ய முடியும்?''— என்று நம்மிடம் வினா எழுப்பினார் மற்றொரு நண்பர்.

பதவியேற்பு வைபவத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒன்பது உறுப்பினர்களில் எண்மர்தான் காணப்பட்டனர். ஒன்பதாவது நபரைக் காணவில்லை.

விசாரித்ததில் கிடைத்த தகவல் இது:—

வேட்பாளர் பட்டியலில் 35 வயதுக்கு உட்பட்டவர்களின் பெயர்களையும் சேர்க்க வேண்டும். ஆனால் அந்த வயதில் ஆள்களைத் தேடிப்பிடிப்பதில் மிகக் கஷ்டம். எனவே வெளிநாட்டுக்குப் போவதற்காக கொழும்பில் நின்ற ஓர் இளைஞரின் பெயரையும் சேர்த்து விட்டார்கள். இங்கு தேர்தல் நடக்க அவர் வெளிநாடு போய்விட்டார். இப்போது ஆள் இங்கு இல்லை: அவசரத்துக்கு அவரின் இராஜினாமாக் கடிதத்தையும் பெறமுடியாத நிலை. எனவே வேறு வழியின்றி ஏனைய எண்மரும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்கள்.

★ ★ ★ ★ ★

**பா**டசாலை அதிபரின் அறைக்குள் விடப்பட்டு கதவு மூடப்பட்டு உள்ளே சிக்குண்ட பதினொரு வயது மாணவனை பின்னர் மாலையில் அயலவர்கள் வந்து அதிபரின் அறையின் ஓட்டைப் பிரித்து உள்ளே நுழைந்து காப்பாற்றினர்.

கடந்த திங்களன்று தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இச்சம்பவம் நடந்திருக்கின்றது.

பாடசாலையில் ஏதோ குழப்படி செய்த ஒரு மாணவனை கண்டித்த அதிபர், அந்த மாணவனை தனதுஅலுவலக மூலையில் உட்காரும்படி உத்தரவிட்டார். அறை மூலையில் அழுதபடி உட்கார்ந்த மாணவன் அந்த இடத்திலேயே நித்திரையாகிவிட்டான்.

மாணவனை அறைக்குள் இருத்தியதை மறந்துவிட்ட அதிபர் பாடசாலை விட்டதும் அலுவலக அறையைப் பூட்டிக் கொண்டு சென்றுவிட்டாராம்.

பிற்பகலில் நித்திரையால் எழுந்த மாணவன் தான் அறைக்குள் பூட்டப்பட்டிருப்பதை உணர்ந்து கூக்குரல் எழுப்பினான். இந்தச் சத்தத்தை அவதானித்த அயலவர்கள் அங்கு திரண்டுவந்து அதிபரின் அறையின் ஓடுகளைப் பிரித்து உள்ளே இறங்கி மாணவனை மீட்டு வந்தனர்,

★ ★ ★ ★ ★

**ப**ல்கலைக்கழக துறைத்தலைவர் ஒருவரின் வெதும்பல் இது:-

தான் விடுமுறையில் நிற்கும் போது பதில் துறைத் தலைவராகப் பொறுப்பு வகிப்பவர் 'பதில்' என்ற சொல்லை விட்டு விட்டு அல்லது வேண்டும் என்றே மறைத்து விட்டு முழு துறைத் தலைவராகச் செயற்படுகின்றாராம். பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பது வரை ''பதில்'' என்ற சொல்லை விட்டு விட்டுத்தானாம்!

இந்த வித்துவக் காய்ச்சலுக்கு 'பதில்' தருவது யாரோ?

★ ★ ★ ★ ★

**யா**ழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு என வந்த 'புரஜெக்டர்கள்' (நிழலுருப் படம் காட்டி) உட்பட பல கருவிகள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படாமல் கல்வித் திணைக்கள களஞ்சியங்களில் தூங்குவதாக தகவல்.

பாடசாலைகளுக்கு இவற்றை வழங்காமல் பின்னடிப்பதன் நோக்கம் என்ன என்று கேட்கின்றார் ஓர்அதிபர். களஞ்சியத்தில் வைத்து கற்பூரம் காட்டி, பூசை செய்யப் போகின்றார்களா என்றும் அவர் வினாவுகின்றார்.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

சித்த மருத்துவத்தில்
முதலாவது பேராசிரியராகப் பதவி பெற்ற
பேராசிரியர்

## சுப்பிரமணியம் பவானி

அவர்களை பொற்பதி விநாயகர் துணைகொண்டு நீடூழி வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

போதனை சாரா உத்தியோகத்தர்கள்,
சித்த மருத்துவத்துறை, கைதடி.

(54062)

# மரண அறிவித்தல்கள்

## கனகரட்ணம் சற்குணராஜன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கு, பிள்ளையார் வீதியைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பில் வசித்து, இதுவரை லண்டனில் வசித்து வந்தவருமான குணம் என்று அழைக்கப்படும் கனகரட்ணம் சற்குணராஜன் 10. 03. 1998 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் திருவாளர் கனகரட்ணம், காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியினரின் மூத்த புதல்வனும், சித்திராவின் அன்புக் கணவரும், சுரேஷ்குமாரின் அன்புத் தந்தையும், கருணானந்தன் (Sharp Graphics Pvt, (Ltd), Colombo), பத்மலோசனி (திருநெல்வேலி), பத்மலீலா(கனடா), ஸ்ரீரமணானந்தன் (கனடா)ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தி (கொழும்பு), ரகுநாதன் (திருநெல்வேலி), அகிலன் (கனடா), கலா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சச்சிதானந்தன் (லண்டன்), சத்தியசீலன் (லண்டன்) நடராசா (லண்டன்), தயாநிதி (லண்டன்), சதானந்தன் (திருநெல்வேலி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், சிவகுமார் (லண்டன்), சுதாகரன், கமலா ஆகியோரின் அன்பு மச்சானாரும், இந்துஷா, தனுஷா, அபிலாஷா, பிரசான், பிரவீத், சிந்துஜா, விகோபன், சுகன்யா ஆகியோரின் பெரியப்பாவும், ஜனகன், உமையவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (14. 03. 1998) பிற்பகல் 1.00 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ரகுநாதன்
(மைத்துனர்)

''சரஸ்பதி''
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். (54043)

திருமதி

## சிவக்கொழுந்து மருதடியார்

மண்டைதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி சிவக்கொழுந்து மருதடியார் நீர்கொழும்பில் 12-3-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருதடியார் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி குணேஸ்வரி, காலஞ்சென்றவர்களான திருநீலகண்டன், படிகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற க. சண்முகம், திரு. பரஞ்சோதி(ஓய்வுபெற்ற தபாலதிபர்,மல்லாவி), ஆகியோரின் மாமியாரும், திவ்வியபவானி, வசந்தகுமார் (ஜேர்மனி), நளினி (ஆஸ்திரேலியா), வசந்தி (ஆஸ்திரேலியா), சாந்தி (ஆஸ்திரேலியா), பகீதரன் (லண்டன்), காலஞ்சென்ற யமுனா, மிதினா (நீர்கொழும்பு), துஷ்யந்தி (தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்), சிறீதரன் (கொழும்பு பல்கலைக்கழகம்) மற்றும் காலஞ்சென்ற சிவமோகன், கமலா, விமலேஸ்வரன். கணேஷன், உதயன்ராஜன், குமரவேள் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், சிவ, நயனி, சிவசங்கரி, கஜன், சிறீலக்சுமி, கார்த்திக், மிதுஷன், ரெபேக்கா, சாயிபாரதி, விஜய், நிலானி நிவேதா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நீர்கொழும்பு மயானத்தில் 13-3-98 பிற்பகல் 2.00 மணிக்குத் தகனம் செய்யப்பட்டது

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. திவ்வியபவானி
(பேர்த்தி)

28, குமாரசாமி வீதி,
கந்தர்மடம். (54051)

## சதாசிவம் தருமலிங்கம்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இடம்பெயர்ந்து கண்டாவளையில் வசித்தவருமான சதாசிவம் தருமலிங்கம் 18 – 2 – 98 இல் கண்டாவளையில் காலமானார்.

இவர் கண்ணம்மாவின் அன்புக்கணவரும், நிறைஞ்சன் (ஜேர்மனி), டிகனசரோஜினி, மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி தர்மலிங்கம், சாந்தலிங்கம், பாலன், காலஞ்சென்ற திருமதி தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தையா, கனகரெத்தினம், தருமலிங்கம், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, பரமேஸ்வரி, சிந்தாமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 – 2 – 98 இல் கண்டாவளையில் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
அ. கந்தையா
(மைத்துனர்)

234, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (54061)

## தவக்கால சிந்தனை

(18 ஆம் நாள்)

இன்று உறவுகள் பிரிவதற்கும், பகைமைகள் உருவாகுவதற்கும் சொத்துக்களே காரணமாகின்றன. எல்லாம் பொது என்ற காலத்தில் இருந்த உறவு, மகிழ்வு இன்று அருகிவிட்டதே. பொருள்களில் அன்பு செய்த மனிதன் மனித உறவினை இழந்து தவிக்கிறான். வீட்டுக்கு வீடு பாகப் பிரிவினை மீண்டும் வளரப் பகைமையே மிஞ்சி நிற்பதைக் காண்கின்றோம்.

கிறிஸ்துவில் நிலைத்திருப்பவனுக்கு அவரது அன்புறவே பெரும் சொத்துக்கள். இறை உறவை இழந்தோமானால் எமது வாழ்வில் நாம் தேடும் சொத்துக்கள் அமைதியை, சந்தோசத்தை, சமாதானத்தைத் தர முடியாது.

கிறிஸ்துவில் அன்புறவு கொள்ளும் நாம் அவர் சாயலில் அன்புறவை தேடி அலையும் அனாதைகள், அகதிகளுடன் பகிர முன் வருவோமா? உன் உறவால் ஒரு ஜீவன் வாழ்வானாகில் இவ்வுலகில் அனாதை என்ற சொல்லுக்கே இடமிராது போகும். உன் அயலவனிலும் அனாதை அகதியிலும் அன்பைப் பகிர்ந்து அன்பியத்தைக் கட்டி வளர்ப்போமா? இறை உறவைப் பகிர்வோமா?

யோசப்பாலா.

## அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மூன்று மாத கால பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த திணைக்கள ஊழியர்களுக்கு பரிசாரகர் நியமனம் வழங்குவதற்கான எழுத்துப் பரீட்சையும், செயலமுறைப் பரீட்சையும் நாளையும் செவ்வாய்க்கிழமையும் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற உள்ளன.

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் செ. மகேந்திரன் தெரிவித்துள்ளார். (உ–9)

## கொழும்புக்கு வெங்காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாண விவசாயிகளிடம் கொள்வனவு செய்யப்பட்ட வெங்காயம் நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஹண்டி கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

விவசாயிகளின் நன்மை கருதி வெங்காயம் கப்பற் கட்டணமின்றி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இக்கப்பலில் புகையிலை உட்பட வேறு சில பொருள்களும் அரைக்கட்டணத்துடன் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ–5)

## வெற்றி உறுதி...

(மூன்றாம் பக்கத் தொடர்)

கும்.

பின்னர் முறைப்பாட்டுக்காரர் தெரிவித்த தொலைபேசி இலக்கம் மூலம் அல்லது —

அவரின் விலாசத்துக்கு அருகில் உள்ள இராணுவப் படைப்பிரிவு மூலம்—

உரிய பதிலை முறைப்பாடு கிடைத்து 24 மணித்தியாலத்துக்குள் [illegible] வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

★

## சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இந்திய அரசாங்கத்தினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட சிமெந்து எதிர் வரும் 20 ஆம் திகதி முதல் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளன. (உ–5)

உ

அளவெட்டி அலுக்கை

## நாவலடி ஞானவைரவர் ஆலயம்
## பிராயச்சித்த அபிடேகக் கூட்டம்

காலம்; 15-03-1998 ஞாயிற்றுக்கிழமை
நேரம்; காலை 9.00 மணி
இடம்: மேற்படி ஆலய மண்டபம்

அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அலுக்கை,
அளவெட்டி. (54057)

அடியார்கள் சார்பில்
கே. எஸ். சிவஞானராஜா

## ஆத்மார்த்த அஞ்சலி

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபையின் முன்னாள் தலைவரும் சமய சமூகத் தொண்டருமாகிய முன்னாள் செனற்றர்

## அமரர் த. நீதிராசா

அவர்கள் கொழும்பில் தமது இல்லத்தில் 12–03–98 வியாழனன்று முருகனடி சேர்ந்துவிட்டார். இவர் தமது இளமைக்காலந் தொடக்கம் மஞ்சவனப்பதி முருகன்மீது பக்திகொண்டு ஆலயத்திருப்பணி வேலைகளைச் செய்தும், செய்வித்தும் வந்த தொண்டர் ஆவார். அமரரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மஞ்சவனப்பதி முருகப்பெருமானின் அருளை வேண்டுகின்றது.

ஆலய சேவையில் – நிர்வாகசபை.

இ. இராசலிங்கம்
செயலாளர்

த. கணேசபிள்ளை
தலைவர்

கொக்குவில் மேற்கு
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,
கொக்குவில்.

(49993)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிமுத்து நீதிராசா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகரும் கிறின்லன்ட் ஹோட்டல் உரிமையாளரும், செனற் சபை முன்னாள் உறுப்பினரும், சமாதான நீதிவானும், சமூக சேவையாளருமாகிய தம்பிமுத்து நீதிராசா அவர்கள் 12 – 03 – 98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, விஜயரட்ணம், இராசரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மினி, அமுதாம்பிகை, தனராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், V. R. வடிவேற்கரசன், S. T. S. அருளானந்தம், கிளி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-03-98 சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். அதேதினம் அவரின் சொந்த இடமான கொக்குவில் மேற்கு இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். அனைவரையும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ஆ. சோமசுந்தரம்
(மைத்துனர்)

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு. (49992)

## கந்தசாமி இராமதேவன்

மாதகலைப்பிறப்பிடமாகவும் தச்சடம்பன் மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராமதேவன் 10–03–98 அன்று மன்னாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (இளைப்பாறிய இராணுவ அதிகாரி),முத்துப்பிள்ளை(இளைப்பாறிய மருத்துவமாது) ஆகியோரின் அன்பு மகனும், கீதாதேவன் (கனடா), திரவியம் (கனடா), தியாகராசா (கனடா), அருணாசலம் (அமெரிக்கா ) ஆகியோரின் அன்புச்சகோதரனும், செல்வமணியின் அன்புக்கணவரும் மேகலா (தாதியர் பயிற்சிக்கலாசாலை, மட்டக்களப்பு), கந்தசாமி (முகாமைத்துவம், யாழ். பல்கலைக்கழகம்) இளநகை (முகாமைத்துவம், யாழ். பல்கலைக்கழகம்), நெடுஞ்சேரலாதன், தமிழழகி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12–03–98 நேற்று மணியர்குளம் இந்து மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கந்தசாமி
(மகன்)

''பிரணவம்''
கந்தரோடை,
சுன்னாகம். (54053)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14
கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். - நல்லூர் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் பிரதமவிருந்தினராகவும், கல்வித்திணைக்களக் கணக்காளர் தி. சுதந்திர பாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-4)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் திங்கள் பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் அதிபர் தி. கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

★ ★ ★

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் ந. பரமசிவம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத் தலைவர் பேராசிரியர் வை. பரமேஸ்வரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜெ. எக்ஸ். செல்வநாயகம், வேலணை, ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அலுவலர் வை. நிமலநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-4)

★ ★ ★

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணி முதல் அதிபர் மா. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக இலங்கை வங்கி உதவி முகாமையாளர் செ. நாகரத்தினமும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப் பாளர் ஆ. இராசேந்திரனும் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ-9)

★ ★ ★

மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் சிரேஷ்ட வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. சி. குருகுலலிங்கம் தலைமையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணி முதல் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வண. பிதா பி.எம். இம்மானுவேல் அடிகளும், சிறப்புவிருந்தினராக மருதங்கேணிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராஜலிங்கமும் கலந்து கொள்வர். (ஐ-118)

★ ★ ★

கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ - 7)

★ ★ ★

கோப்பாய்க் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கானமெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9 மணிக்கு புத்தூர் ஸ்ரீ. சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் வலயம் இரண்டு பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி. இராசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-3)

★ ★ ★

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் சி. பகவத்சிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

கோப்பாய் கல்விக்கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-7)

★ ★ ★

ஏழாலை புனித இசிதோர் றோ. க. த. க. பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 8. 30 மணிக்கு அதிபர் க. ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

கெயர் நிறுவன திட்டமிடல் அதிகாரி அ. அருள்ஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-27)

## கிழக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்)
ஸ்தம்பிதம் அடைந்தது.

அரசியல் வாதிகள் மட்டத்திலும், பொது அமைப்புக்கள் மட்டத்திலும் எழுந்த கடும் எதிர்ப்பை அடுத்து தனது புதிய கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை இரண்டு வாரங்களுக்குத் தளர்த்துவதற்கு அரசு தற்போது இணங்கியிருக்கின்றது. (உ-3-21-10)

## வன்னிப் போரில்...

(முதலாம் பக்கத் தொடர்)
தித்த ஆளிழப்பு மிக மிக அதிகம்.

இந்த இரண்டு இராணுவ நிகழ்ச்சிகளுக்கு இடைப்பட்ட 20 மாதங்களில் சுமார் 5 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டனர்.

'ஓயாத அலைகள்' நடவடிக்கையில் ஆயிரத்து 400 படையினரும், 'சத்ஜய' நடவடிக்கையில் 600 படையினரும், 'வெற்றி உறுதி' நடவடிக்கையில் இதுவரை 3ஆயிரம் படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏறக்குறைய 9 ஆயிரம் படையினர் காயம் அடைந்துள்ளனர். இந்த இழப்புக்கள் கொடுத்த மன உளைச்சல் காரணமாக இந்தக் காலப் பகுதியில் 15 ஆயிரம் சிப்பாய்கள் படையைவிட்டு ஓடினர்.

இதன் காரணமாக என்றுமில்லாத அளவு படை ஆள் பற்றாக்குறையைச் சந்தித்துள்ளது.

இதனால் போர் அரங்கில் அது பாரிய சவால்களை, நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கிறது.

போரையும்சரியாக நடத்த முடியாமல், சமாதான நடைமுறைக்கும் வரமுடியாமல் சந்திரிகா அரசாங்கமானது திரிசங்கு சொர்க்க நிலைக்குள் சிக்கித் தவிக்கிறது.

ஆள்பற்றாக்குறை, பிரச்சினை, ஆயுதத் தட்டுப்பாடு, விநியோகப் பிரச்சினை, புலிகளின் வீரியமான எதிர்த்தாக்குதல் என பிரச்சினைச் சகதிக்குள் சிக்கிப் படை அல்லலுறுகின்றது.

சிங்கள அரசு திரிசங்கு சொர்க்க நிலையிலும், சிங்களப் படையின் இயலாமையிலும் தான் ஈழத் தமிழர் விடிவு தங்கியுள்ளது.

சிங்களப் படைகள் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் போது நாம் போரை விரைவாக நகர்த்துவதன் மூலம் வெற்றியை விரைவாகப்பெற முடியும்—இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## 5 மாதங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்)
அங்கிருந்து எடுத்து வரப்பட்ட சடலம் தற்போது வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

மடு, தச்சனார் மடுவில் உள்ள அகதி முகாமில் தங்கியுள்ள அவரின் உறவினர்களிடம் அந்தச் சடலத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவரது குடும்பம் 1990 ஆம் ஆண்டுசில்லாலையில் இருந்து இடம் பெயர்ந்து அந்த முகாமில் தங்கி வாழ்வது குறிப்பிடத்தக்கது. (உ-164-3)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்)
பட்ட காலத்தில் விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களை படையினருக்குத் தெரிவிக்கத் தவறியதாக இவர் மீது குற்றம்சுமத்தப்பட்டிருந்தது.

இவ் வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கை வாபஸ் பெறுவதாக அரசுத்தரப்பு தெரிவித்ததை அடுத்து விக்னேஸ்வரமூர்த்தியை விடுவித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். (உ-3)

# கிருஷாந்தி கொலை வழக்கில் எதிரிகள் தப்பியோட முயற்சி?

கொழும்பு, மார்ச் 14
கைதடிமாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் மூவர் கொலை வழக்கின் சந்தேக நபர்களான எண்மரும் சிறைச்சாலையில் இருந்து தப்பிஓட முயற்சிகள் மேற் கொண்டனர் எனக் கிடைத்த நம்பிக்கையான தகவலை அடுத்து அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சிறைச்சாலை ஆணையாளர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தேக நபர்கள் விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுடன் ஒன்றாகத் தடுத்து வைக்கப்படவில்லை எனவும்—

அவர்களின் நன்மை கருதியே சபெல் கட்டடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும்—

## தடுக்க உரிய நடவடிக்கை

சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகள், சிறையில் இருந்து தப்பி ஓடி பின்னர் கைதுசெய்யப்பட்டகைதிகள் மற்றும் சிறைச்சாலைக்குள் எதிரிகள் உள்ள கைதிகள் ஆகியோரே சபெல் கட்டடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த வழக்கின் சந்தேக நபர்கள் விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுடன் ஒன்றாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு ஆபத்து நேரிட வாய்ப்பு உண்டு என சந்தேக நபர் ஒருவர் சார்பில் தோற்றிய சட்டத்தரணிசெய்தமுறைப்பாட்டை அடுத்தே சிறைச்சாலை ஆணையாளர் இந்தத்தகவல்களை நீதிமன்றத்துக்கு வழங்கினார். (உ-10)

## புதிய நட்சத்திரம்

கொழும்பு, மார்ச் 14
விண்வெளியில் சுமார் ஒன்றரைக் கோடி ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ள புதிய நட்சத்திரம் ஒன்றை அமெரிக்க வானிலையாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

மேரிலாண்ட் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் 'ஆர்டி-1' என்று இதற்குப்பெயரிட்டுள்ளனர். பிரபஞ்சம் தோன்றி 82 கோடி வருடங்களின் பின்னர் இது உருவாகி இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (உ-9)

## அம்பனில்...

(முதலாம் பக்கத் தொடர்)
பிள்ளைகளின் தாயான அசோக்குமார் அற்புதம் (வயது 29) என்ற 5 மாதக் கர்ப்பிணிப் பெண் கொல்லப்பட்டார்.

இவரின் சடலத்துடன் [illegible] பட்டது. (உ-3-173-15)

## கல்வியியல் கல்லூரிக்கு காணி தெரிவு செய்ய விசேட குழு வருகின்றது

யாழ்ப்பாணத்தில் கல்வியியல் கல்லூரி நிறுவுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கொழும்பிலிருந்து நான்கு பேரடங்கிய அதிகாரிகள் குழு ஒன்று வரவுள்ளது.

நாளை மறுதினம் 16 ஆம் திகதி யாழ். வரும் இக் குழுவினர் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வடக்கு — கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமியுடன் இணைந்து மண்கும்பான், கோப்பாய் ஆகிய இடங்களுக்குச் சென்று கல்வியியல் கல்லூரி அமைப்பதற்கான காணிகளைப் பார்வையிடுவதுடன் இதற்கான இடத்தையும் தேர்ந்தெடுப்பார்கள்.

அன்று காலை வரும் இக் குழுவினர் மாலையே கொழும்பு திரும்பிவிடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## புதிய ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 14
யாழ், மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு தமிழ்மொழிமூல தகுதிகாண் ஆசிரியர்களாக நாளைமறுதினம் நியமனம்பெறும் 336 பேருக்கும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மூன்று வாரங்களுக்கு சேவைக்கால முன்பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது:

நியமனம் பெறுபவர்கள் சம்பந்தப்பட்ட வலயங்களுக்கு நாளை மறுதினம் சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலயம் ஒன்று, இரண்டு கல்வி அலுவலகங்கள் கேட்டுள்ளன. (உ-3-5)

## சாவகச்சேரியில் பதவியேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14
சாவகச்சேரி பிரதேச சபை தலைவராக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) யைச் சேர்ந்த பொன்னையா அன்ரன் நேற்றுப் பகல் 12 மணியளவில் சாவகச்சேரி நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பதவியேற்புக்கு முன்னர் புளொட்டின் தலைமைச் செயலகத்தில் முன்னாள் செயலதிபர் அமரர் க. உமா மகேஸ்வரனின் உருவப் படத்திற்கு மலர்மாலை அஞ்சலி செலுத்தியதுடன் தந்தை செல்வா நினைவுத்தூபி மற்றும் தமிழராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோரில் நினைவுத் தூண்களுக்கும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (உ-5)

## படையினரிடம் வகையாக சிக்கிய கள்வர் கூட்டம்

சுதுமலை, மார்ச் 14
மானிப்பாய் சோமசுந்தரம் வீதிப் பகுதியில் ஆள்கள் இல்லாத ஒரு வீட்டை உறவினர்களின் வீடு என்று அயலவர்களிடம் தெரிவித்து விட்டு அந்த வீட்டில் இருந்த கதவுகள், ஜன்னல்கள், நிலைகள், ஓடுகள், மரங்கள் போன்றவற்றைக் கழற்றி வண்டியில் எடுத்துச் செல்ல முயன்ற மூவர் வீதி வழியாக ரோந்து வந்த படையினரிடம் வசமாகச் சிக்கிக் கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

படையினர் சம்பந்தப்பட்ட மூவரையும், வண்டியையும், மாட்டையும், அதிலிருந்த பொருள்களையும் ஆனைக்கோட்டை கூழாவடியில் உள்ள இராணுவமுகாமுக்குக் கொண்டுசென்று விசாரித்தனர்.

பிடிபட்டவர்களில் ஒருவரின் கால் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காய அடையாளம் காணப்பட்டது.

அது குறித்து விசாரித்த போது அண்மையில் தாவடிப் பகுதியில் களவில் ஈடுபட்டோர் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் இவர் என்று தெரிய வந்ததாம். (உ-139)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 14
அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தீர்வுகாண முன்வரவேண்டும் என்று கோரி 32 மகளிர் அமைப்புக்களைச் சேர்ந்த 500 பெண்கள் நேற்று கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

யுத்தத்தை நிறுத்தக் கோரும் சுவரொட்டிகளைத் தாங்கியபடி அவர்கள் கோஷம் எழுப்பினர். (உ-21-3)

## மின்மாற்றி சேதம்

கொழும்பு, மார்ச் 14
மட்டக்களப்பு காத்தான்குடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் டிரான்ஸ்போமர் ஒன்று தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. (உ-7)

இப்பத்திரிகைநியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

சஞ்சீவி

# சஞ்சிகை

14 — 03 — 1998 சஞ்சீவி

யாழ்க்குடாநாடெங்கும் முன்னணியில் திகழ்வது

**மல்லிகா மிக்சர்**

★ பகோடா ★ காராப்பூந்தி ★ முறுக்கு மற்றும்
★ மோர்மிளகாய் ★ ஊறுகாய் ★ வடகம்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**மல்லிகா — மானிப்பாய்**

யாழ். நகரில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**சிறி சக்தி ஸ்ரோர்ஸ்**

இல: 310A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/3079)

## கருத்துக் கலசம்

மயூரா

### போலிகள்

தமிழர் சமூகம் பல வழிகளாலும் நலிவடைந்துள்ளது; பின் தள்ளப்பட்டும் உள்ளது. அதனால் பல ஆக்கப் பணிகளும், சீர்திருத்த முயற்சிகளும் இன்றைய இன்றியமையாதவை ஆகியுள்ளன.

சமூக நலனில் உண்மையான நாட்டம் கொண்டவர்கள் இதனை உணர்கிறார்கள்; தமக்குள் பேசிக்கொள்ளவும் செய்கிறார்கள். ஒரு சிலரின் விடா முயற்சியால் ஆக்கப்பணிகளை நோக்கமாகக் கொண்டு அமைப்புக்கள், சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் அவை தமது இலக்கை நோக்கி நகர்ந்தாலும் நாளடைவில் செயற்பாடுகள் வேறுபடுகின்றன. பதவி அல்லது பணம் நாடுவோர் எப்படியோ உள்ளே ஊடுருவி விடுகிறார்கள். தமது பக்கத்துக்கு சில்லரைச்சேர்த்துச கொண்டு அதிகாரம் செய்வதிலேயே அக்கறை காட்டுகிறார்கள். தங்களை முன்னிலைப்படுத்தவும் பிரசாரப் படுத்தவும் அரசியல்வாதிகளின் உத்திகளை கடைப்பிடிக்கிறார்கள்!

இத்தனைக்கும் தம்மைப் பெரும் தொண்டர்களாகக் காட்டிக்கொள்கிறார்கள். அவ்வாறு பிரதிபலிப்பதற்காக நிறையப் பேசுகிறார்கள். அதன் மூலம் சமூக உயர்வில் நாட்டம் கொண்டவர்கள், பாரோபகாரிகளிடம் பலவகை உதவிகளை தந்திரமாகப் பெறுகிறார்கள்.

ஆனால் சில கால இடைவெளியில் சொல்வதொன்று செய்வது வேறாக மாறுகிறது. ஆரம்ப இலக்கையும், இலட்சியத்தையும் மறந்து சொந்த நலன், பிரசாரம் நாடிய செயல்கள் பெருகுகின்றன.

இத்தகைய போக்குடையவர்கள், போலிகள், எல்லாத் துறைகளிலும் பெருகுகிறார்கள். அதனால் ஆக்க பூர்வமாக, சமூகத்துக்குப் பயனுள்ளதாகப் பணி செய்வோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. சமூகத் தொண்டு என்பது முன்சொன்ன ரகமே நிஜமானது என்ற தன்மை வளரும் ஆபத்தும் உண்டாகிறது.

கூடுவதிலும் பேசுவதிலும் காலம் கழிகிறது. செயற்திறன் செப்புவதற்கென எதுவும் இல்லாமற்போய் விடுகிறது. உண்மையாக, நேர்மையாக, இலட்சியப் பிடிப்புடன் சேவையாற்ற விரும்புவோரையும் போலிகளின் போக்குத் தடுக்கிறது.

இதனால் சமூகத்திற்குத் தேவைப்படும் பல பணிகள் உருப்படியாக, பயனுள்ளதாக நடைபெறும் வாய்ப்பு அருகி வருகிறது. இது தமிழர்களைப் பிடித்த சாபக்கேடாகிவிட்டது.

இந்தச் சாபக்கேட்டை நீக்குவது எப்படி? சமுதாய நலனிலும், மக்கள் மேம்பாட்டிலும் உண்மையான நாட்டம் கொண்டவர்கள், கருமமே கண்ணாக, அமைதியாக உழைப்பவர்கள் சேவையாற்ற முன் வரவேண்டும். அதே வேளை போலிகள் இனங்காணப்பட்டு விரட்டப்பட வேண்டும். இல்லையேல் தமிழர் சமூகம் படுகுழியில் விழுவதைத் தடுக்கமுடியாது போய்விடும்!

# ஏது காதல்?

ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குமிடையே மலருவதாகச் சொல்லப்படும் காதல் என்பதைப் பற்றி இது நாள் வரை எவ்வளவோ எழுதப் பட்டுவிட்டது: எவ்வளவோ சொல்லப்பட்டும் விட்டது.

மனித இனம், காடுகளிலும் மலைகளிலும் விலங்குகளாய் வாழ்ந்துகொண்டிருந்த புராதன பொதுவுடைமைக் காலத்தில் காதல் என்பது எப்படியிருந்திருக்கும் என்பது தெரியவில்லை.


**மார்க்ஸ் மட்டும்தான், 'காதல் என்பது மனிதநேயம்' என்று தெள்ளத் தெளிவாகச் சொன்னார். அதன்படி ஜென்னியுடன் அவர் வாழ்ந்தும் காட்டினார். ஆழ்ந்த மனித நேயத்தின் வெளிப்பாடாக, இருவரிடையே காதல் மலரும்போது வாழ்க்கை அவர்களைப் புரட்டிப் போடுவதில்லை; பிரித்துவிடுவதும் இல்லை.**

ஆனால் இப்போது நிலைமையே வேறு. அது அனைத்துத் தரப்பு மனிதர்களுக்கும் மனுஷிகளுக்குமான கட்டாய பாடமாகிவிட்டது. காதல் புரிகிறவர்கள், காதலைப் புரிந்துகொண்டவர்களாக இருக்கவேண்டும் எனும் அவசியம் அற்றுப்போய், தான் புரிவதுதான் காதல். தான் புரிந்து கொண்டதுதான் காதல் என்று பறைசாற்றும் போக்கு அதிகமாகக் காணப்படுகிறது.

''நான் உன்னை உயிருக்குயிராகக் காதலிக்கிறேன்'' என்கிற — எப்போதோ — யாருக்கோ — எழுதப்பட்ட வசனம்தான் தற்போதைய தமிழ் காதல் உலகின் தாரக மந்திரமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. தாம் கொண்டிருக்கும் காதல் மட்டும் புனிதமானது. அடுத்தவரின் காதலை விடவும், உயர்ந்தது, எனும் எண்ணம் அனைத்துக் காதலர்களின் மனத்திலும் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருக்கிறது.


வாழ்க்கையைப் பற்றியும், நடைமுறை யதார்த்தங்களைப் பற்றியும் இரு மனங்களின் மனோபாவம் பற்றியும் கவலைப்படாமல், வெறும் கற்பனைகளையும் கனவுகளையும் மட்டுமே பிடித்துக் கொண்டு தொங்குவதால் இன்றைய காதலர்கள் பரவலாகத் தோல்வியைச் சந்திக்கிறார்கள். வாழ்வின் ஓர் அங்கமாக மட்டுமே காதலைப் புரிந்துகொண்டவர்கள் அதில் வெற்றியடைகிறார்கள். வாழ்க்கை என்பதே நூறு சதவிகிதம் காதல் மயமானதுதான் என்று நம்பியவர்கள் அதில் தோல்வியடைகின்றார்கள்.

காதல் என்பது நெருங்கி வரும்போது முகமூடிகளைப் பரஸ்பரம் கிழித்துக் கொள்ளும் தன்மை கொண்டதாகும். அதனால்தான், தனித்தனி வீடுகளில் இனிய காதலர்களாக வாழ்ந்தவர்கள், ஒரே வீட்டில் தம்பதிகளாகச் சேரும்போது தாறுமாறாகித் தகராறு செய்து கொண்டு பிரிவதை நாம் நிறையவே காணமுடிகிறது. உலகப் புகழ் பெற்ற எத்தனையோ காதல் ஜோடிகள் 'பிரிவதற்காகவே' திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள். காவியக் காதலர்களான அம்பிகாபதியும் அமராவதியும் திருமணம் செய்து கொண்டிருந்தால் நிச்சயம் பிரிந்திருப்பார்கள் என்று 'விவாகரத்து' பெற்றவர்கள் வாதிடுவதுண்டு.



காதலில் தெய்வீகக்காதல், புனிதமான காதல் என்றெல்லாம் ஏதுமில்லை. எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக்கியே திரும்பியிருக்கின்றன என்று சொல்லப்படுவது போலவே எல்லாக் காதல்களும் பாலுறவையும், பால் ஈர்ப்பையுமே மையக் கருவாகக் கொண்டு பல்வேறு முகமூடிகளுடன் பவனிவருகின்றன. அதில் வெற்றி கிட்டிய பிறகு அதன் போக்கில் ஒரு மந்தமும், சலிப்பும் மேலிட்டு விடுகிறது. நினைக்கும்போது இனித்த காதல், கிடைக்கும்போது கசந்து விடுகிறது.

காதல் தோல்வி, காதல் துரோகம், கொலை, தற்கொலை என்பன போன்ற நிலைகளில் காதல் உலகில் நிலவுகிற பல்வேறு குளறுபடிகளுக்கும் காரணம் அது இங்கே தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதுதான். தூரத்தில் இருந்து கண்ணோடுகண் நோக்கும் போதே மலர்ந்துவிடுகிற காதல் நெருங்கிப் பழகும் போது பரஸ்பரம் முகமூடி



யைக் கிழித்துக்கொண்டு கோரமாக வெளிப்பட்டுச் செயலாற்றுகிறது.

ஆயிரக்கணக்கான திரைப் படங்களாலும், பல்லாயிரக் கணக்கான திரைப்படப் பாடல்களாலும், நாடகங்களாலும், கவிதைகளாலும் காதலைப் பற்றிய கணிப்புகள் இங்கே தாறுமாறாகப் பரப்பிவிடப்பட்டிருக்கின்றன. அதிலும் இன்றைய பெரும்பாலான திரைப்படங்கள் காதலையே முதுகெலும்பாகக் கொண்டு நடமாடிக் கொண்டிருக்கின்றன.

**-ஜெயபாஸ்கரன்-**

திரைப்படத் தத்துவங்கள் போலியானவை; பொய்யானவை. தமிழ்த் திரைப்படங்களில், ஆண் — பெண் இருவரிடையே காதல் மலருவதற்கான காரணங்கள் மிகவும் அற்பமாகவும் அவலமாகவும் காட்டப்படுகின்றன. நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு தான் காதலிக்கும் பெண்ணைப் பாட்டுப் பாடி கேலி செய்வது முதற் கொண்டு அவளின் தொப்புளில் 'ஓம்லெட்' போடுவது வரை ஏராளமான அசிங்கங்கள் காதலின் வெளிப்பாடாகக் காட்டப்படுகிறது.

'ஒருத்தனை மனசுல நெனச்சிட்டு நான் இன்னொருத்தன் கூட எப்படி வாழ முடியும்?' என்பதுதான் திரைப்படக் காதலிகளின் கவலை தோய்ந்த காதல் வசனமாக இருக்கிறது: அந்தக் கவலையில் துளியளவும் உண்மையில்லை என்பது தான் நடைமுறை வாழ்வில் நாம் காணும் காட்சிகளாக இருக்கின்றன. தமிழ்த் திரைப்படங்களின் வாயிலாக இதுதான் காதல் என்று எதையெதையோ கூவி விற்கிறார்கள்.

சாதி, மதம், இனம், மொழி, பணம் போன்ற எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது காதல் என்ற தத்துவம் சொல்லி காதலர்களைச் சேர்த்து வைக்கிற வேலையைக் கால காலமாகச் செய்து வருகிற இவர்கள், இவையெல்லாம் உங்கள் வாழ்வில்குறுக்கிடும்போதும், உங்களிடமிருந்தே முளைக்கும் போதும், எப்படிச் சமாளிக்கப்போகிறீர்கள்? என்று கேள்வி கேட்பதில்லை,

**காதல் என்பது நெருங்கி வரும்போது முகமூடிகளை பரஸ்பரம் கிழித்துக் கொள்ளும் தன்மை உடையது. நினைக்கும்போது இனித்த காதல் கிடைக்கும்போது கசந்து விடுகிறது.**

இப்படியெல்லாம் சமாளியுங்கள் என்று பதில் சொல்வதுமில்லை. ஏனெனில் இத்தகைய விவாதங்கள் வியாபாரத்துக்கு உகந்தவையல்ல என்கிற முடிவு இங்கே ஆழமாக வேரூன்றியிருக்கிறது. விரசத்தில் விழுகிற கதாநாயகியின் மார்புகள்தான் இங்கே காண்பதற்கினிய காதல் காட்சிகளாக அடையாளம் காட்டப்படு வருகிறது.

'காதல் என்பது நெருப்பு', 'காதல் என்பது இருட்டு' என்பன போன்று, காதலைப் பற்றி எத்தனையோ பேர் ஏதேதோ புலம்பினார்கள். ஆனால் மார்க்ஸ் மட்டும் தான், 'காதல் என்பது மனித நேயம்' என்று தெள்ளத் தெளிவாகச் சொன்னார். அதன்படி ஜென்னியுடன் அவர் வாழ்ந்தும் காட்டினார்.

ஆழ்ந்த மனித நேயத்தின் வெளிப்பாடாக, இருவரிடையே காதல் மலரும்போது வாழ்க்கை அவர்களைப் புரட்டிப் போடுவதில்லை. பிரித்து விடுவதுமில்லை.

நன்றி:- தினமணி ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு முயற்சி அரங்கில்

# தொடர்ச்சியாகச் சோகக் காட்சிதானா?

## உள்ளூராட்சி தேர்தலுக்கு முன் உஷாரும் பின்னர் தளர்வும் தரும் அர்த்தங்கள்

நாடகத்தில் அல்லது திரைப்படத்தில் காட்சிகள் மாறுவது உண்டு. பலவகை உணர்வுகளை, உணர்ச்சிகளை உண்டாக்கும் விதத்தில் காட்சிகளை கதாசிரியர்களும், இயக்குநர்களும் அமைத்துக் கொள்வார்கள். நாடகத்தின் அல்லது திரைப்படத்தின் கதை என்ன என்பதை முடிவிலேயே அறிந்து கொள்ளலாம்!

ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி என்ற நாடகத்தில் காட்சி மாறாமலேயே ஒன்றே தொடர்ந்து கொண்டிருக்கிறது!

நாட்டையும், மக்களையும் அழித்து கொண்டிருக்கும் போருக்குக் காரணமான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி முன்னெடுக்கப்படுவதற்குப் பதிலாக பின் தள்ளப்பட்டு வரும் சோகக் காட்சியே தொடர்கிறது. அந்தக் காட்சியின் அங்கங்கள் மாறுகின்றனவே அன்றி காட்சி மாறுவதாக இல்லை.

தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆண்ட பரம்பரையினர். மீண்டும் தம்மை ஆள விரும்புகிறார்கள்.

தமது வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்று முடிவு செய்யும் உரிமை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உண்டு. அது அவரவரின் பிறப்புரிமை. எவரும் வழங்கித் தான் சம்பந்தப்பட்டவர் அதனை அனுபவிக்க வேண்டும் என்ற நியதி இல்லை; நிர்ப்பந்தமும் செய்யமுடியாது.

அதே போலவே தமிழர்களும் தங்களைத் தாமே ஆளும் உரிமையை பிறர் எவரும் வழங்கினால் தான் அவர்கள் அதற்கு உரித்துடையவர்கள் என்பதல்ல.

சிங்கள மக்களுடன் சேர்ந்து சில காலம் அரசு நடத்தியதால் அவர்களின் இணக்கத்துடன் தமது ஆளும் உரிமையை மீள்விக்க வேண்டிய நிலை தமிழர்களுக்கு உருவாகி இருக்கிறது அவ்வளவுதான்.

தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து ஆட்சி நடத்தலாம் என்ற நம்பிக்கையுடனேயே ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்குத் தமிழர்கள் பாடுபட்டார்கள். சில காலம் சேர்ந்து ஆளவும் முடிந்தது. 1948 ஆம் ஆண்டின் பின்னர் எட்டு வருடங்கள் ஒருவாறு அத்தகைய ஆட்சி ஓடியது.

தமிழர்கள் சம பிரஜைகளாக இந்த நாட்டில் வாழ முடியாது என்று 1956 ஆம் ஆண்டில் சிங்களத் தலைவர்கள் தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் சமிக்ஞை காட்டினார்கள்.

அன்றிலிருந்து தம்மைத் தாமே ஆளும் நிலையை மீண்டும் எய்தவேண்டும் என்ற முடிவுக்குத் தமிழர்கள் வந்தார்கள். 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் வாக்குகள் மூலம் தமது அந்த முடிவைத் தமிழ் மக்கள் வெளிப்படையாகத் தெரியப்படுத்தினார்கள். பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி—செல்வா ஒப்பந்தம் ஆகியன மூலமான சேர்ந்து ஆளும் முயற்சிகள் தோல்வி கண்ட பின்னரே தமிழ் மக்கள் தமக்கு ஒரு தனி அரசு வேண்டும் என்ற முடிவை (1977 இல்) வெளிப்படுத்தினார்கள்.

அதன் பின்னர் —

தமிழர்களின் இந்த முடிவைச் செயற்படுத்த சிங்கள மக்கள் எந்தளவில், எந்த வகையில் ஒத்துழைப்பார்கள் என்பது குறித்து அவர்களின் தலைவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் எதுவும் — திட்டம் எதுவும் — வரவில்லை.

தமிழர்களின் தனிநாட்டு அபிலாசைக்கு மாற்றீடாக சிங்களத் தரப்பு வேறு எந்த வகைத் திட்டத்துக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் தரும் என்பது குறித்தும் இது வரை திட்டவட்டமான நிலைப்பாடு தெரிவிக்கப்படவில்லை.

சந்திரிகா அரசு பதவியேற்றதும் மாற்றுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து தமிழர்களின் உரிமைகளை வழங்கப் போவதாகக் கூறியது. அது தான் இப்போதைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி.

அந்த முயற்சி ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல ஒரே சோகக் காட்சியாக நீண்டு கொண்டிருக்கிறது.

அரசின்யோசனையை அடிப்படையாக வைத்து தீர்வு ஒன்றுக்கு மாற்றுயோசனை வழங்குவதாகக் கூறிக் கொண்டு, மத்தியில் அதிகாரங்களைக் குவிக்கும் முறையை முன்வைத்திருப்பது ஏமாற்று முயற்சியே அன்றி வேறல்ல.

தாங்கள் பதவியில் இருந்த போது நடைமுறைக்குக் கொண்டுவந்த பதின் மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தைக் கூட மறந்தவர்களாக ஐக்கிய தேசியக் கட்சியினர் இவ்வாறு நடந்து கொள்கின்றனர்.

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறியதுபோன்று ஐ. தே. க. மாற்றுயோசனை வேடிக்கையானதாகவே உள்ளது. அரசின்தீர்வுயோசனையை திசை திருப்பும் முயற்சியாகவே இதனைப் பார்க்க முடிகிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி இவ்

### உள்ளும் புறமும்

குறுமுனி

ஒன்றை வடிவமைக்க ஒத்துழைப்புத் தருவதாகக் கூறி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி தான் மாற்று யோசனை தரப்போவதாகக் கூறியது.

அரசின் யோசனையை ஆதரித்து வாக்களிக்கமுடியாது என்று ஐ தே. க. கோடி காட்டியது. அப்படியானால், உங்கள் மாற்று யோசனையைத் தாருங்கள் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஒரே திட்டமாகத் தமது மாற்று யோசனையைத் தெரிவிக்க விரும்பாத அல்லது அவ்வாறு செய்ய இயலாத ஐ. தே. கட்சியினர், கடையில் சிட்டை எழுதுவது போலத் துண்டு துண்டாக யோசனைகளை வெளியிட்டு வருகிறார்கள்.

ஏற்கனவே இரண்டு ''துண்டுகள்'' வெளியிடப்பட்டு விட்டன. எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா வெளிநாடு சென்று திரும்பிய பின்னரே இறுதிப் பகுதி— மூன்றாவது பகுதி வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி இது வரை வெளியிட்ட இரண்டு பகுதிகளும் — மாற்று யோசனைக்கான துண்டுகளும்— தமிழர்கள் தங்கள் சொந்தப் பிரதேசததில், தம்மைத் தாமே ஆளும் பூரண தன்னாட்சி உரிமைக்குத் துளி கூட வசதி செய்யப் படவில்லை. மாறாக மத்தியில் ஆட்சி அதிகாரங்களைக் குவிக்கும் வழிமுறைகளே முன் வைக்கப்பட்டுள்ளன.

மத்தியில் எல்லாச் சமூகங்களிடமும் ஆட்சி அதிகாரம் பகிரப்படுவது என்பது ஆரோக்கியமான ஒன்று தான். 1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்படி ஒரு நடைமுறைக்கு வழி செய்திருப்பின் அது பயன் தந்திருக்கலாம்.

ஆனால் அதிகாரத்தை பரவல் செய்யும் திட்டம் வாறு நடந்து கொள்வதால் அதனிடமிருந்து ஆக்கபூர்வமான பங்களிப்புக் கிடைக்கும் என்றுஎதிர்பார்க்க முடியவில்லை.

அதிகாரப் பகிர்வின் உயிர் நாடியான பிரதான அம்சங்கள் குறித்து வெளிவரவுள்ள ஐ. தே. கவின் மாற்று யோசனையின் மூன்றாவது பகுதி, அரசு முன்வைத்துள்ள திட்டத்தையும் கொட்டிக் குழப்புவதாகவே அமையும் என்பதில் சந்தேகம் இருக்க நியாயமில்லை.

ஆகையால் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பை, ஆதாரமாகப் பெற்று தனது தீர்வு யோசனையை நிறைவேற்ற முடியும் என்ற எதிர்பார்ப்பை அரசாங்கம் இப்போதே கைவிட்டுவிடுவதே நல்லது.

ஒரு துணிச்சலான முயற்சியாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதியும் அவரது அமைச்சர்களும் கூறும் புரட்சி வழியைத் தான் கையாள வேண்டும்!

ஆனால் அவ்வாறு செய்யும் போது, உத்தேச தீர்வு தமிழர்களின் தன்னாட்சி — தனி அரசு — அபிலாசைகளைப் பூரணமாக நிறைவேற்றுவதாக இருப்பதே உகந்தது.

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள தீர்வு யோசனை தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஓர் ஆக்க பூர்வமான மாற்றீடாக இல்லை. முக்கிய விடயங்கள் முடிவு எடுக்கப் படாதவையாகவே தொக்கு நிற்கின்றன.

தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உண்டு; அவர்களின் உரிமைகளைப் பறிக்கக் கூடாது; என்ற அடிப்படையில் அவர்கள் ஒரு தேசிய இனம் என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.

இந்த நெருக்கடியான [illegible] யதார்த்தமாக நினைத்துச் செயற்படுவது புத்திசாலித்தனமல்ல. நடைமுறை ரீதியான சாத்தியங்களையும் உய்த்து உணர்வது அவசியம்.

தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொண்டு வரவேண்டும் என்பதில் அரசுக்கு உண்மையான அக்கறையும், துணிச்சலும் இருந்தால் —

திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில், அவற்றை ஏற்று அங்கீகரித்து தனது முயற்சியை செயற்படுத்துவதே நல்லது.

இந்தக் கோட்பாட்டை தமிழர் தரப்பு ஏற்கனவே ஒரு மனதாக அங்கீகரித்து, முன் வைத்தது என்பதனை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் பேச முடியாது. அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என்று வீம்புத் தனத்துடன் நிராகரிக்காது அதனைப் பரிசீலனை செய்ய முன்வர வேண்டும்.

நாடு பிளவுபடாமல் இருக்க வேண்டுமெனில் அரசு தனது அணுகு முறையை மாற்ற வேண்டும்.

தமிழர்கள் இன்னொரு சாராரால் தாம் அடக்கு முறைக்கு ஆட்படுவதை விரும்பவில்லை. தமக்குரிய ஆட்சி அதிகாரத்தை அனுபவிக்க விரும்புகிறார்கள். சமமான பிரஜைகளாக கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும் வாழ விரும்புகின்றார்கள்.

இதனை மனதிலிருத்தி அரசு தனது அணுகுமுறையை மாற்ற வேண்டும். மாற்றுமா?

★ ★ ★

யாழ்ப்பாண மாநகரத்தின் புதிய முதல்வர் கடந்த புதன் கிழமை முற்பகல் சுப வேளையில் பதவி ஏற்றார். பதினைந்து வருட இடைவெளியின் பின்னர் முதல்வர் ஆசனத்தில் ஒருவர் அமர்ந்துள்ளார். அந்த ஆசனத்தில் அமர்ந்த முதலாவது பெண்மணி சரோஜினிதேவி யோகேஸ்வரன். (இதற்கு முதல் உதவி மேயராக பெண்மணி ஒருவர் பதவி வகித்துள்ளார்.)

யாழ்ப்பாண மாநகர சபையின் மொத்த உறுப்பினர்கள் 23 பேர். அவர்களில் (முதல்வரையும் சேர்த்து.) ஒன்பது பேர்களே பதவி ஏற்றுள்ளனர். ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் உறுப்பினர் ஒருவரும் இவர்களில் அடங்குவார்.

மிகுதியான உறுப்பினர்கள் எப்போது பதவி ஏற்பர் என்பது குறித்து திகதி ரீதியான அறிவிப்பு எதுவும் இல்லை. அதுவரை முதல்வரும் எட்டு உறுப்பினர்களும் மாநகர சபைக்கு வந்து போவார்கள்; அவ்வளவு தான்!

உத்தியோக பூர்வமாகச் சபையின் கூட்டத்தை நடத்தி தீர்மானங்களை நிறைவேற்றி புதிய திட்டங்கள் எதனையும் செயற்படுத்தும் வாய்ப்பு இல்லை.

தேர்தல் காலத்தில்நானோ நீயோ என்று போட்டா போட்டியிட்டு, பிரசாரத்துக்குப் பெரும் பணம் செலவிட்டு, அரசாங்கம் தனது ஆசையை — நோக்கத்தை நிறைவேற்ற உதவியவர்கள்; இப்போது தளர்ந்துபோய் நிற்கிறார்கள்.

பதவி ஏற்காதவர்கள் தரப்பில் ஒவ்வொரு காரணம் கூறப்பட்டாலும், ஸ்ரீமான் பொதுஜனம் தனக்கே உரிய கண்ணுடன் நோக்குகிறார்; விமர்சனமும் செய்கிறார்.

எந்த விவகாரத்திலும், விடயத்திலும் பிளவுபட்டு, பிரிந்து நிற்பது தமிழர்களின் ''அரும் பெரும்'' குணவியல்பு. அந்தக் குணம் இங்கும் குடிகொள்ளத் தயங்கவில்லை என்பதே ஸ்ரீமான் பொதுஜனத்தின் கணிக்கு!

ஜனவரி 29 ஆம் திகதி மாநகரசபைக்குத் தேர்தல் நடைபெற்றது. சுமார் ஒன்றரை மாதங்களின் பின்னரே முதல்வர், உறுப்பினர் பதவியேற்புநடைபெற்றிருக்கிறது.

கட்சிகள் தனது பட்டியல்களில் புதியவர்களை, மாநகரசபை வட்டாரங்களை ஓரளவேனும் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளும் இந்தத் தாமதத்திற்குக் காரணம்.

அந்தத் தாமதத்தின் பின்னரும் மேலும் நீடிக்கும் தளர்வு, பிரிவு — பிளவுகளின் வெளிப்பாடே.

உள்ளூராட்சிச் சபைகளை இயக்கப் போதிய நிதி இல்லை. இதுவரை வழங்கப்படாத ஒதுக்கீடும் சேர்த்துத் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதுதான்.

இப்படிஒருகோரிக்கையை— யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்ற ஜனாதிபதியிடம் முன் வைத்திருக்கலாம்.

நிதி ஒதுக்கப்பட்ட பின்னரே தேர்தலில் போட்டியிடுவோம் என்று அடித்துக் கூறியிருக்கலாம். முன்னர் என்றால், ஜனாதிபதி எங்கிருந்து கண்டுபிடித்தாவது பணத்தைக் கொண்டு வந்து குவித்திருப்பார். இப்போது... அவரின் வாய்மொழியை நம்பிக்கொண்டிருக்க வேண்டியது தான்!

தேர்தல் நடத்த உகந்த நேரமல்ல; அதில் போட்டியிடமாட்டோம் என்று ஒரே குரலில் உறுக்கிக் கூறமுடியாதிருந்த தமிழ்க்கட்சிகள், குடாநாட்டு மக்கள் மீது அது திணிக்கப்பட்ட போதிலும், உள்ளுக்குள்ளே விழுந்தடித்துக்கொண்டு களத்தில் குதித்தவர்கள், இப்போது ஏதோ காரணங்களைக் கூறித் தளர்ந்து போயுள்ளனரே பின்னடிக்கின்றனரே என்பது ஸ்ரீமான் பொது ஜனத்தின் இன்னொரு கவலை.

தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காகவும், அவர்களின் இன்னல்களைப் போக்குவதற்காகவும் கைகோர்த்துச் செயற்பட முடியாத தமிழ்த் தலைவர்கள்—

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் சிறப்பாக நடக்கிறது; ஜனநாயகம் திரும்பி விட்டது; எல்லாம் ''பலே ஜோர்'' என்று வெளி உலகத்துக்குக் காட்டவேண்டும்; அவ்வாறு காட்டி யாழ்ப்பாணத்தைப் புனர்நிர்மாணம் செய்வதற்கென்று பணம் வாங்குவதற்கு அத்திவாரம் போட வேண்டும்; என்ற சந்திரிகாவின் நோக்கத்தை நிறைவேற்ற அவருக்கு ஆதரவாக நடந்து ஒற்றுமையைப் பிரதிபலித்து விட்டார்கள்.

இது அரசியல் களத்தில் ஓர் அபூர்வ சாதனைதான் என்று கெக்கட்டம் போட்டுச் சிரிக்கிறார் ஸ்ரீமான் பொதுஜனம்.

தேர்தலுக்கு முந்திய உஷாரும், அதற்குப் பிந்திய தளர்வும் ஒன்றுக்கு மற்றது முரணாகவல்லவா தெரிகின்றன! அது ஏனோ! அர்த்தம்தான் என்னவோ?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்று நிற்கும் கவிதைகளில் உணர்ச்சிகள்

கடவுளுக்கு வரைவிலக்கணம் கூறுவதும் கவிதைக்கு வரைவிலக்கணம் கூறுவதும் நிறைவு பெறாத முயற்சிகள். ஆயினும் விமர்சகர்கள் தமது தேவை குறித்து கவிதையின் தரம் காண நான்கு அம்சங்களை எதிர்பார்க்கிறார்கள்.

★ கருத்து
★ கற்பனை
★ உணர்ச்சி
★ நடை அல்லது வடிவம்

என்பன அவை.

### கருத்து

கருத்தாழம் அற்ற எதுவும் இலக்கியம் ஆகாது என்பது தமிழ்ச் சான்றோர் கருத்து. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயன் என்பது நன்னூல். ஆனால் கருத்து மட்டும் இலக்கியம் ஆகிவிடவும் முடியாது. கருத்துடன் உணர்ச்சி, கற்பனை, இனிய வடிவம் அனைத்தும் சேர்ந்து இன்பம் பயக்கும் போதே அது இலக்கியம் ஆகிறது.

### உணர்ச்சி

கவிதை படைத்தவன் படைக்கும் போது பெற்ற உணர்ச்சியை கவிதை படிப்பவன் படிக்கும் போது பெறுவானானால் அது கவிதைக்கு வெற்றியாகும்.

சங்கட் புலவர்களுள் கபிலர் தனித்துவம் மிக்கவர். அவர் காலத்துப் புலவர்களாலும் பின்வந்த புலவர்களாலும் பாராட்டப் பெற்றவர். அவருடைய கவிதை உயர்ந்திருப்பது போலவே அவருடைய உள்ளமும் உயர்ந்தது.

பாரியின் கொடை கபிலரைப் பெரிதும் கவர்ந்தது. பாரிக்கு நண்பரான கபிலர். சேர, சோழ, பாண்டியர் ஆகிய முப்பெருவேந்தரும் இருப்பவும், பாரியுடனேயே நீண்ட காலம் வாழ்ந்தார்.

பாரி இறந்தபோது பாரியின் பிரிவைத் தாங்க மாட்டாது வடக்கிருந்து உயிர் துறந்தார். அத்தகைய கபிலரின் பாடல்களில் விமர்சகர்கள் எதிர்பார்க்கும் நான்கு அம்சங்களும் நிறைந்திருக்கும். நான்கு அம்சத்தில் ஒன்றாகிய உணர்ச்சிச் சிறப்பை ஒரு பாடலிற் பார்ப்போம்.

### போரினால் இடம் பெயர்தல்


போரினால் இடம் பெயர்ந்த அனுபவம் நமக்கு உண்டு. இடம் பெயரும் போது பலரும் கண்ணீர் சிந்தியவாறு இடம் பெயர்வதைக் கண்டிருக்கிறோம். போர்ச்சத்தம் ஆரம்பமானதும் அவசர அவசரமாகப் புறப்படுவார்கள். கொண்டு போகக்கூடிய பொருள்களை அவசரமாக எடுப்பார்கள். தாங்கள் அன்பாக வளர்த்த ஆடு, மாடுகளைக் கலங்கிய கண்ணோடு பார்ப்பார்கள். தங்களைத் தொடர முயற்சி செய்யும் நாயைப் பார்ப்பார்கள். கதவுகள் பூட்டப்பட்டுள்ளனவோ என்று மீண்டும் மீண்டும் பார்ப்பார்கள். வீட்டைப் பிரிய மனமின்றிப் பிரிய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானவராகிக் கண்ணுக் கெட்டும் தூரம் வரை வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு செல்வர்.

இந்த அனுபவம் — இந்த உணர்ச்சி — கபிலருக்கும் ஏற்பட்டது. அவர் கவிஞராதலால் அது கவிதையாக வந்தது.

மூவேந்தரின் சூழ்ச்சியால் பாரி இறந்து விட்டான். பாரியை உயிரென மதித்த கபிலரும் தம் உயிரைவிட ஆயத்தமானார். ஆனால் அவர் பாரிக்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடன் ஒன்று இருந்தது. பாரியின் புதல்வியர் இவருக்கும் ஆதரவாக இருந்து தகுந்த அரசரை அவர்களுக்கு மணாளர் ஆக்கவேண்டும் என்பதே அது!

பாரியின் புதல்வியர் இருவரையும் கூட்டிக் கொண்டு பறம்பு மலையைவிட்டுப்புறப்பட்டார் கபிலர். இன்று போரினால் இடம்பெயர்வது போலவே அவர்களும் அன்று போரினால் இடம் பெயர்ந்தார்கள். அவர்களின் கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

அவர்களும் கையில்எடுக்கக் கூடிய பொருள்களை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். கண்ணுக்கெட்டிய தூரம்வரை தாம் மகிழ்ந்து வாழ்ந்த இடத்தைப் பார்த்துப் பார்த்துச் சென்றனர். இருந்த இடம் மறைந்துபோக இருந்த நாடாகிய பறம்பு மலை தெரிந்தது. பறம்பு மலையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு சென்றனர்.



கபிலருக்கு ஏற்பட்ட துன்ப உணர்ச்சி பாடலாகவந்தது.

இருகை எடுத்துப் பறம்பு மலையைக் கும்பிட்டார். பறம்பு மலையைப் பிரிவதை நினைக்க நினைக்க அவருடைய கண்கள் கண்ணீர் சிந்தின. கபிலரின் உள்ளம் ஒரு குழந்தையின் உள்ளமாக மாறியது. குழந்தை உள்ளத்தில்தான் சிறந்த கவிதை பிறக்கும்.

பறம்பு மலையோடு பேசத் தொடங்கி விட்டார். மலையோடு அல்லது மரத்தோடு பேசுவது குழந்தையின் இயல்பு. அறிவு நிறைந்த சான்றோரான இக் கபிலர் குழந்தை உள்ளத்தோடு மலையைப் பார்த்தார்.

''பறம்புமலையே! எமக்கு விருப்பத்தைத் தருகின்ற சாடி நிறைந்த மதுவினைத் தந்தாய். சுவை பொருந்திய ஆட்டு இறைச்சியைத் தந்தாய். வயிறார உண்ணுதற்கு நல்ல சோற்றினைத் தந்தாய். இவைமட்டுமா? பெரிய வளம் என்று சொல்லக் கூடிய அனைத்தையும் தந்தாய். உன்னை நாம் மனமின்றிப் பிரிகின்றோம். எம்மோடு இவ்வளவு காலமும் நீ நட்பாக இருந்தாய். நட்பாக இருந்த உன்னைக் கண்ணீருடன் பிரிகிறோம். எமக்கு இவ்வளவு நன்மைகளையும் செய்த உன்னை வாழ்த்துகிறோம்''—என்றார்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் கபிலரால் பாடப் பெற்ற இப்பாடல் கபிலர் அன்று அடைந்த உணர்ச்சியை — அனுபவத்தை இன்றும் நமக்குத் தருகிறது!. போரினால் இடம் பெயர்ந்தவர்களைக் கண்டோருக்கும், இடம் பெயர்ந்தோருக்கும் கபிலரின் கண்ணீர்க் கவிதையை விளங்கிக்கொள்வது மிகச் சுலபமானதாகும்.

''பாரி மாய்ந்தெனக்
கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந்
தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ
பெரும் பெயர்ப் பறம்பே''

### காதலர் உணர்ச்சி

அன்பு எத்தகையது என்று சொல்வது சிரமமான ஒன்று. ஆயினும் தலைவனிடத்துத் தனக்கும் தன்னிடத்துத் தலைவனுக்கும் உள்ள அன்பு —காதல்—நட்பு எத்தகையது என்று கூறுகிறாள் தலைவி ஒருத்தி.

நான் தலைவனிடம் கொண்டுள்ள நட்பு நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது; கடலினும் ஆழமானது என்கிறாள் தலைவி.

நிலத்தினும் பெரிதே
வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள
வின்றேசாரல்
கருங் கோற்குறிஞ்சிப்
பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும்
நாடனொடு நட்பே.

இப்பாடலின் பொருள் மலைச்சாரலிடத்து குறிஞ்சிப் பூவின் தேன் கொண்டு வண்டுகள் கூடு கட்டும் நாட்டையுடையவனது நட்பு அகலத்தால் நிலவுலகத்திலும் பெரிது; உயரத்தால் வானிலும் உயர்ந்தது; ஆழத்தால் கடலினும் ஆழமானது என்கிறாள்.

நான்கு வரிக்குள் ஒரு பெண்ணுள்ளத்தின் அன்புப் பெருக்கைக் கூற எடுத்த முயற்சியே இக்குறுந்தொகைப் பாடல். இத்தகைய அன்புள்ளம் கொண்ட பெண் தன் தலைவனை வரம் கேட்டால் என்ன வரம்கேட்பாள்?

'என் மேனி முழுவதுக்கும் தங்கத்தால் ஆபரணம் செய்து நிறைத்து விடுவாயா என்று கேட்பாளா?

உலகத்தில் உள்ள திறம் பட்டுச் சேலைகள் அனைத்தையும் கொண்டு வந்து பெட்டகத்துள் வைப்பாயா என்று கேட்பாளா?

பெரும் நிலப்பரப்பை என் பெயருக்கு எழுதிவை என்று கேட்பாளா?

அப்படி எல்லாம் கேட்கவில்லை.

அப்படியானால் என்ன கேட்டாள்?

''தலைவனே! இப்பிறப்பு நீங்கி மறுபிறப்பு எடுக்கும் போதும் நீ என் காதற் கணவனாக வேண்டும் நானே உன் மனம் விரும்பும் காதல் மனைவியாக வேண்டும் —

(XI ஆம் பக்கம் பார்க்க)


**- புலவர் ம. பார்வதிநாதசிவம் -**

# பறப்பு முயற்சி

II — ஒரு தகவல் தொடர்

1783 இல் ஜேசப் மொன்ட் கோஃபர் என்ற இந்தக் காகித வியாபாரி தனது சகோதரருடன் இணைந்து சில்க்பை ஒன்றைத் தயாரித்து வாய்ப்பகுதியை நெருப்புக்குண்டத்தின் மேல் பிடித்த போது பைக்குள் எரிவாயு நிரம்பியதோடு இருவரையும் வியப்பில் ஆழ்த்தி பை சுமார் 25 அடி உயரம் மேலெழுந்து பறந்தது. பற்பல அளவுகளிலும் இவ்வாறு செய்து வெற்றிகண்ட இருவரும், 1783 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் திகதி 30 மீற்றர் சுற்றளவுடைய பலூன் ஒன்றை வடிவமைத்து, பொதுமக்களின் முன்னிலையில் பிரான்ஸின் அனோன் என்ற இடத்தில் பறக்க விட்டனர். பின்னாளில் பறக்க முயன்ற பல முயற்சிகளின் முதலாவது படியாக அமைந்த இந்த பலூனின் முயற்சி மேலும் வளர்ந்தது. பேரரசன் 16 ஆம் லூயியின் முன், செம்மறியாடு, சேவல், வாத்து ஆகிய மனிதன் அல்லாத பயணிகளுடன் பறந்த பலூன் பயணம் வெற்றிகரமாக அமைந்ததையிட்டு மன்னன் மகிழ்ந்தான். 1783 ஒகஸ்ட் மாதத்திலே மரணதண்டனை பெற்ற இரு கைதிகளை பலூனில் ஏற்றி பறக்கவிட முனைந்த மன்னனின் முயற்சிக்கு பிளடியர் டீரோசியர் என்ற பேராசிரியர் எதிர்புத் தெரிவித்தார். அந்த பலூனில் தான் பறக்கப் போவதாக கூறியதோடு இரு கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வாங்கிக் கொடுத்தார் அவர்.

15 — 10 — 1783 இலே கயிற்றுடன் தரையில் இணைக்கப்பட்ட பலூனில் 26 மீற்றர் மேலே பறந்தார். அதிக உயரம் பறக்க முடியாத காரணத்தால் பேராசிரியருக்கு இம் முயற்சி திருப்தியளிக்கவில்லை. அதே ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி ரொசியர் டீ அட்லாண்டஸ் என்பவருடன் 500 அடி உயரத்தில் மூன்றரை மைல் தூரம் 25 நிமிடநேரம் பறந்தார் அவர். முதலாவது மனித பலூன் பயணமாக அமைந்து இதுவே.



கிளைடர் பறப்பு முயற்சி

1783 ஆம் ஆண்டிலேயே சார்லஸ் என்ற அறிவியலறிஞரினால் முதலாவது ஐதரசன் நிரப்பப்பட்ட பலூன் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த பலூன் 3000 அடி உயரத்தில் 11 மைல் தூரம் பறந்தது. 1784 ஆம் ஆண்டு ஜூன் நான்காம் நாள் பிரான்ஸின் ஒபாரா பாடகியான 'திபிலி' என்பவர் முதன்முதலில் பலூன் பயணம் மேற்கொண்ட பெண் என்ற பெருமையைப் பெற்றார்.

கண்டுபிடித்த நாட்டினரே பலூனை முதன் முதலாக 1794 இல் இராணுவ தேவைகளுக்காகப் பயன்படுத்தினர். பலூன் ஆரம்ப பறப்புச் சின்னமாயினும் காற்றின் திசையிலேயே மட்டும் அசைதல், பெரிய உருவம், தீவிபத்து போன்ற காரணங்களினால் அதனைப் பயன்படுத்தும் அவா குறைந்தது. புதிய சாதனமொன்றை கண்டுபிடிக்கும் அவா ஏற்பட்டது.

தொகுப்பு: ம. அருள்குமரன்
(யாழ். இந்துக்கல்லூரி)


பலூனிற்கு அடுத்தபடியாக கண்டுபிடிக்கப்பட்டது கிளைடர் ஆகும். சாதாரணமாக வானில் பறக்க விடப்படுகின்ற பட்டங்களின் தத்துவமே கிளைடர் முறையிலும் பயன்படுத்தப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜோர்ஜ் கயலே என்று ஆங்கிலேயர் கிளைடர்கள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார். 1784 இல் முதலாவது பலூன் பறந்தபோது கயலேக்கு பத்து வயது. அன்றிலிருந்து பறத்தலில் ஆர்வம் கொண்ட கயலே கடும் அறிவுத் தேடலின் விளைவாக சில உண்மைகளை அறிந்தார்.

பட்டத்தின் மீது செலுத்தப்படும் தள்ளுதல் காரணமாகவே அது மேல்நோக்கி அசைகிறது. பட்டம் பறப்பதற்கான ஆதாரம் காற்றின் வீச்சுக்கும் பட்டத்திற்குமிடையிலான கோணம் என்பதனையும் கண்டு கொண்டார். 1804 ஆம் ஆண்டளவில் கயலே முதலாவது கிளைடரை தயாரித்தார். 1809 ஆம் ஆண்டு ஒரு பெரிய கிளைடரைத் தயாரித்து அதிற் 10 வயது சிறுவனொருவனை பலவந்தமாகக் கட்டிப் பறக்கப் பயிற்று வித்தார். 1871 ஆம் ஆண்டளவிலே புறப்பெல்லர் ஒன்றின் மூலம் கிளைடருக்குப் பின்னால் சுழலும் புறப்பெல்லர் மூலம் இயங்கும் சாதனத்தை பீனாட் என்பவர் தயாரித்தார். இறப்பர் நாடா (Rubber band) ஒன்றை முறுக்கச் செய்து அது தளரும் போது புறப்பெல்லர் சுழற கிளைடர் முன்னோக்கி அசைக்கச் செய்தது. அவரது முயற்சி வெற்றிகரமாக அமைந்தாலும் அவரது பொருளாதார வசதியின்மை காரணமாக மிகச் சிறந்த கிளைடரை தயாரிக்க முடியாமையினால் 1880 இல் தமது 30 ஆவது வயதில் அவர் தற்கொலை செய்துகொண்டார். விமானக் கண்டுபிடிப்பிற்கான அடித்தளத்தை நிறுவியதை அறியாமலே இளம் அறிவியலாளர் மரணமடைந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே!... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது முப்பது வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## அப்பா வாங்கி வந்த அருமையான நாய்!

அப்பா வாங்கி வந்தார்
அருமையான நாயொன்று
சும்மா சொல்லக் கூடாது
சுறுசுறுப்பான நாயது!

கள்ளர் பயம் என்று ஊரில்
கதையும் விரைவில் பரவவே
அப்பா வாங்கி வந்தார்
அருமையான நாயொன்று!

நாயின் வீரம் பார்க்கவே
நாமும் இரவு கூடினோம்!
நாதன் வீட்டு நாய் குரைக்க
நமது நாயோ மிரண்டதுவே!

கள்வர் பயத்தைப் போக்கவே
வாங்கி வளர்த்த நாயது
எமக்கு முன்னே ஓடிப்போய்
வீட்டுக் குள்ளே உறங்குது!

—வி. உதேஸ்
(நாவற்குளி)



## முடியுமா?

கீழ்வரும் வினாக்களுக்கான விடைகள் வினாக்களுக்கு மேலே தரப்பட்டுள்ள ஒரு சொல்லில் மறைந்துள்ளன. அவற்றைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

I.

பல்கலைக்கழகம்

(அ) மானின் ஆண் இனம்.
(ஆ) மண் தோன்றுவதற்கு மூலமானது.
(இ) உணவை அரைத்து உண்ண உதவுவது.
(ஈ) இரவு என்பதன் எதிர்ச்சொல்.
(உ) அருகில் என்பதை குறிக்கும்.
(ஊ) கனி என்பதன் ஒத்த சொல்.
(எ) தொட்டில் முதல் சுடுகாடு வரை.
(ஏ) பல உறுப்பினர் கொண்ட அணி.

— சிவபுண்ணியம் மயூரன்,
ஹாட்லிக் கல்லூரி.
(விடை XI ஆம் பக்கத்தில்)


II.

ஊர்காவற்துறை

(அ) தலையில் உள்ள உறுப்பு.
(ஆ) கப்பல்கள் தரிக்கும் இடம்.
(இ) பலூனை விரியச் செய்ய இவ்வாறு செய்.
(ஈ) கிராமத்தை இப்படியும் அழைப்பர்.
(உ) வாகனங்களில் ஒன்று.
(ஊ) பொலீஸின் தமிழ்ப் பெயர்.

—சுந்தரலிங்கம் கர்ணன்,
எழுதுமட்டுவாள்.
(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

## கண்டுபிடியுங்கள்!




இங்கு முதல் வரிசையில் 1,2,3,4,5 ஆகிய எண்கள் உள்ளன. இதே எண்களை மற்ற எல்லாக் கட்டங்களிலும் நிரப்ப வேண்டும். அப்படி நிரப்பும் பொழுது ஒரே எண் அடுத்தடுத்த கட்டத்தில் வரக்கூடாது. உதாரணமாக '1'ன் அருகே மீண்டும் '1' வரக்கூடாது. எங்கே நிரப்புங்கள் பார்ப்போம்.

(விடைXI ஆம் பக்கம் பாக்கத்தில்)

## பாலைவனக் கப்பல்

சினிமாவிலும் உயிர்க் காட்சிச் சாலைகளிலும்— ஒட்டகத்தைப் பார்த்திருப்பீர்கள். இதன் உடல் பெரியது; கால்கள் நீளமானவை. இதன் மூக்குத் துளையில் தோலடைப்பு உண்டு.

ஒட்டகத்தின் குளம்புகள் பிளவுபட்டவை. மணலில் அழுந்தாவகையில் அக் குளம்புகள் அமைந்துள்ளன. எனவே, மணல்வெளிகளில் ஒட்டகம் விரைவாகச் செல்லும்.



பாலைவனங்களைக் கடப்பதற்கு ஒட்டகத்தைப் பயன்படுத்துகின்றனர். அதனால் ஒட்டகத்தைப் ''பாலைவனக் கப்பல்'' என்று சொல்வர்.

ஒட்டகத்தின் முதுகில் நீர்ப்பை போன்ற ஒன்று உண்டு. அதில் தண்ணீரை நிரப்பி வைத்துக் கொள்ளும். அந்நீர் அதற்கு ஒரு வாரத்துக்குப் போதுமானதாகும்.


**பிராணிகள் உலகம்**

ஒட்டகங்கள் உணவின்றியும், நீர் வேட்கை இன்றியும் ஒரு வாரம் வரையில் பாலைவனங்களில் செல்லும். எருமை போல் ஒட்டகமும் மந்த புத்தியுள்ளது.

ஒட்டகத்தின் கழுத்து நீண்டு இருக்கும்; ஆனால், இதன் தலை சிறியது. ஒட்டகம் பழுப்பு

(XI ஆம் பக்கம் பார்க்க)

## வழி கண்டுபிடியுங்கள்!




படத்தில் காணப்படும் வண்ணத்துப்பூச்சி எந்த வழியால் சென்றால் பூவில் தேன் எடுக்க முடியும்? முயன்று கண்டுபிடியுங்கள் சிறுவர் சிறுமியரே!

(விடை XI ஆம் பக்கத்தில்)

## வெண்மதியே!

மதியே மதியே வருவாயே!
ஒளியை எங்கும் தருவாயே!

இருளை விழுங்கும் வெண்மதியே!
இரவைப் பகலாய் செய்வாயே!

வளர்ந்து வளர்ந்து வருகின்றாய்!
வாடி வாடிப் போகின்றாய்!

பால்போல் வெளிச்சம் தருகின்றாய்!
பக்கம் வாராய் முழுமதியே!

பாலும் பழமும் தந்திடுவேன்!
பாய்ந்து உன்னைத்தொடர்ந்திடுவேன்!

— குமாரசாமி கிரிவர்ணன்,
ஆண்டு 8, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## வடை அதிசயம்


வட்ட வடிவ வடையிது
வாசம் மிகுந்த வடையிது
தொட்டுக் கொள்ள சம்பலோடு
சுவைக்கும் நல்ல வடையிது.

பச்சை மிளகாய் வெங்காயம்
கரு வேப்பிலை சீரகம்
கச்சிதமாய் கலந்து செய்த
காரம் நிறைந்த வடையிது.

பாட்டி சுட்ட வடையிது
பார்க்கப் பசியைத் தூண்டுது
போட்டி போட்டு உண்ணலாம்
பாப்பா பாப்பா ஓடி வா.

—ம. அச்சுதன்
(ஏழாலை மேற்கு)

## இயலுமா?




பெரிய வட்டத்துக்கு நடுவே உள்ள சிறிய வட்டத்தினுள் காணப்படும் குருவியை ஒத்த குருவியை வெளியே உள்ள நான்கு குருவிகளில் எது என அடையாளம் காட்டுங்கள்

1975308624
1728395046
1604938257
1234567980
0987654312
0864197523
0617283945
0493827156
0246913578
0123456789

?

மேலேயுள்ள அதியக் கணக்கைப் பாருங்கள். பத்து எண்களையும் கூட்டும் போது விடையில் ஓர் அதிசயத்தைக் காண்பீர்கள்; அது மட்டுமல்ல. இந்தப் பத்து எண்களில் ஒவ்வொன்றிலும் 0 முதல் 9 வரையான இலக்கங்கள் ஒவ்வொரு முறை இடம்பெற்றிருப்பதும் தெரிகின்றதா? (உதாரணத்துக்கு முதலாவது எண் 1975308624; இதில் 0 முதல் 9 வரையான பத்து இலக்கங்களும் ஒவ்வொரு முறை இடம் பெற்றுள்ளன.)

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லாகிக் — கசிந்து..

கமலம் சிந்தித்தபடியே இருந்தாள். எவ்வளவு முட்டாள்தனம், பேசாமல் நிமலன் கேட்டதையே செய்திருக்கலாம். எங்க போயிருப்பான்?

ஒற்றை வார்த்தை கூட சொல்லவில்லை. கமலத்தின் பெற்றமனம் பெரிதாகத் துடித்தது.

— வன்னிக்குப் போயிருப்பானோ?

— கந்தப்பு மாமா வீட்டை ஆறுதல் கிடைக்குமெண்டு போனானோ?

— சீ அப்பிடி இருக்காது, மனம் ஆறுதல் படுவதும். ஆத்திரப்படுவதுமாய் இருந்தது. எத்தின பெரிய முட்டாள்தனம்? உவரிட்ட நூறு தரம் சொல்லியிருப்பன்.

பெற்ற பிள்ளையை பிரிந்திருக்க கமலத்திற்கு முடியவில்லை. அவன் போவதற்கும் பெற்றோர்தான் காரணம் என்று முடிவாகும் போது வேதனை மேலும் அதிகரித்தது.

மாலை மங்கி வந்து கொண்டிருந்தது. கோழிகள் கூட்டுக்குள் அடைந்து கிடந்தன. வீட்டில் விளக்கேற்றவில்லை. கமலத்தின் மனமும் ஒளியிழந்து கிடந்தது. 'அம்மா அம்மா' என்று வந்து ஆரத்தழுவும் நிமலனின் பிரிவு அவளை நிமிர விடாமல் செய்தது.

''உங்க என்ன செய்யிறா... கூட்டுக்கை இரவு மரநாய் ஏறினாத்தான் தெரியும். கோழிக்கூட்டையும் அடைக்காமல் கனவு காணுறியோ?'

கமலம் சிந்தனையில் இருந்து பிரிந்தாள். எழுந்து நடக்க கால் பின்னியது.

— என்ன மனுசன் இவர். கல்லைப்போல நெஞ்சு. பிள்ளையைப்பற்றி சொட்டெண்டாலும் யோசினை இல்ல.

வீட்டு விளக்கேற்றி முடிந்ததும், துடிக்கும் நெஞ்சோடு கமலம் அலைமோதிக்கொண்டிருந்தாள்.

என்ர பிள்ளை எங்க போச்சுதோ சாப்பிட்டுதோ? ...நிமலா... நிமலா... ஏனப்பா இப்பிடி கொம்மாவை தவிக்க வச்சனி

அவளையும் அறியாமல் அரற்றத் தொடங்கி விட்டாள்.

செல்லப்பர், கமலம் தம்பதிகளுக்கு நிமலன் கடைக்குட்டி. வயது முதிர்ந்த அந்த தம்பதிகளுக்கு பொறுப்பு மிக்க மகனாய் இருக்கும் அன்பு மகன். என்றைக்குமே தாய், தந்தைக்கும் மாறாக எதையும் செய்ததில்லை. மூத்த பிள்ளைகள் இருவரும் வெளிநாடு என்று போய் விட்ட பொழுதிலும், பெற்றோர் தான் பெரிதென்று வாழ்பவன். அப்படிப்பட்டவன் பிரிந்துபோய் விட்டான் என்பதை மனம் நம்ப மறுப்பதாகவே கமலத்திற்கு இருந்தது.

— ...''ஏன் கமலம் உவன் உப்பிடிப்பட்ட வைராக்கியன் எண்டு இதுவரைக்கும் தெரியேல்ல?''

— ''என்னப்பா?... அப்பிடிப்பட்டவன் மாறிப் போனான் — எண்டா பெட்டை எவ்வளவு குணம் எண்டபடியாத்தானே?''

— இண்டைக்கு பெட்டையை கண்டனான் பாவமாக்கிடக்குது? கேக்கலாமெண்டுதான் போனனான்...''

வேற எங்க போய் கேக்கிறது?

எனக்கெண்டா நெஞ்சு பதறுது.

''சும்மாகிட கமலம்கொஞ்ச நாளைக்கு கொழுப்பு வத்த வருவான்''

கமலம் அழுதே விட்டாள்.

— ''ஏனப்பா உப்பிடி கதைக்கிறியள்... நிமலை அப்பிடி குறைவா நினைச்சிட்டியளே... அவனுக்கும் இருபத்தாறு வயதாகுது...

இதுவரைக்கும் ஒரு பெட்டையை நிமிர்ந்து பார்த்தானெண்டு கதை வந்ததே. இப்பவும் எவ்வளவு மரியாதையா வந்து கேட்டவன். அவன்ரைமனதை நோகவைச்சிட்டியளே!''

கமலம் கூறுவதில் நூற்றுக்கு நூறு வீத நியாயம் இருந்தது. நிமலன் நல்ல ஓர் இளைஞன். யாழ்ப்பாணத்தின் சூழ்நிலைக்கெல்லாம் வளைந்து கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்களில் அவனும் ஒருத்தன். ஆனால் அவனுடைய குறிக்கோள் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தது. பெற்றோரின் வாழ்க்கை, கடைசிக் காலத்தில் அவர்களை கண்கலங்க விடக்கூடாதென்ற ஆதங்கம் அவனுக்கு நிறைய இருந்தது.

அவனது மென்மையான மனம் மாதங்கியின் மேல் பிரியத்தை ஏற்படுத்தியது. அது அமைதியான பிரியமாகவும் அன்புப் பிணைப்பாகவும் இருந்தது. என்றுமே அழிக்க முடியாத ஆசையாகவும் அவன் மனதில் ஏறியிருந்தது.

— ''அப்பா நீங்களே மாதங்கியின்ர அப்பாவோட கதையுங்கோ எனக்கு அவளில்லாம வாழ முடியாதென்ற நிலை அப்பா!''

செல்லப்பர் ஒன்றும் சொல்லவில்லை. அவர் மௌனமாக இருந்தது நிமலனுக்கு சந்தோசமான ஆச்சரியத்தினை உருவாக்கியது. தகப்பனார் சம்மதித்து விட்டார் என்றே முற்று முழுதாக எண்ணிவிட்டான். மறுநாள் செல்லப்பர் முகத்தில் கொள்ளு வெடித்துக் கொண்டிருந்தது.

''தகப்பன் கூலிவேலையாம். கஸ்டப்பட்ட குடும்பத்துக்க இவர் கலியாணம் முடிக்கப் போறாராம். நாளைக்கு பெட்டியைத் தூக்கிக் கொண்டு திரியட்டும். உதுக்கு ஒருநாளும் என்ர சம்மதம் கிடைக்காது.''

செல்லப்பர் கல்லுப்போல இருந்து வெடி முழக்கம் செய்தார். நிமலன் திகைத்துப் போய்விட்டான். செல்லப்பர் அந்தஸ்தை சாட்டாக வைத்துக்கொண்டு இப்படி கதைப்பார் என்று அவன் எதிர்பார்த்திருக்க வில்லை. மௌனமாக எழுந்து போய் விட்டான். அன்று போனவன் தான் இன்று இரண்டு வாரமாக காணவில்லை.

★ ★ ★

கமலம் கூறுவதைக் கேட்க செல்லப்பரின் மூளையிலும் அந்த நியாயங்கள் உதைக்கத்தான் செய்தது. இதுவரை காலத்திலும் ''எனக்குப் பிடித்திருக்கிறது. வாங்கித் தாருங்கள்'' என்று எதையுமே கேட்டு நிமலன் அடம் பிடித்ததில்லை. ஆனால் மனதுக்குள் விழுந்துவிட்ட மாதங்கியை மனைவியாக்கித் தருமாறு கேட்டதில் நியாயமிருக்கிறது.

ஏழ்மை என்றால் அத்தனை இழக்காரமா? செல்லப்பர் எண்ணுகிறார். இடம் பெயர்ந்து ஓடும்போது தென்னங்காணிகள் அவருடன் சேர்ந்து வந்தனவா? அன்பானமகன் மட்டும் எவ்வளவு அரவணைப்பாக இருந்தான்.

தன்னுடைய எண்ணத்தை உயர்ந்த வழியால் வெளிப்படுத்த நினைத்த நிமலனை நினைத்ததும் செல்லப்பரின் நெஞ்சு நனைந்தது.

எவ்வளவு படிச்ச பெட்டை; எத்தின அடக்கம்; கணித்துப் பார்த்தால் நிமலன் தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இரவின் அழுகைகளை ஆறுதல் படுத்துவதுபோல விடியல் சிரித்துக்கொண்டிருந்தது. செல்லப்பர் வாசல் பெருக்குவதற்கு விளக்குமாற்றைத் தேடுகின்றார். தூரத்தில் கூன் விழுந்த உருவம் துல்லியமாக் விளங்கியது.

''அட..டட... கந்தப்பு மாமா... இந்தப் பனிக்க... எப்பிடி வந்து சேர்ந்தியள்?''

கமலம் துள்ளிக் குதிக்கிறாள்.

**- ஸ்ரீ சிவாணி -**

''மாமா நிமலன் உங்களிட்டத்தானே வந்தவன்...''

கந்தப்புவுக்கு சிரிப்பு வந்தது.

''என்ன தம்பி நீ இப்பிடி கதைக்கிறதே குழந்தை நல்லா நொந்து போச்சுது.''

''மாமா இண்டைக்குச் சம்பந்தம் பேசப் போறதெண்டு நேற்றே முடிவெடுத்தாச்சு. எல்லாம் இனி நல்ல செய்திதான் வாங்கோ!''

பனித்திரை எடுபட்டிருந்தது. நிமலன் கந்தப்புவின் பெட்டிகளை தூக்கிக் கொண்டு வருவது தெரிந்தது. ''மாமா கமலம் இண்டைக்கு மருமகள் வீட்டைத்தான் சாப்பிடப்போறனெண்டு ஒற்றைக்கால்ல நிற்கிறாள்''

செல்லப்பர் சொல்லிக் கொண்டே நிமலனைப் பார்க்கிறார். அவளது கன்னம் குழிந்து அசடு வடிந்தது.

★

(யாவும் கற்பனை)

**சஞ்சீவி சிறுகதைகள்**

# தடிப்பு

அந்தத் திருமண வீட்டிற்கு அந்த வாத்தியாரும் வந்து எனக்கருகில் அமர்ந்து கொண்டார். அவர் தனக்கு அறிந்தவர்களுக்கு ''வணக்கம்'' சொல்லும் பொழுது அவரது உறுதியானதும் வெண்மையானதுமான பற்களைப் பார்த்து நான் பொறாமை கொண்டேன். இத்தனைவயதிலும் இவருக்கு இவ்வளவு உறுதியான பற்களா? எனது பற்களில் அனேகமானவற்றைப் பிடுங்குவித்து விட்டேனே! எனக்கு 'வணக்கம்' சொல்லவே வெட்கமாக இருந்தது. அவரோ தனக்கு உறுதியான பற்கள் இருக்கின்றதென்ற திமிரில் மிகவும் அட்டகாசமாகச் சிரித்து 'வணக்கம்' சொல்லிக் கொண்டிருந்தார்.

மணமகளுக்கு தாலிகட்டி முடிந்து, அங்கு வந்திருந்தவர்கள் ஒவ்வொருதராய் போய் மணமக்களுக்கு அறுகரிசி போட்டு வாழ்த்திய பின், வந்திருந்தவர்களுக்கு பலகாரங்கள் பரிமாறப்பட்டன. அங்குள்ளஇளம் பெண்கள் தட்டில் வைத்து ஒவ்வொரு வகைப் பலகாரமாகக் கொண்டுவந்து நீட்டினார்கள். முதலில் 'அரியதரம்' வந்தது. அந்த வாத்தியார் ஓர் அரியதரத்தை எடுத்து அதன் விஷேஷத் தன்மையைச் சொல்லிவிட்டு அதை விரல்களால் நசித்துப்பார்த்து விட்டு ''சசா...என்ன பூ மாதிரி இருக்கு இந்த அரியதரம்...இப்பிடியெல்லோ பதமாகச் செய்யவேணும்...'' என்று சொல்லிக்கொண்டு அதில் ஒன்றை எடுத்துச் சுவைத்தார். அதன் பின்பு முறுக்கு வந்தது. ''இந்த முறுக்கும் நல்லாத்தான் இருக்கு...மிளகு சீரகம் எல்லாம் கணக்காய், காரமாய் போட்டிருக்கு...'' என்று அதிலும் ஒன்றை எடுத்து நறுக் நறுக் கென்று கடித்துச் சாப்பிட்டுக்கொண்டே சொன்னார். அதன் பின்புகொண்டு வந்து நீட்டிய பலகாரங்களையும் மிகவும் வெகுவாக இரசித்துச் சாப்பிட்டார்.

பின்பு கொண்டுவரப்பட்ட பாற்கோப்பியையும் பருகிவிட்டு ''நல்ல சுக்கு ஏலக்காயெல்லாம் போட்டுத்தான் கோப்பி இடிச்சிருக்கு...'' என்றார். அவரைப் பார்க்க எனக்கு சந்தோசமாக இருந்தது. அவரின் போக்கைப் பார்த்தால் அவர் ஒரு 'தமிழ் அறிஞர்'என்பது போலவும் எனக்குப் பட்டது.

★ ★ ★

எழுத்தாளர் யேசடியான் தனது வழமையான சுபாவத்தில் மேடையில் நின்று மிகவும் ஆவேசமாகவும் ஆக்ரோசத்துடனும் முழங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு அன்று மணிவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

''நான் மக்களுக்காக, அதுவும் சுரண்டப்படும் பாட்டாளி மக்களுக்காக, அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காக, சமுதாயத்தில் கீழ்மட்டத்திலிருக்கும் மக்களுக்காக, கிட்டத்தட்ட நாற்பது வருடகாலமாக எனது பேனாவை ...இல்லை எனது ஆயுதத்தை ஏந்தி வருகிறேன். அடக்கி ஒடுக்கப்படும் எவருக்காகவும் எந்தவித தயக்கமுமின்றி எனது ஆயுதத்தைப் பாவிப்பவன் நான். அவர்களின் சுதந்திரத்திற்காக, அடிமை விலங்குகளை, சங்கிலிகளை உடைத்து எறிவதற்காக எனது ஆயுதத்தை...எனது பேனாவை, பேனா பிடித்து எழுத வலுவிருக்கும் வரை பாவிப்பேன்......இன்று எனது மணிவிழா ...... என்னையும் எனது எழுத்தையும் நேசிக்கும் எனது இனிய நெஞ்சங்களே, இந்த மணிவிழாவில் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். எனது குடும்பத்தாரோடு நானும்சேர்ந்து செய்த சில பலகாரங்களையும் இங்கு உங்களுக்குப் பரிமாறப் போகின்றேன். அதனையும் சுவைத்துச் செல்ல வேண்டுமென எனது அன்பு நெஞ்சங்களை தயவுடன் வேண்டுகின்றேன்...'' என வேண்டுகோளும் விடுத்தார்.

இந்த மணிவிழாவுக்கு அன்று நான் கலியாண வீட்டில் கண்ட தமிழ் அறிஞரான வாத்தியாரும் வந்திருந்தார். எழுத்தாளர் யேசடியானின் முகத்தில் நல்ல சந்தோசம் தெரிந்தது.

பலகாரங்கள் பரிமாறப் பட்டன.

முதலில் அரியதரம் வந்தது. எனக்குப் பதமாக வருமோவென யாருக்கும் தெரியாமல் விரலால் நசித்துப் பார்த்துவிட்டு ஒன்றை எடுத்தேன். இந்த அரியதரமும் அன்று வாத்தியார் சொன்னதுபோல 'பூப்' போல இருந்தது. எழுத்தாளர் யேசடியானின் அன்றைய மனம் போல.

அந்த வாத்தியார் அந்த மணவிழாவிலும் எனக்கருகில் தான் வந்திருந்தார். இந்தப் 'பெரிய தமிழ் வாத்தியாருக்குப் பக்கத்தில் ''நான் இருப்பதா?'' என்று எனது மனத்திற்குள் ஒரு கூச்சம், அன்று அவர் அரியதரத்திற்குச் சொன்ன வியாக்கியானம் போல் இன்றும் ஏதாவது சொல்லுவாரோ என எதிர்பார்த்தேன்.

அரியதரத்தை அவருக்கு நீட்டியபொழுது 'நாறல் மீனை'ப் பார்த்தது போலப் பார்த்துவிட்டு அப்பால் கொண்டுபோய் கொண்டிருக்கும்படி சைகை காட்டினார்.

பின்பு 'பிஸ்கற்' கொண்டு வரப்பட்டது.

நான் பிஸ்கற்றை எடுத்து சிறு சிறு துண்டுகளாகப் போட்டு வாய்க்குள் உமிஞ்சு சாப்பிட்டேன்.

வாத்தியாரும் ஒரு பிஸ்கற்றை எடுத்து தனது உறுதியான பற்களால் கடித்துச் சாப்பிட்டார்.

அடுத்ததாக முறுக்கு வந்தது. அதை நான் தொட்டும் பார்க்கவில்லை. என்னால் கடிக்க முடியாதென விட்டு விட்டேன்.

அடுத்து வாத்தியாருக்கு நீட்டப்பட்டது. அவருக்கு நல்ல உறுதியான பற்கள் இருந்தன. அவர் முறுக்கையும் எடுக்கவில்லை. அதன் பின்பு பயிற்றம் பணியாரத்தோடு வாழைப்பழமும் வந்தன. நான் வாழைப்பழத்திலொன்றையும், பயிற்றம்பணியாரத்தைச் சாதுவாக அமத்திப்பார்த்து, பதமறிந்தபின் அதிலொன்றையும் எடுத்தேன். வாத்தியார் பயிற்றம் பணியாரத்தை அப்பால் போகவிட்டு வாழைப்பழத்தில் ஒன்றை எடுத்துக் கொண்டார். அவர் பின்பு கொண்டு வந்த பாற்கோப்பியையும் தொடவில்லை.

எனக்கு வாத்தியாரின் போக்கை உணர முடியவில்லை. வாய்க்குள் 'சுவிங்' கத்தைப் போட்டு ஓயாமல் சப்பிக் கொள்வதைப்போல, அந்த வாத்தியாரின் செயற்பாடு எனது மன ஆலையில் தொடர்ச்சியாக அரைபட்டுக் கொண்டிருந்தது. இறுதியாக எனக்கு அவரின் 'நோய்' பிடிபட்டது.

சிலருக்கு நுளம்பு கடித்தாலும் 'தடிப்பு' ஏற்படும். ஆனால், அது சிறிது நேரத்தில் மறைந்து விடும்.

சிலருக்கு மயிர்கொட்டி பட்டாலும் 'தடிப்பு' ஏற்படும். இந்தத் தடிப்பை 'கை மருந்தால்' நீக்கி விடலாம்.

சிலருக்கு 'ஒவ்வாமை' (அலர்ஜி) யினாலும் உடலில் 'தடிப்பு' ஏற்படும். இதற்கும் மருந்துகள் உண்டு.

**துரை சுப்பிரமணியன்**

இந்த வாத்தியாருக்கு மனதில் ஊறிக் கரைந்து விட்ட 'தடிப்பு' மிகவும் மோசமானது.

இந்தத் 'தடிப்பை' அகற்ற அவருக்கு பாண்டித்தியம் தேவைப்படாது. முழுமையான மனித நேயம் அவரின் மனத்தில் ஊன்றிப் படர வேண்டும் என நான் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவர் எழுந்து சென்று எழுத்தாளர் யேசடி

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்நீச்சல்

புண்ணாறக் கிடைக்கின்ற அவகாசத்தில்
புத்துணர்ச்சி காய்க்க... ஒரு அகவல் செய்தேன்
என்சிறகு வீடெரிந்த நெருப்பில் நீறி
புதுச்சிறகு முளைக்கையில் நான் விருத்தம் கொய்தேன்
குண்டுகளே பாறைகளாய் அமுக்க... பாறை
இடுக்கிலெழும் புல்லாய்நான் வெண்பா பெய்தேன்.
சண்டைகளின் மரண ஓலம் அடங்கிடாத
இரவிருட்டில் துணிவொளியில் கவிதை நெய்தேன்.

அற்பமெனும் சிறு பூண்டும் புவியில் ஏதோ
சாதிப்பேன் எனத்தானே பிறக்கு திங்கு?
பற்றுகிற தணல் மேலும் நம்பித்தானே
சாம்பற்பூ பூக்கிறது! எனவே நானும்
புற்றுநோயை உடல் முழுவதும் பரவவிட்டு
உத்தரிக்கும் தேசத்தின்... துயர் வலிக்குள்
கற்பனையின் மலையெழுப்பிக் கவிதை செய்தேன்.
காலனது முதுகிலேறி வாழ வந்தேன்.

— த. ஜெயசீலன் —

# மாயத்திரை

வெள்ளித் திரையில் விழித்துஎழும் தத்துவங்கள்
சொல்லி அறியாமை சுத்திசெய்து — கள்ளையுமே
நோய்க்கு மருந்தாக்கி நூறுபயன் தந்ததெல்லாம்
போய்ச்சுதின்று கட்டிற்கே புற்று.

சும்மா நிழலசையும் சூட்சுமமாம் இச்சினிமாப்
பம்மாத்தோ இன்று பலகரத்தில் — எம்மா
கதையின்றிப் பாட்டின்றிக் கண்ணுக் குணவாய்ச்
சதைதருதல் தான்சினிமாச் சாறு

பானை உடைத்தல்! பழக்கடை தூளாக்கல்
வானில் பறந்துமே வாள்சுழற்றல் — தூண்மரத்தை
சுற்றிவந்து காதலித்தல் சோக்காய் மழைநனைதல்
கற்றதென்ன பார்த்துக் களித்து

இடைப்பஞ்ச மாக இருத்தல் சரிதான்
உடைப்பஞ்ச மேனோ சரியா? தொடையோடு
தொப்புழுக்குக் கீழே துணிகிழிந்த காட்சிகள் தான்
தப்புமெனில் பாவம் தமிழ்.

முகபாவம்; கண்பாவம் முத்துச் சிரிப்பும்
சுகபாவம் முந்தித் திரையில் — நகுமாவும்
ரம்பாவும் வந்து ரவிக்கை அவிழ்ப்பதெனில்
வம்பாகும் சந்ததியின் வாழ்வு.

ஏழை உழைப்புகளை ஏப்பமிடும் இச்சினிமா
வாழ்வுக்கும் மெய்க்கும் வலுதூரம் — கூழ்தன்னும்
கிட்டா திருக்க கிளுகிளுப்பால் என்னபயன்
முட்டாளே மோகம் முறி.

— ச. முகுந்தன் —

# பேரூந்து சொல்லும் கதை

(1998 தைமாதம் யாழ். மண்ணில் இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட பேருந்துகளில் ஒன்று இங்கு பேசுகின்றது)

பாதையிலே நடைதளர்ந்து போகின்ற வயோதிபர்க்கும்
போதையிலே நிலையிழந்து பரிதவிக்கும் பாவிகட்கும்
பேதையர்தம் மென்பாதம் புண்படாது ஏகுதற்கும்
கோதையாய் நின்றுதவும் 'பேரூந்து' பேசுகின்றேன்.

'கட கட' 'கடகட' சத்தங்கள் கேட்டாலும்
கடந்துநான் நடைபோட்டு வருவதற்கா பாதையில்லை?
வெளிநாட்டில் விலக்கிட்ட வாகனம் தன்னுக்கு
விலைகேட்டு வாதிட நம்நாட்டிலோ ஆளில்லை?

'மகியங்கனை'யிருந்து 'மாலத்தகம' மாறி
மலரில் வண்டினமாய் மாந்தினேன் வீதியின்பம்
'கண்டி டிப்போ' கூடவே 'பதுளை' யெங்கும்
கண்டிருந்த என்னுடலைக் கற்பழித்தார் எத்தனை பேர்?

''டிக்டிக்'' சத்தங்கள் 'டீசல்' மதுக் குடித்தேன்
'டிங்டிங்' கம்பியால் 'டொக்சைட்' போடவைத்தேன்
வெள்ளை வேட்டிகளை வெகுவாகக் கிழித்தெடுத்து
வடிந்தொழுகும் செங்குருதி வெள்ளத்தில் நான் விடுத்தேன்

தள்ளாடும் வயதிலுமென் தாராள மனம்பாரீர்
தென்பகுதி வீதியெல்லாம் தவறாது பார்த்ததனால்
அன்போடு எனையழைத்து 'ஒய்வெடும்' என்றுரைத்தார்
என்போடு நான் வந்த இரகசியம் இதுதான்!

மண்ணாகிப் போகுமுன் புதுவாழ்வு தந்தனையோ
தொண்ணூற்றியெட்டுத் தேர்தலே நீ வாழ்க
யாழ்நகருமில்லையென்றால் பாழ்நகரே எந்தனுக்கு
வாழ்க வட மண்ணே! வந்தவள் நான் ஒருத்தியல்லள்.

நூறுபேர் வந்துள்ளோம் நுமக்கென்ன கவலையினி?
ஆறுகுளமாகச் செங்கடலில் அலைந்தவரே
ஆடையிழந்த மண்ணின் ஆழத்தை ரசிப்பதற்கே
ஆடையின்றி நாம் அரைகுறையாய் வந்துள்ளோம்.

பலகாலம் மினிபஸ்ஸில் பயணித்த உம்மவர்க்கு
சில பஸ்ஸே தேவையென்று சீரோடு அழைப்பனுப்ப
ஐயைந்து மேலாக அனுப்பியது குழுவொன்று
ஐயன் (பௌசி) ஆணையிலே! ஏனென்று... புரிகிறதா?

'டிங்டிங் ஆட்டக்காரி' 'டீசல் குடிகாரி'
எங்கிருந்து மெண்ணாதீர் ஏற்ற முமக்குண்டு.
டீசல் முதலான எரிபொருள் இல்லையென்ற
பூசல் போயினிப் 'பெற்றோல் செற்' நிறையும்.

தேர்தல்களம் முடிந்து திங்களொன் றானபோதும்
தமிழினத்தை யணைக்காது தவிக்கின்றேன் யான ஐயோ!
நூறுபேர் நாம்வந்து நூறுகோடி புகழ்சேர்த்தோம்
நம்மவரே, தமிழினமே நமைத் திருப்பியு மனுப்புவீரோ?

புதுவை — திருநாவன்

# திருநாளைப் பேவாள்

மார்ச் 8! தங்காய்
மலர்ந்திருக்கு, மேடைகளில்
கீச்சிட்டுக் கத்து;
கிழித்தெறிவோம் விலங்கையென கூச்சலிடு!
கூடித் தீர்மானம் நிறைவேற்று.
குடுமிகளை வெட்டி யெறி.
குதிக்காலால் நீ உயரு.
கொடுமைகட்கு எதிராய்
கூலிங்கிளாஸ் போடு.

அடிமை விலங்கு; ஆடைகளை
பிய்த்து எறி.
சம உரிமை கேள்; ''சாரி''யேன்?
வேட்டிகட்டு.
''குடி''யுரிமை கேட்டு
கொட்டமடி; வாய்ப்பூட்டை
புகைக் குண்டைக் கொண்டு தகர்த்துஎறி
புகை ஊது.
உசைப்புமழை போல
உன்னவரை மாற்றிக்கொள்.

எவரஸ்ற்றில் ஏறியநீ ஏன்
குசினிக் குள்ளிருப்பான்?
உடனே வெளியே வா
உரத்துக் குரல் கொடுக்க...
மழலை...அழும்; அதை 'மைண்ட்' பண்ணி
நேரத்தை
விழலாய் ஆக்காதே; விண்வெளிக்குப்
போனவள் நீ
'உஞ்சுவுக்கு' நாணத்தை உடன்விற்று
நெஞ்சை நிமிர்த்தி நட;
ீநருக்கு நேரே பார்.

— செல்லப்பர் —

# சதா(ம்) உறுதி!

இரு(ம்பு) மனிதா
இன்னும் இரு!
சர்ச்சைக் கதாநாயகனிடம்
சரணடையாதே!
அவன்
உலகை — தனது
உள்ளங்கையிலே
உள்ளடக்க முனையும்
சர்வதேச சண்டியன்!

வெள்ளை மாளிகைக்குள்
சிவப்புத் தீ
அது
ஒடுக்கப்பட்டவரின்
உணர்வைப் பொசுக்கும்
ஆயுதக் களஞ்சியம்!
இரு(ம்பு) மனிதா
இன்னும் இரு!
எசமானர்களால்
ஏமாறி வெந்தவர்கள்
உன்னோடு கரமிணைக்க
உறுதியாய் உள்ளனர்
இரு(ம்பு) மனிதா
இன்னும் இரு!
உறுதி மனதை
உரமாகக் கொண்டு.

— மானியூர் ரட்ணேஸ் —

# வாழ்கை வராதா?

கலகலக்கும் குருவி
சலசலக்கும் அருவி
இதம் தரும் காற்று
அசைந்தாடும் நாற்று...இவ்
வாழ்க்கை வாராதா?

பறவைகளின் கூட்டுறவு
எறும் பினத்தின் சுறுசுறுப்பு
தேனீக்களின் கூட்டுமுயற்சி
பாறையின் உறுதி...இவ்
வாழ்க்கை வாராதா?

இயற்கையின் இளமை
பூமியின் பொறுமை
நிலவின் தூய்மை
பூக்களின் மென்மை... இவ்
வாழ்க்கை வாராதா?

அரிச்சந்திரன் வாய்மை
ஆதாம் ஏவாள் காதல்
வானவில் வண்ணம்
குழந்தையின் புன்னகை ... இவ்
வாழ்க்கை வாராதா?

— இணுவை றொட்றிக் —

# நாளையோர் நாள் வரும்

சிறிய புல்கூட நிமிர நாளைக்கு
ஒழுகும் மழை பொங்கிடும் — தினம்
எரியும் தீயாறி குளுமை கூத்தாடி
பசுமை கொடி யேற்றிடும்.

தவிலின் ராஜாங்கம் குழலின் ஏகாந்தம்
அருவி எனப்பாய்கையில் — புதுக்
கவிதை மொட்டுகள் விரியும் நாடெங்கும்!
சுகந்தம் எழும் வாழ்க்கையில்.

பழைய மேகங்கள் விலகியே ஓட
அணுகும் புது மேகமே — இனி
இளைய ராஜாகள் இசையில் பூப்பெய்தி
மகிழும் வருங்காலமே.

வழிகள் காட்டாமல் வரண்ட வேதாந்தம்
அளந்தே! 'புது ஆற்றலை' — கணம்
'பழிக்கும்...; ஆசான்கள்' எமது வேகத்தை
பளுகச் செய்யும் 'நம்கலை'.

தமிழன் மேன்மைகள் தரணி மீதோங்கும்
தமிழின் விலை வீழுமா? — வெறும்
உமிகள் போம் காற்றில்! திறநெல் வரும் கையில்
உறவே இதை நம்பி வா!

புரிந்த யாகங்கள்... மறைந்த காயங்கள்
நினைந்தே... இனம் பாடிடும் — உயிர்த்
தெருவில் அச்சங்கள் அகலும்; பிஞ்செல்லாம்
சிரிக்கும்; புது நாள் வரும்.

— தேரடிச்சித்தர் —

# வண்ணத்துப் பூச்சிகளும் நானும்!

நிலமில்லா மக்கள் மக்களில்லா நிலமென்றெம்
நாட்டைப் பிரித்துவைத்து
நரிமுகத்தோ டிழிக்கின்ற
போர்க்களத்தில் நின்றென் கவிதை புலம்புகையில்...
அண்ணாந்து பார்த்தேன்.
அணியணியாய்ப் பலநூறு
வண்ணத்துப் பூச்சிகள் வடக்குத் திசைநோக்கிக்
கட்டற்ற காற்றாய்
கைகாட்டிப் பறந்தன; என்
முற்றத்துப் புல்லில் முருங்கை மரமொட்டில்
குந்தி இளைப்பாறிக் குதித்துக் கிளம்பின;
என்
வியப்பறிந்த ஒருபூச்சி......,
''குறித்த ஒரு காலத்தில்—
இமயமலைக் கேகிக் கடன்தீர்த்து எல்லோரும்
இறப்போம்; அதற்குத்தான் இப்போது செல்கின்றோம்''
என்றுரைக்க
நானும் இடிவிழுந்தாற் போல்துடித்தேன்!
''சின்ன மலரேநீ செத்திடநான் விடமாட்டேன்
உன்னைத் தடுப்பே''னென் றெழுந்தேன்.
ஆனாலது
புன்னகைத்து என்முன் புதிராகி மறைந்தது!
''சீ...என்ன கொடுமை''யென்றேன்,
'மனப்பட்சி' பேசியது.
''நீதான் எதுஞ்செய்ய நாதியற்று இங்குள்ளாய்...
தன்விருப்பம் போலே திரியும் அதைத்தடுத்து
உன்போல ஆக்குவையோ?''
மனச்சாட்சி கொல்ல... எந்தன்
கண்கள் அவைபோன திக்கை வெறிக்கிறது.
நிலமில்லா மக்கள் — மக்களில்லா நிலமென்றெம்
நாட்டைப் பிரித்துவைத்து
நரிமுகத் தோ டிழிக்கின்ற
போர்க்களத்தில் நின்றென்
கவிதை புலம்புறது.

— அருணன் —

# போய் வருகிறேன் விடை கொடுங்கள்

நேற்றுடன் முடிந்தன இனிய பொழுதுகள்!
நினைவுகள் மட்டுமே என்னிடம் உள்ளன!

காலக் கதவு விரிந்ததால்... என்
கடமையின் பாதை பிரிந்ததால்
மீண்டும் புதிய இலக்கினில் — என்
பயணம் தொடரும் சிறப்புடன்

இங்கே மீண்டும் புதிதாய்ப் பிறந்தேன்!
சிறகுகள் முளைத்தன! எழுந்து பறந்தேன்!
இமயம் தொடுதலை இலட்சியம் ஆக்கி
இதயம் உருக்கிப் பறத்தல் தொடர்ந்தேன்!

வான்முகில் நோக்கிச் சென்றிடும் போதும்
சிறகுகள் தந்த மண் மறந்திடலாமோ..?
மறப்பது என்பது என்றுமேயில்லை
மனத்தினில் இருக்கிற கவலையே தொல்லை!

பயணப் பாதையில் சிறகுகள் களைக்கும்
பனியின் குளிரில் ஓய்வறை தேடும்!
களைப்புடன் அமர்ந்து ஓய்வுற்ற மரத்தை
கானப் பறவைகள் மறப்பது சரியா...?

இரகசியம் பேசிய இலைகளைக் கிளைகளை
இதமுடன் கோதிய பூக்களின் வாசத்தை...
பசியினைப் போக்கிய சாறுசேர் கனிகளை...
பருவ அரும்பினை மறந்திடல் கூடுமோ...?

இலைகளும், கிளைகளும் நெஞ்சை ஈர்ப்பினும்
வானத்து மேகங்கள் வா வா என்குது!
பிரிவெனும் துயர் சிந்தை பிழியினும்
பறந்து போகவே சிறகுகள் துடிக்குது

ஆதலால், போகிறேன் அன்புநெஞ்சங்களே!
வாழ்த்துங்கள்! என்றுமே உம்மை நான் மறவேன்!

— தாட்சாயணி

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவ, புண்ணியம் என்றால் என்ன? அதை நேரில் விளக்கிய கண்ணன்!

ஒரு சமயம் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனிடம், ''கண்ணா! புண்ணியம் என்றால் என்ன? பாவம் என்றால் என்ன? அவற்றைச் செய்தவர் அடையும் நிலை என்ன? இதை எனக்கு வார்த்தையால் சொன்னால் மட்டும் போதாது. நேரில் காட்ட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

கண்ணபிரான் கூறுகிறார்:

தனஞ்சயனே! அவந்தி என்ற புகழ் பெற்ற நகரத்தில் தர்மவர்மன் என்ற பிராமணன் ஒருவன் இருந்தான்.

அவனுக்குக் கீர்த்தி, சுகீர்த்தி என்று இரண்டு புதல்வர்கள் பிறந்தார்கள்.

இருவரும் நன்கு கல்வி பயின்றார்கள்.

கீர்த்தி அர்த்த சாஸ்திரத்தை (பொருள் நூல்) நன்கு கற்றான். சுகீர்த்தி ஞான சாஸ்திரத்தை நன்கு கற்றான்.

சுகீர்த்திக்கு வயது ஏறஏற அன்பும் பண்பும் ஏறின. அவர் மனம் தாமரையிலைத் தண்ணீரைப் போல் உலகத்தில் உறைந்தும் பற்று இன்றி — சலனமின்றி சதா தெய்வ சிந்தனையில் நின்றது.

இருவருக்கும் திருமணம் நடைபெற்றது.

தந்தையாகிய தர்மவர்மனுக்கு அந்திய காலம் நெருங்கியது. இரு பிள்ளைகளையும் அழைத்தான்.

''என் செல்வக் குமாரர்களே! செல்வம், நிலம் புலம், மாட மாளிகை, தோப்பு, துரவு எல்லாம் நிரம்ப நான் தேடி வைத்திருக்கிறேன். என் காலம் முடிவு பெற இருக்கிறது. எனக்குப் பிறகு பாகப்பிரிவினை விடயத்தில் நீங்கள் தகராறு செய்ய நேரும். ஆதலால் நானே நியாயமாகப் பாகப்பிரிவினை செய்ய நினைக்கிறேன். உங்களுக்குச் சம்மதம்தானே?'' என்றான்.

''அப்பா! உங்கள் திருவுளப்படி நாங்கள் நடக்கிறோம்'' என்றார்கள் இரு மைந்தர்களும்.

''இளையவனே! சுகீர்த்தி! அண்ணன் கொஞ்சம் பொருளாசையுடையவன். சிக்கனமாகவும் பொருளைக் காப்பாற்றும் திறமையுடையவன்.

''நீ சதா ஞானமும் தியானமும் தர்மமும் மேற்கொண்டிருக்கிறாய்.

''எனக்கு ஒன்பது லட்சம் பொற்காசுகள் இருக்கின்றன. பெரியமாடி வீடு ஒன்றும், சிறிய வீடு ஒன்றும் இருக்கின்றன. நன்செய் நிலம் தொண்ணூற்றாறு காணிகள் இருக்கின்றன.

''என்அன்புக்குரிய மகனே! நீ மகா மேதை; நிராசையுடையவன். அண்ணனுக்கு ஆறு லட்சமும் உனக்கு மூன்று லட்சமும் என்று பிரித்துத் தருகிறேன். பெரிய மாடி வீடு தமையனுக்கும், சிறிய வீடு உனக்குமாக இருக்கட்டும். அறுபது காணி நிலம் அண்ணனுக்கும், முப்பது காணி நிலம் உனக்கும் என்று தருகிறேன். நான் நிரம்பவும் சிந்தித்துத்தான் இவ்விதம் செய்கிறேன்.


''என் மாணிக்கமே! அண்ணனுக்குச் சிறிது அதிகமாகத் தருகிறேன் என்று நினைக்காதே; ஒரு தாய்க்கு இரண்டுபிள்ளைகள்; பசித்தவனுக்கு ஆறு தோசையும் பசிக்காதவனுக்கு இரண்டு தோசையும் தாய் தருகிறாள். இதைப் பாரபட்சம் என்று நினைப்பது கூடாதல்லவா? ஆகவே தென்னஞ் சோலையை அண்ணனுக்குத் தருகிறேன். பனந்தோப்பை நீ வைத்துக் கொள்'' என்றான்.

சுகீர்த்தி இதைக் கேட்டுப் புன்னகை புரிந்தார். அவர் உள்ளத்திலோ உணர்ச்சியிலோ முகத்திலோ சிறிது கூட மாறுபாடு உண்டாகவில்லை. புயல்காற்று அடித்தாலும் மலை அசைவின்றி நிற்பது போல், அவர் உள்ளம் சலனமற்றிருந்தது.

''தந்தையே! தாங்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு வேத வார்த்தைதான்.

''தங்கள் சொல்லை நான் மறுப்பதாக நீங்கள் நினைக்கக்கூடாது; தாங்கள் பிரித்த பாகப்பிரிவினையை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

''செல்வம் ஒரு அபினி போன்றது; மயக்கத்தைத் தர வல்லது. செல்வம் படைத்தவனுக்குத் தெய்வ சிந்தனை இருக்காது.



''செல்வம் வந்துற்ற காலை தெய்வம்தான் சிறிதும் பேணார் சொல்வன அறிந்து சொல்லார்'' என்பது ஆன்றோர் வாக்கு.

''ஆதலால் எனக்குச் செல்வத்தினும் பகை வேறு இல்லை; நிராசையைத்தவிர வேறு தெய்வம் இல்லை. ஆசையினும் கொடியதும் வேறு இல்லை. மன நிம்மதியைக் கொல்லும் ஆயுதம் பணம்.

''அன்புள்ள அப்பா! எல்லாவற்றையும் என் அன்புக்குரிய அண்ணனுக்கே தந்துவிடுங்கள். ஊருக்கு வெளியே பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ள நமது சோலையில் எனக்கு ஒரு சிறிய குடிசை போட்டுத் தந்துவிடுங்கள். நான் என் மனைவியுடன் அதில் தங்கி விஷ்ணு நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டும், யாருக்கும் எந்த இடைஞ்சல் இல்லாமல் உஞ்சவிருத்தி செய்து கொண்டும் என் வாழ்க்கையைத் தவ வாழ்க்கையாகக் கழிப்பேன். இதுதான் தாங்கள் செய்யும் உதவி'' என்றார்.

சுகீர்த்தியின் இந்த இனிய சொல், தந்தைக்கும் மூத்த மகன் கீர்த்திக்கும் அமிர்தமே வந்து செவியில் விழுந்தது போல் இருந்தது.

''மகனே! உன்னுடைய உள்ளம் கள்ளமில்லாதது; நீ மகாமேதை; பரமஞானி. உத்தமபக்தன். அப்படியே செய்கிறேன்'' என்றார் வஞ்சனை வடிவான தந்தை.

நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்த சுகீர்த்தியின் மனைவி ஒரு சிறிதும் வருந்தினாளில்லை.

தர்மவர்மன் நிலம்புலம், தனம்,மாடமாளிகை அனைத்தையும் மூத்தவனுக்குத் தந்தான். சுகீர்த்திக்கு ஊருக்கு வெளியேயுள்ள நாராயணருடைய ஆலயத்துக்கு அருகில் ஒரு சோலையில் புல் குடிசை அமைத்துத் தந்துவிட்டான்.

சுகீர்த்தி அந்தக் குடிசையில் மகாவிஷ்ணுவின் படம் ஒன்றை வைத்து, சதா அவனுடைய நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தார். வயல்களிலே உதிர்ந்து கிடக்கும் நெல்களைப் பொறுக்கிக்கொண்டு வருவார்.(உஞ்சவிருத்தி என்றால் பொறுக்குவது என்று பொருள்.)

அவ்விதம் சேகரித்த சிறிது தானியத்தைச் சமைத்து நீலமேக நிமலனுக்கு நிவேதனம் செய்து, வந்த அதிதிகளுக்கும் அமுது படைத்து, எஞ்சியதை அவரும்அவரது மனைவியும் உண்பார்கள்.

அந்த ஊரில் ஒரு லட்சாதிபதி காலமானார். அவருடைய மக்கள் தந்தையாரின் உத்தரகிரியை அன்று சுகீர்த்தி அந்தணருக்கு ஒரு பால் பசுவைக் கோதானமாகத் தந்தார்கள்.

பசுவின் பால் சுவாமிக்கு நிவேதனமாகும். அதனால் பால், தயிர், நெய் ஆகியவைகள் குறைவின்றி சுகீர்த்திக்குக் கிடைத்தன.

அந்தப் பசுவைக் கண்ணனுடைய உடைமையாகவே அவர் கருதினார்.

★ ★ ★

''அர்ஜுனா! உனக்குப் புண்ணிய பாவத்தை நேரில் காட்டுகிறேன், என்னுடன் வா'' என்று கண்ணபிரான் கூறி, அர்ஜுனனைத் தம்முடன் அவந்திக்கு அழைத்துச் சென்றார்.

அர்ஜுனனை ஒரு வேதியச் சிறுவனாக்கிக் கொண்டு, தான் முதிய வேதியனாக வடிவெடுத்துக்கொண்டு, கோடீஸ்வரனாகிய கீர்த்தியின் மாளிகைக்கு வந்தார்.

அந்த மாளிகையின் வாயிலில் கத்தியைத் தாங்கி ஒரு சேவகன் நின்றுகொண்டிருந்தான்.

''ஐயா நான் ஏழைப் பிராமணன்; இவன் என் பேரன்; உபநயனம் செய்ய வேண்டும். ஆயிரம் வராகன் தேவை. கீர்த்தி ஐயா உள்ளே இருக்கிறாரா? அவரை நான் பார்த்து உதவிபெற வந்தேன்.'' என்றார் கிழ வேதியர்.

சேவகன், ''பெரியவரே! நீ இவரைப்பற்றிப் பிழையாகத் தெரிந்துகொண்டிருக்கிறாய். உலகத்திலேயே லோபிகளுக்கெல்லாம் இவர்தான் சக்கரவர்த்தி. இவருக்கு மேற்பட்ட லோபியரே கிடையாது. உனக்குப் பணம் கிடைக்காது; உதைதான் கிடைக்கும்.

''இதோ பார்; எனக்கு மாதம் 25 ரூபாய் தருகிறார். எனக்கு என்னவேலை தெரியுமா? உன்னைப்போல் வறுமையால் வாடி வதங்கி வரும் ஏழை எளியவர்களை உதைத்து விரட்டுவதுதான். நான் என்ன பாவம் செய்தேனோ? இந்தக் கொடிய வேலை கிடைத்தது. என்ன செய்வேன்? வேறு வேலை கிடைக்கவில்லை; இந்தப் பாவமான தொழிலைச் செய்கிறேன்.

''உன்னைக் கண்டால் எனக்கு ஐயோ என்ற பச்சாத்தாபம் ஏற்படுகிறது. ஏழைப் பிராமணனாகிய நான் உன்னை அடித்தால் உன் எலும்பு முறிந்து போகும். ஆனால் நீர் காளை மாட்டினிடம் பால் கறக்கலாம் என்று சொம்பைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறீர். ஐயா! வேண்டாம். உடம்பைப் புண்ணாக்கிக் கொள்ளாதே. வந்த வழியாகத் திரும்பிப் போ'' என்றான்.

வேதியர், ''ஐயா! உனக்குக்கோடிபுண்ணியம் உண்டு. எனக்கு உள்ளே போக அனுமதி கொடு. எப்படியும் நான் அந்தப் புண்ணியவானைப் பார்த்து என் குறையை நீக்கிக்கொள்வேன்'' என்றார்.

''பெரியவரே! உன்னை உள்ளே விட்டால் என் வாயிலும் வயிற்றிலும் மண்தான் விழும்; உனக்குஉதை விழும். 'விரதம் கெட்டு சுகமும் கெட்டது' என்ற பழமொழிபோல் நானும் கெட்டு நீரும் கெடுவீர். ஏழையாகிய என்னைக் கெடுக்க வேண்டாம்'' என்றான்.

''ஐயா! உனக்குப் பாதகமில்லாதபடி நான் உள்ளே போவதற்கு ஏதாவது ஒரு யுக்தி செய்.''

''பிராமணரே! ஒன்று செய். எதிரில் உள்ள மண்டபத்தில் இரும். எஜமான் வெளியே சென்றிருக்கிறார்; பத்து இருபது பேருடன் நடுப்பகலில் வருவார்; நீர் அவர்களுடன்மெல்ல உள்ளே நுழைந்துவிடும்'' என்றான் சேவகன்.

கண்ணபிரான் அர்ஜுனனுடன் எதிரில் உள்ள மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார்.

பகல் 12 மணிக்குப் பலர் புடைசூழ கீர்த்தி வந்தான்.

கண்ணபிரான் அர்ஜுனனுடன் மெல்ல அந்தக் கூட்டத்துடன் கலந்து உள்ளே சென்றார்.

**திருமுருக கிருபானந்தவாரியார்**

கீர்த்தி உள்ளே சென்று கூடத்திலுள்ள சிறந்த ஆசனத்தில் அமர்ந்தான். ஒவ்வொருவரையும் தனித் தனியே பார்த்து விசாரித்தான்.

''நீர் வந்த காரணம் என்ன?''

''பதினாயிரம் ரூபா பணம் வேணும்.''

''ஓ! 100-க்கு 5 ரூபாய் வட்டி; முதலிலேயே வட்டி எடுத்துக்கொள்வேன். அநியாயமாக வட்டி வாங்கமாட்டேன். 100-க்கு 6, 7 என்று வட்டித் தொழில் நடக்கிறது. நான் மிகவும் நியாயமாக நடக்கிறவன். ஏதாவது சொத்துஈடு காட்டவேணும்; தெரியுமா.''

''நல்லதுங்க.''

''கணக்கரே! இவரிடம்ஈடு வைத்துக்கொண்டு 100க்கு 5 வீதம் வட்டி எழுதி பதினாயிரம் கொடும்.

''நீர் வந்த காரணம் யாது?''

''ஐயாயிரம் பணம் கட்ட வந்தேனுங்க. பயிர் நன்றாக விளையவில்லை. மழையே இல்லை; பயிரில் பெருத்த நஷ்டம். கொஞ்சம்வட்டி தள்ளிக் கொடுக்க வேண்டும். பிள்ளை குட்டிக்காரனுங்க. நீங்க பெரிய மனது செய்ய வேண்டும்.''

''சீ என்ன சொல்கிறாய்? பயிர் போனாலும் உயிர் போனாலும் எனக்கென்ன? நானே குறைந்த வட்டிக்குத் தானே கொடுத்திருக்கிறேன். ஒரு தம்பிடிகூட தள்ள முடியாது. எனக்கு அதிகம் பேச அவகாசம் இல்லை. கணக்குப் பிள்ளை! இவர் தரும் ஐயாயிரத்தையும் வாங்கி வட்டி கழித்து மிகுதியை அசலில் வரவு வை.''

இப்படி எல்லோரையும் பேசி முடித்துவிட்டு இறுதியில் கிழ வேதியரைக் கண்டு. ''ஐயா! நீர் வந்த காரணம் யாது?'' என்றான்.

''மகாபிரபோ! உம்முடைய தர்ம குணத்தையும், உயர் குணத்தையும் நான் நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். இவன் என் பேரன்; இன்னும் உபநயனமாகவில்லை. உபநயனம் செய்து முடிக்க ஆயிரம் வராகன் ஆகும். கையில் ஒரு காசும் கிடையாது. ஏழைப் பிராமணன். தாங்கள் ஆயிரம் வராகன் தந்து இந்த உத்தமமான உபநயன கைங்கரியத்தை முடித்து வைக்கும்படி வேண்டுகிறேன். உமக்குக் கோடி புண்ணியம்.''

''ஓய்! உன்னை யார் உள்ளே விட்டது? ஆயிரம் வராகனா? அம்மா! ஆயிரம் காசு கூட என்னிடமில்லையே! வாய் கூசாமல்கேட்கிறாயே. ஆளைப் பார் ஆளை! மூளை கெட்ட கிழவா! சேவகனே! இவனை ஏன் உள்ளே விட்டாய்?''

''உங்களுடன் வந்தாரே? உமக்குத் தெரிந்தவர் என்று இருந்தேன்'' என்றான் வாயில் காவலன்.

''தர்மகுண சீலரே! தாங்கள் தர்மராஜா?''

''ஓய்! நானா தர்மராஜா? எங்கே நான் சூதாடினேன்? உனக்குப் புத்தியில்லையா?''

''தாங்கள் அரிச்சந்திரன்.''

''ஓய்! பல்லை உடைப்பேன். நான் அரிச்சந்திரனா? நான் என்ன தாலிகட்டிய மனைவியை ஏலம் போட்டவனா? உனக்கு என்ன திமிர்?'' என்றுகூறி 'பளார்' என்று கிழவேதியின் கன்னத்தில் அறைந்தான் கீர்த்தி.

அருகில் இருந்த அர்ஜுனனுக்குக் கண்கள் சிவந்தன. ''என் எதிரில்உலகம் அளந்த பகவானை இந்த அறிவில்லாதவன் அடிக்கின்றானே! இவனை ஒரே அடியில் யமன் உலகுக்கு அனுப்பவேண்டும்'' என்று கருதிச் சீறினான்.

இந்தக்குறிப்பை உணர்ந்த கண்ணபிரான், ''பேரப்பிள்ளை! இவர் கை பட்டால் எனக்கு அதிர்ஷ்டம் வரும். என்ன செய்வது? ஏழைகளாகிய நமக்குத் தெய்வம் தான் துணை. நீ ஒன்றும் சிந்தனை செய்யாதே. தர்மப் பிரபுவே! உமக்கு மேன்மேலும் செல்வம் ஓங்கி வளர்க.'' என்றுகூறி வாழ்த்திவிட்டுப் புறப்பட்டார்.

சற்றுதூரம் நடந்த பிறகு அர்ஜுனன், ''கண்ணா! நில்; அந்த மூடனிடம் நீ அடிபடலாமா? அடிபட்டதோடு

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெள்ளம்

இல்வாழ்க்கைக்கு துணையாக வருபவள் மனைவி. எனவே தான் வாழ்க்கைத் துணை என்றார் பெருநாவலர்.

அவள் – அந்த மனைவி —எப்படி அமைதல் வேண்டும்? வீட்டுக்கு வீடு வாசல்படி.... எங்கும் சச்சரவுகள் சிறுகச்சிறுக இருக்கும். ஆனால் வாசல்படி தாண்டி விவகாரம் வீதிக்கு வந்துவிடக் கூடாது என்பதே விதி.

எத்தனையோ பேர் அடுத்தவன் மனைவியைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். அடுத்தவன் வாழ்க்கையைப் பார்த்து ஏங்குகிறார்கள். எமக்கு இப்படி வாழ்க்கை வாய்க்குமா? என்ற எண்ணம் அவர்களுக்கு.

அடுத்தவன் மனைவியின் அழகைப் பார்த்துப் பொறாமைப்படுபவர்களை யாரும் கணக்கெடுக்கப் போவதில்லை. அவளின் பண்பும் – கொத்துமலர் போன்ற புன்னகையும் – முகத்தில் தவழும் அகத்தின் அழகும்— பொறுமையும்தான் மற்றவர்களை ஏங்க வைக்கிறது

கோடீஸ்வரன் வீட்டிலும் மில்லியன்கள் பற்றாக்குறை.ஏழைகளின் வீட்டிலோ சில்லறை தேடும் படலம். எங்கும் திருப்தி காணாத உலகம் இது.

மனைவியும் உழைத்துத்தான் வாழ வேண்டும் என்ற பொருளாதாரப் பிரச்சினை எங்குமே பணப் பஞ்சத்தைத் தீர்த்ததாக வரலாறு கிடையாது. சேலைக்குப் போதுமா அவள் வாங்கும் சம்பளம் என்ற நிலைதான்.

உழைத்துத் தரும் மனைவி வேண்டாம். தற்கொண்ட கணவனின் வளத்துக்கு ஏற்ப சரிக்கட்டி வாழும் துணை வேண்டும் என்றார் வள்ளுவர். அது போதும்.

அது வேண்டும் இது வேண்டும் எனச் சக்திக்கு மீறி அடம்பிடிக்கும் பெண்கள் உழைத்தென்ன விட்டு என்ன?

ஆசைகளை – அளவுகளை –மட்டுப்படுத்தி அளவறிந்து வாழும் மனைவி மனைக்குரிய பண்புடையவள் ஆகிறாள். அவளோடு சேர்ந்து வாழும் கணவன் உலகினுக்கோர் உதாரண புருஷன் ஆகிறான்.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற்
கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.
— 0051

(வாழ்க்கைத் துணை நலம்)

— அம்பிகைபாகன் —

# இந்த வார இராசி பலன்

## [14 - 03 - 1998 முதல் 20 - 03 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| செ புத சனி | | | |
| *சூ வி கே | இராசிச் சக்கரம் | | |
| வெ | | | ரா |
| | | | சந் |

மாற்றம்:

15 – 03 – 1998 இல் சூரியன் மீனம் இராசிக்கு மாறும்.

(தொழில் ஸ்தானம்— மாணவர்கள் மட்டும் கல்வி ஸ்தானம் என மாற்றிப் பலனைப் பார்க்கவும்)

இந்திய அரசியலில் திரிசங்கு — தொங்குநிலை. மறுபடியும் தேர்தல்நிலை வரலாம். இலங்கை, இந்தியாவின் பெண் அரசியல் வாதிகளின் புகழ், செல்வாக்கு அதிகரித்த படி இருக்கும். யுத்த மேகம், குண்டுவெடிப்புக்கள், அரசியல் தலைவர்களின் இழப்புக்கள் நடக்க இடம் உண்டு. இருநாடுகளிலும் ஒரு தளம்பல் நிலை, ஆட்சிப் பீடத்தில் அமைதியற்ற தன்மை, எதிர்க்கட்சிகள் எதிர்பாராத திசை திருப்பங்கள் என்பன சர்வசாதாரணமாகும். உலகில் கிழக்கு நாடுகள் மேற்கு நாடுகளை கொள்கையளவில் எதிர்க்கும் தன்மைகள் ஏற்படும். மத்திய கிழக்கில் தொடர்ந்தும் அமைதியற்ற தன்மை ஏற்படச் செய்யும். அமெரிக்க ஜனாதிபதிக்குச் சோதனைக் காலமாகும்.

★ 25 – 5 –1998 க்குப் பின்பு இந்திய அரசியலில் பெரிய மாற்றங்கள் ஏற்படும்.

மேடம்: உங்கள் ஊக்கத்தை கைவிடக்கூடாது. புத்திசாதுரியமாகச் செயற்பட்டுச் தொழிலில், பொருளைப் பெருக்க முயற்சி எடுத்துக் கொண்டிருங்கள். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் அல்லவா? மனதில் பட்டதைச் சட்டென்று சொல்லி விட்டுக் கலங்குவீர்கள். வெய்யில் காலமாகும். அதிக நீரும் அறுசுவை உண்டியும் அவதானமாகச் சாப்பிடுங்கள். அடிக்கடி யோசனை, களைப்பு, கைகால் பிடிப்பு, பலவீனம் என்பன வந்து வருத்தும். பொருள்களில் கவனமாக இருக்கவும். அல்லது மறதியால் பொருள் இழப்புக்கள் ஏற்பட்டு வருத்தும். ஏழரைச்சனி சோதனை தரும். அர்ச்சனை செய்யவும். குலதெய்வ வழிபாடு நன்மை தரும்.

★ அதிர்ஷ்ட நாள்:– திங்கள், வெள்ளி.

இடபம்: இடைவிடாத முயற்சி, அடிக்கடி கோபம், எதையும் நம்பும் நிலையில் இல்லாதநிலை, எதிர்ப்பாலாரை அனுசரித்து நடக்காத நிலை என்பன சர்வசாதாரணமாகும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள், நண்பர்கள் உதவி செய்வார்கள். களைப்பு, சளித் தொல்லை, நரம்பு விறைப்பு, சலவருத்தம், கண்ணில் நோ என்பன இடைக்கிடை வருத்த இடம் உண்டு. வெளிநாட்டு உதவிகளைப் பெரிதாக எண்ணா விட்டாலும் சிலருக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். பிரயாணம், இடமாற்றங்களை நிதானமாகச் செய்துவரவும்.

★ அதிர்ஷ்டநாள்:– புதன்.

மிதுனம்: ''பாவ புண்ணியம் பார்த்தால் இலாபம் பார்க்க முடியுமா எனச் சொல்லுவீர்கள். உலக ஓட்டத்தை கொஞ்சம் அனுசரித்துப் போனால்தான் சமாளிக்க முடியும். தொழில் துறையில் நற்பலன், உதவிகள் கிடைக்கும். வயிற்றில் நோ —காலில் காயம் ஏற்பட இடம் உண்டு. அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும். எதிர்ப்பாலாருடன் ஏட்டிக்குப் போட்டி ஏற்படுத்தாமல்— நிதானமாக நடந்து கொள்ளுங்கள். புதிய திட்டம், புதிய பேச்சு வார்த்தைகள் ஏற்பட இடம் உண்டு. இருப்பினும் பெரியவர்கள், அனுபவசாலிகளின் ஆலோசனைப்படி செயற்படவும். விரலுக்குத் தகுந்த வீக்கப்படி நடக்க வேண்டும்.

★ அதிர்ஷ்டநாள்:– புதன், வெள்ளி.

கடகம்: விதிவசப்பட்ட பலன்கள் நடக்கும். உங்கள் பிடிவாதம் உங்களை வருத்தலாம்: பெரியவர்களின் ஆலோசனைகளை அனுசரித்து நடந்தால் அதிகநன்மை அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் அமைதி இருக்காது. இரட்டை மனம், இரட்டைப் போக்கு உங்களை... ரும் இலகுவில் விளங்... யாதவாறு உங்கள் செயல்கள் இருக்கும். மற்றவர்களின் அன்புக்கும், மதிப்புக்கும் ஆளாகியிருக்கும் நீங்கள் எதிர்ப்பாலாரின் சொற்படி செயற்படுங்கள். அதனால் நன்மைகள் ஏற்படும். தெய்வ வழிபாடு முக்கியமாகும். பலவித கலை ஞானங்களை அறிந்து செயற்பட்ட படி இருப்பீர்கள். பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது.

★ அதிர்ஷ்டநாள்:– புதன்.

சிங்கம்: உங்களுக்கு அட்டமத்துச்சனி நடக்கின்றது. இன்பத்தில் துன்பமும், துன்பத்தில் இன்பமும் இப்போது மாறி மாறி நடக்கும். கோயிலில் பாதிக்காலமும், பதவியில் மீதிக்காலமும் ஓடும். நாடி ஓடித் தேடும் விஷயத்தில் இரகசியம் காப்பாற்றும் மனம் இருந்தால் வெற்றி அடைவீர்கள். இடாம்பீகச் செலவுகள், புத்திரருக்காகவோ அல்லது சகோதரங்களுக்காகவோ அதிக பிரயாசைப்படுவீர்கள். அவர்களின் முன்னேற்றத்திற்காக ஓடியாடித்திரிய வேண்டிவரலாம். குலதெய்வ வழிபாடு மிக முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்:– வெள்ளி.

கன்னி: உங்களுக்கு கால ஓட்டமையத்தில் எல்லா உதவிகளும் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் விட்டு விட்டுப்பலன் கொடுக்கும். அடுத்து வரும் காலங்களில் புதிய மாற்றங்கள் ஏற்படும். வயிற்றில் நோ, குடலில் கிருமித்தாக்கம் — சலவருத்தம் கொடுக்கலாம். சாப்பாட்டில் அவதானமாக இருக்கவும். நீங்கள் காரியகாரர். கோபத்தை அடக்கி புத்தி சாதுரியமாக நடந்து காரி

## சோதிட சஞ்சீவி

## மகாதேவா ஜோதிடம்

நல்லூர்

யத்தைச் சாதிக்க முயலுவீர்கள். பணத்தில் அவதானமாக இருக்கவும். மனம் அடிக்கடி அவதிப்பட இடம் உண்டு. நிதானமாக — இரகசியாக — எந்த விஷயங்களிலும் செயற்படுங்கள். அதனால் காரிய வெற்றி கிடைக்கும்.


★ அதிர்ஷ்டநாள்:. புதன், வெள்ளி.

துலாம்: எங்கள் வீட்டுச் ... எதிர் பார்க்க முடியாது அல்லவா?

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 41



சொற்சிலம்பம் இல. 41
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 20 — 03 — 1998

**இடமிருந்து வலம்**

1. உடலில் கட்டியாக இருக்கும் பகுதியை இப்படியும் அழைப்பர். 4. பிரமிட்டின் வடிவம். 6. சுவையுணர்வு 7. ஏறத்தாழ என்பதைக் குறிக்கும். 9. ராமன் தனது தம்பி என இவனை அழைத்தான். 10. அண்ணன். 12. 'சுய' என்பதைக் குறிக்கும். 13. திறப்பு. 14. இரைவாசி. 15. அன்புடையவரின் இது பிறர்க்கு உரியது? 17. வயலில் நெல்லுடன் வளர்வது. 18. அடையாளம். 19. அடைக்கலம். 20. கடிதம். 22. சடுதி என்பதைக் குறிக்கும் சொல். 23. அழிவற்ற செல்வம் இது,

**மேலிருந்து கீழ்**

1. முறுக்குதல்.. 2. விசிறி. 3. குழந்தை. 4 தீட்டப்படுவதால் வருவது. 5. ஒரு கிழமை; கோளும் கூட. 8. கண்ணகிக்குப் போட்டியாக வந்தவள். 11. உயிர்களை அழிப்பவன் இவன். 13. இது இரண்டொழிய வேறில்லை. 14. குறுநில மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தை இப்படிக் கூறுவர். 15. வீசுதல். 16. அழிவைத் தரும் இயற்கை அனர்த்தம். 17. வஞ்சகம். 19. உயர்ந்த அல்லது கூடிய. 21. பாவம் செய்தவன்.

### சொற்சிலம்பம் 39 — முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. சுபாவம். 4. கபாலி 6. வாக்கு. 7. பந்தி. 8. சகிப்பு. 10. தரிசு. 12. புத்தன். 15. தின் 16. பார். 17. பேச்சு. 18. மதில். 20; தசை. 21. மாதிரி. 23. சாமி. 24. கைம்மை.

**மேலிருந்து கீழ்**

1. சுவாசம். 2. பாக்கி. 3. வகுப்பு. 4. கந்தன். 5. பாதிரி 9. புத்தி. 11. சுடர். 13. தண்மதி. 14. பச்சை. 16. பால். 17. பேதமை. 19. திரிகை. 21. மாமி. ஆமை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: கே. பி. சிவானந்தா,
உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு: சி. நிருத்தாஞ்சலி,
ஆண்டு 7,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: வி. செல்வநாயம்,
126/4, பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 40 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரை மீது மோகம்

தனது கணவர் பெண் குதிரை ஒன்றுடன் பாலியல் உறவு கொண்டதாக மனைவி ஒருவர் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆர்ஜென்ரீனாவின் தென்மேற்கு நகரமான ரொஸாரியோவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இரவு நீண்ட நேரமாக தனது கணவன் வீடு திரும்பாததை அடுத்து தான் அவரைத் தேடிச்சென்ற போது பெண் குதிரைக்குட்டி ஒன்றுடன் அவர் பாலியல் உறவில் ஈடுபட்டிருந்ததைக் கண்டதாகவும், அயலவர்கள் சிலரும் அவரது செயலை அவதானித்துக் கொண்டிருந்ததாகவும் டெலியா டெக்குவஸ் கொண்டராஸ் என்ற அந்தப் பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். ★

# வயதானோரின் பானம்

இந்தியாவில் கோப்பி அருந்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மாறிவரும் சூழலில் கோப்பி அருந்துவதை பல இளம் தலைமுறையினர் தவிர்க்கின்றனராம். வயதானவர்களின் பானமாக கோப்பியை கருதுவதுதான் இதற்குக் காரணம்.

மேலும் கோகோ கோலா, பெப்சி அருந்துவதை இளம் வயதினர் பெரிதும் விரும்புகின்றனர். சூடான பானம் தேவைப்பட்டால் கோப்பியை விட தேநீர் அருந்துவதையே விரும்புகின்றனர். மேலும் இந்திய பானங்கள் சந்தையில் கோப்பி நுகர்வின் அளவு 5.4 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. தேயிலை நுகர்வின் அளவு கணிசமாக உயர்ந்துள்ளது. இந்திய வீடுகளில் 91 சதவிகிதம் பேர் தேநீரையே பெரிதும் விரும்புகின்றனர்.

இந்தியாவில் மட்டும்தான் கோப்பிக்கு இந்தசோக நிலை பிற ஆசிய நாடுகளில் அது சூடு பறக்க விற்பனையாகிறது.


# ஒரு வாரத்தில் ரூ.400 கோடி வசூல் தந்த திரைப்படம்

அமெரிக்காவில் அண்மையில் வெளியிடப்பட்ட படம் ''டைரானிக்''. உலகத் திரைப்படத் துறை வரலாற்றிலேயே மிக மிக அதிக பொருள் செலவில் தயாரிக்கப்பட்ட படம் இது. இத்துடன் ''ருமோரோ நெவர் டைஸ்'' (TOMORROW NEVER DIES) என்ற ஜேம்ஸ் பொண்ட் படமும் அமெரிக்காவில் வெளியாகியுள்ளது. இந்த இரு படங்களும் வசூலில் மாபெரும் உலகசாதனையைப் படைத்துள்ளன.

''ருமோரோ நெவர் டைஸ்'' வெளியிடப்பட்ட முதல் வாரத்தில் மட்டும் 400 கோடி ரூபாவை வசூலாக அள்ளிக் கொடுத்துள்ளது. ★

# ஈர் பேனாகி....!

''பிரிட்டன் அழுக்கான, அசுத்தமான மக்கள் நிறைந்த ஒரு நாடாகிவிட்டது'' — என்கிறார் விஞ்ஞானி லான் பார்கீஸ். இவர் பூச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.



''50 சத விகிதத்துக்கும் குறைவான வீடுகளில் தான் சீப்புகளைப் பயன்படுத்துகின்றார்கள்'' என்கிறார் இவர்.

பிரிட்டன் மக்களில் பேன் தலையர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் மிக அதிக அளவில் பெருகிவருவதாகச் செய்திகள் வந்துள்ளதையடுத்து பர்கீஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

பேன்மருந்துகளுக்கு எக்கச்சக்க கிராக்கி. இவற்றின் தேவை மேலும் பன் மடங்கு அதிகமாகலாம் என்று கூறுகிறார்கள். ஈர் பேனாகி, பேன் பெருமாளான மாதிரி இந்தப் பேன் விஷயமும் பிரிட்டனில் பெரிதாகிவிட்டது. ★

# சாதனை புரிந்தவர் சதி!

1911ஆம் ஆண்டு பாபி லீச் என்பவர் பீப்பாய் ஒன்றின் மேல் அமர்ந்தபடி நயாகரா நீர்வீழ்ச்சியைக் கடந்து மிகப் பெரும் சாதனையை நிகழ்த்தி உலகப் புகழ் பெற்றார். தனது சாகசம் பற்றிச் சொற்பொழிவாற்ற உலகின் பல நாடுகளுக்குச்சென்றுவந்தார்.



நயாகராவைத் தாண்டிய இந்த மனிதர் நியூசிலாந்துக்குச் சென்றிருந்தபோது அங்கு ஒரு வாழைப்பழத் தோலில் சறுக்கி வழுக்கி விழுந்தார். பலத்த காயம். சாதாரண காயமாக இல்லாமல் ஏதோ ஏடாகூடமாகி மனிதர் அங்கேயே இறந்து போனார்.

# ஒற்றைக் கால் தவம்

கொக்குகள் ஒற்றைக் காலில் நின்றுஓய்வு எடுப்பது வழக்கம். கொக்குகளைப் போன்று ஒற்றைக் காலில் நீண்டநேரம் நிற்கும் மனிதர்களும் உலகில் வசிக்கின்றனர். ஆபிரிக்காவில் உள்ள சூடான் நாட்டில் 'ஷில்லுக்கு'' என்னும் பழங்குடி மக்கள்தான் இவ்வாறு நீண்ட நேரம் ஒற்றைக் காலில் நின்று தவம் புரிகின்றன. இவ்வாறு செய்தால்தான் கடவுளின் அன்பு கிடைக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

பஞ்சாமிர்தம்

# மாடு தின்ற நாவல்

''தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஹோலேயா மக்களுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நாவல்தான் 'சோமன துடி'- இதை எழுதிமுடிக்க எனக்கு ஐந்து நாள்கள்தான் ஆயிற்று. இந்தப் புத்தகத்தை முதன் முதலாகப் பாராட்டியது... மனிதனல்ல. ஒரு மாடு...! மங்களூரில் வாழும் மக்களை விட அங்குள்ள மாடுகளுக்குத்தான் புத்தகங்களென்றால் அலாதி பிரியம் போலும். நான் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பிரதிகளைக் கவ்விக்கொண்டு ஓடிய மாடு ஒன்றை விரட்டிப் பிடித்து அவற்றை மீட்டேன். அது தின்று தீர்த்த பகுதிகளை மீண்டும் எழுதி அந்தப் புத்தகத்தைப் பிரசுரித்தேன் என்றார்'' ஒரு பிரபல நாவலாசிரியர். அவர் யார் தெரியுமா? ஞானபீட பரிசு பெற்றவரான சிவராம் காரந்த். அவர் சமீபத்தில் காலமானார். ★

# பாவ, புண்ணியம் என்றால்...

(VII ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமையாமல் அவனை வாழ்த்துகிறாயே? என் உள்ளமும் உணர்ச்சியும் துடித்தன. என்னையும் அடக்கி விட்டாய். இது என்ன விஷயம்?'' என்றான்.

''அர்ஜுனா! சற்றுப் பொறு. நீ என்னை என்ன கேட்டாய்? புண்ணிய பாவத்தை காட்டு என்றாய். அதை நேரில் காட்டப் போகிறேன் வா'' என்றார்.

கண்ணபிரான் கிழ வேதியராகவும், தனஞ்சயன் மறைச் சிறுவனாகவும் வடிவம் கொண்டு சுகீர்த்தி வாழும் குடிசைக்குச் சென்றார்கள்.

சுகீர்த்தி நெல் பொறுக்கும் பொருட்டு வெளியே சென்றிருந்தார்.

சுகீர்த்தியின் மனைவியார் இன்முகம் காட்டித்தாயினும் சாலப்பரிவுடன் வரவேற்று இன்னுரை கூறினார்.

''மாதவரே! தாங்கள் எங்கள் குடிசைக்கு வர நாங்கள் என்ன மாதவம் செய்தோமோ? வருக, வருக, இருந்துஆகாரம் புசியுங்கள்'' என்றார்.

வீட்டில் ஒரு அரிசியும் அப்போது கிடையாது.

அந்தப் பெண்மணியின் தூய அன்பைக்கண்டு கண்ணனுக்கும் விஜயனுக்கும் உச்சி குளிர்ந்தது.

''அம்மா! நாங்கள் சென்று நீராடி உச்சி நேரத்துக்கு வந்து விடுகிறோம்'' என்று கூறிச் சென்றார்கள்.

சுகீர்த்தி நெல்லுடன் வீட்டிற்கு வந்தார்.

வந்தவுடன், ''பெண்மணி! யாராவது அதிதிகள் வந்தார்களா'' என்று வினாவினார்.

''சுவாமி வயோதிக வேதியரும், ஒரு சிறு பாலகனும் வந்தார்கள். உணவுசெய்யச் சொன்னேன். நீராடி வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்'' என்றாள்.

''மிகவும் மகிழ்ச்சி, சீக்கிரம் இந்த நெல்லைக் குத்திச் சமையல் செய். ஒரு கீரை கடைந்துவை; ஏடுடன் கூடிய தயிர் இருக்கட்டும். இன்று நல்லநாள்'' என்றார்.

மனைவியார் பம்பரமாகச் சுழன்று ருசி ருசியாகச் சமையல் செய்தாள்.

பகல் 15 நாழிகைக்கு வேதியர் தள்ளாடிக் கொண்டு பேரப்பிள்ளையுடன் வந்தார். சுகீர்த்தி அவரை அன்புடன் உள்ளங் மலர்ந்து உவகையுடன் வரவேற்றார்.

''பெருமானே! வருக, வருக!'' என்று சொல்லி திருவடியில் வீழ்ந்து வணங்கினார்.

இருவரையும் அழைத்துக் கொண்டுபோய் இரண்டு பீடங்களில் அமர்த்தினார். இரு வாழையிலைகள் இட்டுப பக்தியுடன் அன்னம் படைத்தார்.

கிழ வேதியரும் பேரனும் அமர்ந்து உணவு உட்கொள்ளத் துவங்கினார்கள். சுகீர்த்தி விசிறிக்கொண்டு நின்றார்.

மனைவியார் ஆயிரம் தாய்களின் அன்பு ஒன்றுகூடித் திரண்டதுபோல் குறிப்பறிந்து அமுது படைத்தார்கள். பக்குவமாகக் காய்ச்சி உறைவிட்ட பசுந் தயிர் கொணர்ந்து படைத்தாள். கிருஷ்ணர் அதைப் பிசைந்து வாயில் வைத்து, ''ஆ! ஆ! என்ன சுவை! சாட்சாத் கண்ணபிரான் ஆயர்பாடியில் உண்ட தயிர்கூட இந்தத் தயிருக்கு இணையாகாது. ச்சா... ச்சா...'' என்று நாவைத் தட்டினார்.

அந்தக் கணத்திலேயே எதிரில் இருந்த பசு மாடு துள்ளி விழுந்து மாண்டுவிட்டது.

இதை அர்ஜுனன் பார்த்தான். அவனது கண் சிவந்தது. ''இந்தத் திருட்டுக் கண்ணன் செய்வது அநியாயம்; அடித்தவனை அங்கே வாழ்த்தினான். அன்னம் தந்த அந்தணனுடைய பசுவை இங்கே கொன்றுவிட்டான் கண்ணன்! ஐயோ பாவம்! பசு இருந்தால் பாலையாவது கறந்து பாலும் மோரும்குடிப் பார்கள். ஏழைகள் வயிற்றில் கண்ணன் இப்படி அடித்து விட்டானே இந்த மாய கிருஷ்ணன் செய்த மோசம்?'' என்று எண்ணிக் குமுறினான்.

அர்ஜுனன் மனநிலையைக் கண்ணபிரான் அறிந்தார்.

''ஐயோ! என் நாக்கு பொல்லாத நாக்கு; நான் சொன்னவுடன் அருமையான பசுமாடு இறந்துவிட்டதே; நான் மகாபாவி'' என்றார்.

சுகீர்த்தி, ''சுவாமீ! தாங்கள் வருந்த வேண்டாம்; பசுவுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? பசுவைத் தந்த இறைவன் அதை மீண்டும் வாங்கிக் கொண்டான். பெருமானே! எல்லாம் ஈசன் செயல்; நம்மால் ஓர் அணு அசையுமா? நன்றும் தீதும் நாராயணன் செயல்'' என்றார்.

சாப்பிட்டு முடிந்ததும் கிழ வேதியர் வாசலில் கையலம்பச் சென்றார்; இறந்த பசுவின் கன்று அங்கு நின்று கொண்டிருந்தது.

''ஆ! கன்று நிற்கும் அழகே அழகு; வெள்ளை வெளேர் என்று காமதேனுவின் கன்றுபோல் இருக்கிறதே; இதன் கண்ணழகும் கழுத்தழகும் நான் எங்கும் கண்டதேயில்லை'' என்றார்.

அவ்வளவுதான்! அந்த விநாடியிலேயே கன்றுக்குட்டி துள்ளி விழுந்து இறந்து போயிற்று.

இதைக் கண்ட அர்ஜுனனுக்குச் சொல்ல முடியாத கோபம். ''என்ன இப்படி இந்தக் கிருஷ்ணன் அநியாயம் செய்கிறானே! இந்தக் கன்றுக்குட்டியிருந்தாலும் மூன்று ஆண்டில் வளர்ந்து கன்று ஈன்று பால் தருமே? அதற்கும் உலை வைத்துவிட்டானே?'' என்று நினைத்தான். கண்ணனை நன்றாகத் திட்ட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

கண்ணபிரான், ''ஐயோ! என் நாக்குத்தான் பொல்லாதது என்றால் கண்ணும் பொல்லாதது போலும். பாவம், இந்தக் கன்றும் இறந்து விட்டதே; ச்சே, ச்சே'' என்றார். கிழ வேதியர் சுகீர்த்தியைப் பார்த்து, ''உத்தமரே! நீர் சுகமாக இரும்'' என்று வாழ்த்தி விட்டுப் புறப்பட்டார்.

ஊர் தாண்டியவுடன் இருவர் உருவங்களும் மாறிவிட்டன.

அர்ஜுனன்: ''கிருஷ்ணா! நில். ஏழை அந்தணன் வீட்டில் சோறு தின்றுவிட்டு, அவனுடைய பசுவையும் கன்றையும் அநியாயமாகக் கொன்றுவிட்டாயே! இது நியாயமா? இது உன் கருணைக்கு அழகா?''

''அர்ஜுனா! நீ என்னை என்ன கேட்டாய்? புண்ணிய பாவம்தானே? வா, காட்டுகிறேன்.''

பகவான் பார்த்தனை அழைத்துக்கொண்டு சென்றார்.

வழியில் நரக உலகம் எதிர்பட்டது. அங்கே திகுதிகு என்று எரிந்துகொண்டிருந்த பல நெருப்புக் குழிகள், கொதித்துக் கொண்டிருக்கும் எண்ணெய்க் கிணறுகள் இருந்தன. 'அவற்றில் ஒரு நரகக் குழியின் எதிரில் 'பாவி கீர்த்தி' என்று எழுதிய ஒரு பலகை தொங்கிக் கொண்டிருந்தது.

ஸ்ரீ கிருஷ்ணர் அங்குள்ள யமபடர்களைப் பார்த்து, ''அப்பா இது என்ன?'' என்று ஒன்றும் தெரியாதவரைப் போல் கேட்டார்.

அங்கிருந்தவர்கள், ''ஐயா! அவந்தியில் கீர்த்தி என்ற பாவிப் பிராமணன் ஒருவன் இருக்கிறான். அவன் ஏழைகள் வயிற்றைக் கொதிக்க வைக்கிறான்; கூடிய சீக்கிரம் அவன் இங்கு வரப்போகிறான். அவனுக்காக நரகம் இந்த இடத்தை இப்போதே தயாராக வைத்திருக்கிறது'' என்றார்கள்.

பின்னர் அர்ஜுனனை அழைத்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணர் வைகுந்தம் சென்றார்.

அங்கே ஸ்ரீ நாராயண மூர்த்தியின் நவரத்தினமயமான திருக்கோயில் கோடி சூரியப் பிரகாசமாக ஒளி செய்துகொண்டிருந்தது; அந்தத் திருக்கோயிலின் அருகில் ஒரு பொற்கோயில் புதுக்கிக் கொண்டிருந்தார்கள்.

மாற்றுருவம் தாங்கிச் சென்ற கண்ணபிரான் கோயில் புதுக்கும் சிற்பியரைப் பார்த்து, ''ஐயா! இது என்ன கோயில்? யாருக்கு?'' என்று விசாரித்தார்.

அதற்கு அங்கிருந்தவர்கள், ''சுவாமி! அவந்தியில் சுகீர்த்தி என்ற பரம பக்தர் ஒருவர் இருக்கிறார். அவர் எம்பெருமானுக்கு ஒரு வேளை அன்னம் கொடுத்தார்; அவருக்காக இந்தப் பொற்கோயில் புதுக்குமாறு அரிகேசவருடைய ஆணை'' என்றார்கள்.

''ஓ! ஒருவேளை உணவு தந்ததிற்கு இவ்வளவு பெரிய பொற்கோயிலா?'' என்று சுவாமி கூறிவிட்டு, அர்ஜுனனை அழைத்துக்கொண்டு சிறிது தூரம் போனார்; அங்கு அழகிய கற்பகச் சோலையில் பசுவும் கன்றும் புல் மேய்ந்து கொண்டிருந்தன.

அர்ஜுனன் ''கண்ணா! இது என்ன ஆச்சரியம்; அங்கு நாம் சுகீர்த்தியின் வீட்டில் பார்த்த பசுவும் கன்றும் இங்கே இருக்கின்றனவே?'' என்று கேட்டான்.

''தனஞ்சயா! ஆம்; நான் அடியாருக்குஎளியவன்; பக்த வத்சலன்; தீனதயாளன். சுகீர்த்தியின் அன்னம் உண்டதனால் நான் அவனுக்குக் கடமைப்பட்டு விட்டேன். அவனுடைய பசுவையும் கன்றையும் கொண்டுவந்து இங்கே காப்பாற்றிக்கொண்டிருக்கிறேன்; அந்தப் பக்த சிகாமணி இங்கு வரும்போது அவனுடைய உடைமைகளை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்'' என்றார்.

இதைக் கேட்ட விஜயன் வியப்புற்றான்.

''ஆ! ஆ! என்னே இறைவனுடைய கருணைத்திறம்! கண்ணா! மணிவண்ணா! எம் பெருமானே! புண்ணிய பாவத்தை நேரே கண்டேன்; சந்தேகம் தீர்ந்தது. அப்பனே! உன் திருவருளால் கண்கூடாக இவற்றைக் கண்ணுற்றேன்; அடியேனால் உனக்கு இத்துணை வருத்தம் ஏற்பட்டது; கருணைக் கடலே! எளியேனை மன்னிக்கவேணும்'' என்றான்.

கண்ணனின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகள் இறங்குவதில்லை

மு. சிவநேசன்

பாகம் 9

கட்டிலால் இறங்க முற்பட்டு இடறி விழுந்து சாயம் பட்டு விட்டதாகவும் — விழும் போது 'கமலா', 'கமலா' என்று அவர் கத்தியதாகவும் கேள்விப்பட்டேன். எனது நிம்மதி எங்கோ போனது. வாழ்க்கை வெறுக்கலானது.

எதிர்பார்த்ததை விட கூடிய நாள்கள் மேலும் வைத்தியசாலையில் தங்கவேண்டிய நிலைமை. எனக்காகத் தவிக்கும் இவரை தவிக்க விட்டன்றோ நான் நேரம் கிடைக்கும் போதெல்லாம் வேடிக்கை பார்த்தேன்? இனிமையாகப் போயிருக்க வேண்டிய பொழுதுகளை வீணடித்தேன். இப்போது ஏங்கி என்ன லாபம்?

இரண்டொரு மாதங்கள் கழிந்து அவர் காலை இழுத்து இழுத்து அலுவலகத்துக்கு வந்த காட்சி அனைவர் மனதையும் பிசைந்தது என்றால் எனது நிலமையைச் சொல்லவா வேண்டும்? இனியும் இவரால் தனித்துச் சமாளிக்க இயலாது என்ற நிலமை.

எங்கள் இருவரின் வேண்டுதலின் பேரில்தான் எனது அம்மாவும் அவரின் தாயாரும் சந்தித்துக் கொண்டனர். ஆடம்பரம் அற்ற முறையில் மிக எளிமையாக நடந்தேறிய எமது திருமணம், பல வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தது.

திருமணம் நடந்த அன்று இரவு இவர் சொன்னார். "என் அம்மா இவ்வளவு சீக்கிரம் விட்டுக் கொடுத்து இருக்க மாட்டா. சீதனச் சந்தையில் பெரும் பேரங்கள் பேசவே துடித்திருப்பா. நல்ல வேளையாக அடிபட்டுப் போனதில் ஊனம் ஆகிச் சீதனச் சந்தையில் விலை போக மாட்டாதவன் ஆயிட்டேன். எல்லாம் நன்மைக்கே" — என்றார்.

என்னத்தை எவர் சொன்னாலும் என்னுள்ளே இருக்கும் குற்ற உணர்வு சாகும் வரை மடியாது. என் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பிலும் அது என்னைக் கலங்கடித்துக் கொண்டே இருக்கிறது.

நாதியற்று இருந்த எனது குடும்பச் சுமையை இவரே குறைநிறை பார்த்துத் தாங்க வேண்டிய நிலமை எழுந்தது. இவர் வந்து புகுந்த ராசியோ என்னவோ செலவுகள் வலுக்கத் தொடங்கின. இவரும் பார்த்துப் பாராமல்

**சஞ்சீவி குறுநாவல்**

ஓகோ என்று செலவழிப்பதில் மன்னர்தான். அதைச் சாதகமாக என் வீட்டார் பயன்படுத்த நான் பாராமுகமாக விட்டுவிட்டதும் இவருக்கும் என் பிள்ளைகளுக்கும் நான் செய்த துரோகம்தானோ?

தம்பி கபிலனுக்கு மெடிக்கல் கிடைத்திருந்தது. அவன் ராஜா வீட்டுப் பிள்ளையாட்டம் ஒரு குறையும் இல்லாமல் படித்து வெளிக்கிட்டான். இவரும் பெருமிதத்துடன் அவனை ஆளாக்கித் திருப்தி கண்டார். அவ்வளவுதான். கடைசி மாதம் காசு அனுப்பியபின் — வேலை கிடைத்தபின் — ஆடிக்கொருக்கால் அமாவாசைக்கொருக்கால் ஒரு வரி 'பிரிஷ்கிப்ஷன்' மாதிரி கடிதம் எழுதுவான்.

நாட்டுப் பிரச்சினை நல்ல சாட்டு. ஊருக்கு வரத் தேவையில்லை. வர நேரமும் இல்லை. மேலே ஏதோ படிக்கிறானாம். அவனுடைய 'கேர்ள்' உம் அதே படிப்புத் தானாம். படிப்புக்கே சம்பளம் போதாதாம். வெளிநாடும் போக வேணுமாம். இப்படி அவன் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

அடுத்தவனுக்கு வெளிநாட்டுப் பைத்தியம். அவனை அனுப்ப கொழும்புக்கு அலைஞ்சு களைச்சு ஏஜென்சிகாரனிடம் ஏமாந்து ஒருபடி பிளேன் ஏறினான். அடுத்த கிழமை கட்டுநாயக்காவிலை கொண்டு வந்து இறக்கி விட்டார்கள். பொலிஸிலை இருந்து திரும்பவும் வெளியிலை எடுத்து திருப்பியும் அனுப்பி வைக்க போதும் போதும் என்றாச்சு.

அங்கே போய் சரியான வேலை கிடைக்குதில்லை என எழுதுகிறான். தங்கச்சி கல்யாணத்தையும் ஏதோ உள்ளதுக்கை வள்ளிசா நடத்தி விட்டார்.

என்னைக் கட்டையுக்கை ஓரளவு கையில காசோடை இருந்த மனுசனை இப்பிடி ஒட்டாண்டி ஆக்கின பெருமை எனக்கும் என் குடும்பத்துக்கும்தானே! இது போதாதெண்டு இரண்டு செத்தவீடுகள் அடுத்து அடுத்து நடத்தினதும்.



என்ர அம்மாவும் அவரின்ரை அம்மாவும் போட்டி போட்டுக்கொண்டு போய் விட்டினம். சுந்தரம் மாமா ஒப்புக்கு வந்து 'தங்கச்சி' எண்டு அழுதார். ஒரு சதம் கையை விரிக்க இல்லை. எல்லாம் இவர்தான்.

இப்படியே நாள்கள் நகர எங்கள் பிள்ளைகளும் வளர படிப்புச் செலவுகள் அது இது என்று குறைச்சல் இல்லை.

என்னதான் சிரிச்சு சிரிச்சு அலுவல்களை ஒப்பேத்தினாலும் அவர் மனதிலை சுமைகள் இருந்திருக்கும். என்னிடமும் சொல்லி முடிக்க வழி இருந்திராது. எப்போதும் செலவுச் சுமை தொடர்ந்து வந்ததால் பொருளாதாரப் பிரச்சினை எழும். இருவரின் சம்பளங்களையும் மீறிய சீவியம். ஆடம்பரமாகச் சீவிக்காத போதும் இடைக்கிடை பெரிய செலவுகள் வந்து எல்லாவற்றையும் கெடுத்து விட்டுப் போய்விடும்.

விபத்தை தொடர்ந்து சரிவர நடக்க இயலாத நிலமை. இடைக்கிடை என் கண்காணிப்பு குறையும் நேரம் தடுக்கி விழுந்திடுவார். காயங்கள் வந்தால் மாறச் சலரோகம் இடம்தராது. இப்படி நோயோடு போராட வேண்டிய சூழ்நிலையும்.

அலுவலகச் சீவியம். தப்பினால் ஆஸ்பத்திரிச் சீவியம். நிலமை மோசமா இருக்கிறதாலை வடக்கே வைத்திய வசதிகளும் குறையத் தொடங்குகின்ற காலம். மருந்துகளுக்கும் வைத்தியர்களுக்கும் தட்டுப்பாடும்.

தொலைவில் இருக்கும் எனது தம்பிமாரின் தொடர்புகள் கிடையா. அவன் பெரிய பெயரெடுத்த வைத்தியன். இங்கே நாங்கள் நோயிலை தவிக்கும்போது படிப்பித்த களை தெரியுது. வெளிநாட்டுக்கு அனுப்பியவன் ஜொலி பண்ணித் திரிகிறான். பட்ட கடனைக் கொஞ்சம் அடைச்சு உதவி செய்திடுவம் என இரங்குகிறான் இல்லை. இவரும் வாய் விட்டுக் கேட்க மாட்டார். என்னையும் எழுத விடமாட்டார்.

இவரின் உடல்நிலை மோசமடையவும் நான் மிகவும் சிரமப்பட்டேன். அலுவலகத்துக்கு அடிக்கடி மட்டம் போட சம்பள வெட்டு — இருவருக்கும்தான். பத்து வயதுச் சுபியும் பதின்நாலு வயது சத்யனும் கூட கொஞ்சம் அலைஞ்சு தவிச்சுதான் ஸ்கூல், ரியூஷன் போய்படித்தார்கள். அடிக்கடி வீட்டிலை சமையல் தடைப்படும். கடைச் சாப்பாட்டில் வீடு ஓடும்.

அளவுக்கு மீறின அன்பும் பொறுமையும் கருணையும் கொண்டு என்னை விரும்பின நாள் முதல் எனக்காகப் பல சோதனை வேதனைகளைச் சுமந்து மெழுகுதிரியாக உருகி விட்டார். எல்லாம் என் மனதைப் பிசையும் நிகழ்வுகள்.

நோய் முத்தி அவர் படுக்கையில் அவஸ்தைப்பட்டு எங்களை விட்டுப் பிரிந்தகதை கண்ணில் இரத்தம் சிந்த வைக்கும். சோகச் சுமைகளும், குடும்பச் சுமையும் என்னையே அழுத்தத் தொடங்கின. எனது அம்மாவும் அப்புவை இழந்த பிறகு எவ்வளவு பாடுபட்டு எங்களை ஆளாக்க நினைத்திருப்பார்! அதே கதை—நிலவரம் இப்போ எனது வீட்டில் அரங்கேறிக் கொண்டிருக்கிறதே. இது பரம்பரை பரம்பரையாக தொடரும் சாபமா?

நல்ல வேளையாக எனது பிள்ளைகள் கொடுத்து வைத்தவர்கள். அவர்களுக்கு அதிகம் கஷ்டத்தைக் காட்டாமல் வளர்த்து விடல் வேண்டும் என்பதில் குறியாக இருந்தேன். எங்கள் இளமையின் வறுமை எனக்கு நல்லதொரு பாடம். இளம் வயதில் மனதை அழுத்தும் வகையில் பிள்ளைகளை ஏன் துன்பப் படுத்த வேண்டும்? நாளை தாங்கள் வாழும்போது என்னென்ன கஷ்டங்களைச் சந்

(XI ஆம் பக்கம் பார்க்க)

## இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

ஒவ்வொருவருக்கும் கஷ்ட நஷ்டங்கள் உண்டு. எமது வீட்டு அலுவல்களை நாம் தாம் பொறுப்புடன் பார்க்க வேண்டும். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி புகைச்சல் ஏற்பட இடமுண்டு. கைகால் உளைவு, உஷ்ணபீடைகள் சிலரை வருத்தும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். காணி பூமி சம்பந்தப்பட்ட செலவுகள் அதிகரிக்கும். இடாம்பீகச் செலவுகளுக்கு குறைவிருக்காது. உறவினரின் உதவி, வருகை ஓரளவு ஆறுதலைத்தரலாம்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்.

விருச்சிகம்: உயர்வும், தாழ்வும் மாறிமாறி வரலாம். தமக்கு நன்மை செய்தால் வாழ்த்தியும், கொஞ்சம்வசதி குறைவு என்றால் தூற்றியும் காட்டும் உலகில்தான் நாம் வாழுகின்றோம். உங்களைப் பற்றிய ஒரு புதிய எண்ணம், மதிப்பு தொழில் ஸ்தானத்தில் ஏற்பட இடமுண்டு. அடிக்கடி மனதில் பதற்றம் ஏற்பட்டபடி இருக்கும். தந்தைவழியினரின் உறவினர்களின் இழப்பு அல்லது அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படலாம். அயலவர்கள் புதிய பிரச்சினைகள் கொடுப்பார்கள். தெய்வபக்தி கொண்டவர்களின் உதவிகள் கிடைக்கும். நெஞ்சு, அடிவயிறு, குடல் சம்பந்த உபாதைகள் கொடுக்கலாம். வைத்தியம் செய்யவும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

தனுசு: உங்கள் உள்ளம் பெரிது. எதையும் ஒளிவு மறைவின்றிச் சொல்லி, சொல்லி ஏமாறுவீர்கள். உங்கள் பலவீனத்தை மற்றவர்கள் பயன்படுத்துவார்கள். எதிர்ப்பாலரின் ஆலோசனைப்படி செயற்பட்டு வெற்றி ஈட்டுங்கள்; அல்லது தோல்விதான். வீடு, மனை, பொருள், வாகன விஷயங்களில் கொஞ்சம் நிதானமாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலைதான். எவரையும் நம்பமுடியாது. பொருளால் வேதனை வரும். உஷ்ணபீடைகள், நாரி நோ, காலிவருத்தம் கொடுக்கும். குலதெய்வ வழிபாடு செய்துவாருங்கள். ஏழைக்கு தானதர்மம் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்.

மகரம்: உங்கள் புத்தி, யுக்தி, சக்தி தொழிற்படும் காலமாகும். எதிர்ப்பாலார் உதவிகள் செய்வார்கள். தொழில் ஸ்தானத்தில் நிலையற்ற நிலை ஏற்படும். அடிக்கடி மறதி, அதிகயோசனை, பயம் என மாறி மாறி இருக்கும். எந்த இடத்திலும் மதிப்பு இருக்கும். ஆயினும் இக்காலம் பொருள் பற்றி யோசனைகளும் பல திட்டங்களும் உருவாக இடமுண்டு. இடமாற்றங்கள் செய்வதில் நிதானம் தேவையாகும். எதிர்பாராத இழப்புக்கள் கொடுக்கலாம். வயிற்றில் நோ கொடுக்கும். வைத்தியத்தால் நன்மையுண்டு. பெரியவர்கள், சமயக்குரவர், சமய பக்தி கொண்டவர்களின் உதவி ஆலோசனைகளால் நன்மை ஏற்படும்

அதிர்ஷ்டநாள்: திங்கள்.

கும்பம்: உங்கள் மதிநுட்பத்தால் எல்லோரும் போற்றுவார்கள். ஏழரைச் சனீஸ்வரனால் கைக் கெட்டியது வாய்க் கெட்டாத நிலை உண்டு. தொழில் ஸ்தானத்தில் திருப்தி இல்லை. ஆயினும் பணத் தட்டுப்பாடு இருக்கமாட்டாது. நரம்பு, வயிற்றுநோ, வாய்வு உபாதை படப்புக் கொடுக்கும். உங்கள் வாக்குச்சாதுரியத்தால் பல காரியங்கள் சாதகமாகும். அரசியல், சட்டம், குருத்தொழில் கொண்டவர்களின் உதவிகள் ஆலோசனைகள் உங்கள் வாழ்க்கையில் பல மாறுதல்களை கொடுக்கும். தூரதேசப் பிரயாணங்களையும், நண்பர்களின் சாதுரியப் பேச்சுக்களையும் நம்பி ஏமாறாமல் இருக்கவும். கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் பெரியவர்களைப் போற்றி காரியத்தில் கண்ணாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, திங்கள்.

மீனம்: துணிந்து எதையும் எதிர் நீச்சல் அடிக்கும் தைரியம் வரவேண்டும். அடிக்கடி கோபம் அல்லது சலிப்பு, மந்தநிலை, எதிர்காலத்தைப் பற்றி அதிகயோசனை என்பன மாறிமாறி ஏற்படும் பலன்கள் உண்டு. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டம், ஆனால் நிறைவேறாத் தன்மைஉண்டு. எதிர்ப்பாலாரின் அன்பு, ஆலோசனைகளை கொஞ்சம் அனுசரித்து நடந்தால் பலவித நன்மைகள் ஏற்படும். பிறருக்கு, பலருக்கு நீங்கள் உலவிசெய்துள்ளீர்கள். ஆயினும் இக்காலத்தில் நீங்கள் கஷ்டப்படும் பொழுது அவர்கள் உதவுவார்கள் என எதிர்பாக்காதீர்கள். சளி, சலம், விறைப்பு, தலையிடி அடிக்கடி வருத்தும். அடிக்கடி மனச்சலிப்பு ஏற்படும். சனீஸ்வரனுக்குப் பிரீதிசெய்து, குலதெய்வவழிபாடு செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

## தடிப்பு....

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

யானின் கையைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்துத் தெரிவித்துவிட்டுச் சென்றுகொண்டிருந்தார்.

அந்த 'தடிப்பை' நெடுநாள்களாக மனத்தில் காவிக் கொண்டு பெரிய மனித உருவில் நடமாடும் அந்த வாத்தியாரை — பொதுவுடமைச் சிந்தனை கொண்ட அந்த மணிவிழாக்காணும் எழுத்தாளர் யேசடியானின் தொடர்பினால் கூட, அவரின்மனத்திலுள்ள 'தடிப்பை' கழற்ற முடியவில்லை. அது 'கறள் பிடித்த ஆணி' போல அவரின் மனத்தில் இறுகிப் போய் இருக்கின்றது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்ற...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று வரம் கேட்டாள்.

இம்மை மாறி
மறுமை யாயினும்
நீயாகியர் என்கணவனை
யானாகியநின்
நெஞ்சு நேர்பவளே!

அவளுடைய அன்பு உணர்ச்சியை—காதல் உணர்ச்சியை—நட்புணர்ச்சியை — மற்றவர்களால் அளவிட்டுக்கூற முடியுமா?

அதனால்தான் அவளே சொல்கிறாள். காதலனிடத்து நான் கொண்ட அன்பு நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது; கடலினும் ஆழமானது—என்று.

காலத்தை வென்று நிற்கும் உணர்ச்சிச் சிறப்புக் கொண்டது இக்குறுந்தொகைப் பாடல்.

### வடிவம்

இலக்கிய வடிவம் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் சுருக்கமாக, ஆனால் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார் ''எண் பொருளவாகச்செலச்சொல்லி'' என்கிறார். கடினமான விஷயமானாலும்கூட அது எளிய விஷயமாகுமாறு இலகு நடையிற் சொல்ல வேண்டும் என்கிறார்.

இலக்கிய வடிவம் எளிய நடையாக— இலகுநடையாக —இருக்கவேண்டும் என்று கூறும் வள்ளுவர் கூறியவாறே தாமும் இலகு நடையைக் கையாண்டார்.

மூவாயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய திருக்குறளில் இச்சொற் பற்றிக் கூறும் குறள் ஒன்று:

''அல்லவைதேய அறம்
பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்''

இக்குறளில் அகராதி பார்த்துப் பொருள் தெரிய வேண்டிய சொல் ஒன்று கூட இல்லை.

அல்லவை, தேய்தல், அறம், பெருகுதல், நல்லவை, நாடுதல், இனிமை, சொல்லுதல் —அனைத்தும் செய்யுள் வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் பொதுவான சொற்களே.

ஒருவன் நன்மை பயக்கும் சொற்களை மனத்தால் ஆராய்ந்து சொல்வான் ஆயின் அவனது பாவம் கெட அறம் பெருகும் என்பது இக்குறளின் பொருள்.

பேச்சு வழக்கில் உள்ள சொற்களைக் கொண்டே வள்ளுவர் இக்குறளைப் படைத்தபோதும் தமது தனித்துவத்தை — கவித்துவத்தை — காட்டத்தவறவில்லை.

தேய்தல் என்பதற்கு எதிர்ச்சொல் வளர்தல் என்பதே. செய்யுள் வழக்கிலும் சரி, பேச்சு வழக்கிலும் சரி தேய்தலுக்கு எதிர்ச்சொல் வரும் பொழுது வளர்தலே எதிர்ச்சொல்லாக வரும். 'தேய்பிறை — வளர்பிறை' என்றே வரும்.

ஆனால் திருவள்ளுவரோ அல்லவை தேய அறம் வளரும் என்று கூறாமல் அறம் பெருகும் என்று கூறியுள்ளார்.

தான் நினைப்பதைப் புலப்படுத்த — தனது உள்ளத்தைப் புலப்படுத்த—வளரும் என்ற சொல்லைவிட பெருகும் என்ற சொல்லே பொருத்தமானது எனத் திருவள்ளுவர் நம்பினார்.

வளர்தல் என்ற சொல்லைவிட பெருகுதல் என்ற சொல் ஒன்றன் வேகத்தைக் குறிப்பதற்குப் பெரிதும் துணை புரியும். குழந்தை வளர்கிறது, மரம் வளர்கிறது என்னும்போது நிதானமான வளர்ச்சி ஒன்றையே அது குறிக்கும். பெருகும் என்று சொல்லும் போது அது திடீரென ஏற்படும் பெருமாற்றத்தைக் காட்டும்.

ஆறு பெருக்கெடுத்தது. குளம் உடைத்துப் பெருகியது என வரும் இடங்களில் பெருகும் என்ற சொல் வேகத்தையும், வலுவையும் கொண்டதாய் விளங்குகின்றது.

ஒருவன் மனத்திலிருந்து எழுந்த இன்சொல்லைப் பேசத் தொடங்கியதும் அவனது வாழ்வில் அறம்பெருகும். அறம் பெருகும் போது இல்லறம் இனிதாக அமையும்; வெளியுலகம் அமைதி தரும். அறம் பெருகும் வாழ்வில் குறையும் உண்டா?

தமிழ் இலக்கியப் பரப்பில் காலத்தை வென்று நிற்கும் உணர்ச்சி வாய்ந்த கவிதைகள் மிகப்பல. அவை தோன்றிய காலத்தில் பயந்த இலக்கிய இன்பத்தை இன்றும் பயக்கின்றன; என்றும் பயக்கும் இயல்பு வாய்ந்தன. ★

# சுமைகள் இறங்குவ...

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

திக்க நேருமோ! இப்போது நிம்மதியாக இருக்கட்டும்!

நாங்கள் வளரும் காலம் சுந்தரம் மாமா எங்கள் குடும்பத்துக்கு ஒரு பெரிய தலைவலியாகவே இருந்தார். ஆனால் எனது பிள்ளைகளுக்கு மாமாமாரின் முகம் மறந்து போச்சு. அப்படித் தொல்லைகள் கிடையா. இவங்கள் ஊர்தேசம் விட்டுத் தொடர்பு இல்லாமல் போனதும் அந்தக் கோணத்தில் பார்த்தால் நல்லதுதான். இல்லாவிட்டால் இவர் இல்லாத வீட்டிலை எத்தனை பேர் முதலாளிக்கு நிப்பினம்?

எண்டாலும் எனது பிள்ளைவளர்ப்பு தோல்விதான் என்பதை சத்யன் நிரூபிச்சு வருகிறானே! எந்தக் கஷ்டமும் தெரியாமல் பாவம் எண்டு வளர்த்து விட்டுத்தான் இப்படித் தலைகால் தெரியாமல் பழகிவிட்டான். அவனைத் திருத்திற சக்தி ஆண்டவனிடமும் இல்லையோ?

சுபி கொஞ்சம் பொறுப்பு விளங்கி நிற்கிறாள்தான். பொம்பிளையள் பொறுப்பாக— பொதிசுமக்கிற— பரம்பரைச் சாபம் அவளுக்கும் தொடரக்கூடாது என்பது எனது ஆசை. எத்தனை சாவுகளைச் சந்தித்த எனது சீவியத்தில் எனது சாவு குடும்பச் சாபத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். ஆனால் சுபியின் எதிர்காலத்தை எப்பிடித் திட்டமிடுகிறது?

அவளும் மாணிக்கத்தாரும் வருகிறார்கள்......

(தொடரும்)

## பாலைவனக்...

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறம் உடையது. பெரும்பாலும் இவை பாலைவனங்களை அடுத்த நாடுகளிலேயே மிகுதியாக இருக்கும்.

ஒட்டகம் அசைபோடக்கூடிய உயிரினத்தைச் சேர்ந்தது. வேப்பிலை, கள்ளிச்செடி முதலியவற்றை விருப்பமாய்த் தின்னும். ஆனால், இறைச்சி வகைகளை அது தின்னாது.

ஒட்டகங்கள் வளர்ப்போனிடம் அன்பாகஇருக்கும். அரேபியர் ஒட்டகங்களை மிகுதியாக வளர்க்கிறார்கள். அரேபிய நாடு மணல்வெளி நிறைந்தது. எனவே, ஒட்டகங்கள் அவர்களுக்குப் பலவகைகளிலும் பயன் படுகின்றன.

'பாலைவனக் கப்பலைப்' படத்தில் பாருங்கள்!

# உள்ளதை உள்ளபடி உரைப்பது உயர்வா?

என்தோழி ராதிகாவிடமிருந்து அழைப்பு. உடல் நலமில்லாமல் ஆஸ்பத்திரியில் இருக்கும் என் மாமாவைத்தான் பார்க்க விரும்புவதாகச் சொன்னாள்.

ஆஸ்பத்திரிக் கட்டிலில் துவண்டு போய் படுத்திருந்த என் மாமா எங்களைக் கண்டதும் ''அடடே... வாங்க வாங்க'' என்று சின்னக் குழந்தை போல உற்சாகப்பட்டு எழுந்து உட்கார்ந்து விட்டார்.

அவளை அங்கே பேசிக் கொண்டிருக்கச் சொல்லிவிட்டு, மாமா கொடுத்த மருந்துச் சீட்டிலுள்ள மருந்துகளை வாங்கிவர கீழே மருந்துக்கடைக்குச் சென்றேன்; மருந்துகளுடன் நான் திரும்பிவரவும், ஓரிரு நிமிடங்களில் ராதிகா மாமாவிடமும் அத்தையிடமும் சொல்லிக் கொண்டு எனக்கும் சொல்லிவிட்டு கிளம்பினாள்.

ராதிகா கிளம்பிப் போனதும் யதேச்சையாகத் திரும்பி மாமாவின் முகத்தைப் பார்த்த எனக்கு 'திக்' என்றாகி விட்டது. ஒருவித பயத்தாலும், எரிச்சலாலும் குழம்பிப்போய் இருந்தார்.

என்ன நடந்திருக்கும்? என்று ஒருவாறு ஊகித்த நான் அத்தையிடம் மெல்ல விசாரித்தேன். ராதிகாவின் வரவால் சந்தோசப்பட்ட அவர் மனம், நான் நினைத்தபடியே அவள் வார்த்தைகளால் காயப்பட்டுப் போயிருக்கிறது. அப்படி என்னதான் சொன்னாள்.

''அங்கிள்... எப்படியிருக்கீங்க? இந்த ஆஸ்பத்திரியிலே உங்களை 'அட்மிட்' பண்ணியிருக்காங்கன்னு கேட்டதுமே 'பகீ'ன்னுது. எங்க மாமாவையும் இங்கேதான் 'அட்மிட்' பண்ணினோம். அவருக்கும் கிட்டத்தட்ட உங்க வயசுதான் உங்களை மாதிரித்தான் நல்லா இருந்தார். அட்மிட் பண்ணின நாலாம்நாளே... அதை எப்படி சொல்லுவேன்?! கல்யாணத்துக்கு இரண்டு மக வேறே நிற்குது.''

அவள் சொன்னதை அத்தை ஒருவித எரிச்சலுடன் என்னிடம் விவரித்த போது எனக்கு ராதிகா மீது ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

இவளெல்லாம் வந்து பார்க்கவில்லை என்று யார் அழுதார்கள்? இவள் சுபாவம் தெரிந்துதான் அழைத்துவர முதலில் தயங்கினேன்.

ராதிகா ரொம்ப ரொம்ப நல்லவள்தான். எனக்கு ஒரு கஷ்டம் என்றால் துடித்துப் போய்விடுவாள். அவளிடம் உள்ள ஒரே விரும்பத்தகாத செய்கை உள்ளதை உள்ளபடி பேசுகிறேன் என்று உளறிக் கொட்டி மற்றவர்களுக்கு மன வருத்தத்தை உண்டாக்குவாள்.

ராதிகா மட்டுமல்ல இன்னும் எத்தனையோ பேர் இவளைப் போல இருக்கிறார்கள். ''என் மனசிலே எதுவும் இருக்காது.'', ''என் மனசிலே பட்டதை தேங்காய் உடைச்ச மாதிரிடாண்ணு சொல்லிடுவேன்'', ''உள்ளதைத் தானே சொன்னேன்'' என்று தான் ரொம்ப புத்திசாலித்தனமாய் பேசுவது போல தற்பெருமை வேறு.

கேட்கும் எதிராளியின் மனது புண்படும் பட்சத்தில் உள்ளதை உள்ளபடி பேசுவது நிச்சயமாகத் தவறுதான்.

எங்கெல்லாம் உள்ளதை உள்ளபடி பேசக் கூடாது?

உங்கள் தோழி உங்களிடம் தன் போட்டோவைக்காட்டி ''போட்டோ சரியாகவே எடுக்கலே. நான் போட்டோவிலே நல்லாவே இல்லை'' என்று ஆற்றாமைப்பட்டு புலம்பும் போது —

''போட்டோ நல்லாத்தான் எடுத்திருக்கான். சொல்றேன்னு பிழையா நினைச்சுக்காதே. ஏதோ மனசில பட்டதைச் சொல்றேன். நேரிலே எப்படி இருக்கியோ அப்படித்தானே போட்டோவில் விழும். நேரிலே இப்படி இருந்துட்டு போட்டோவிலே ஸ்ரீதேவி மாதிரி தெரியணும்னா முடியுமா?'' என்று பட்டென்று சொல்லாதீர்கள். போட்டோ சரியாக அமையவில்லை என்கிற கவலையைவிட நீங்கள் சொன்ன வார்த்தைகளால் அவள் கவலைப்படுவதுதான் அதிகம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

அதே போல் ரொம்ப நாள் கழித்து கணவருடன் வெளியில் கிளம்புகிறோம் என்கிற ஆசையில் மனைவி சற்று நன்றாகவே அலங்காரம் செய்து கொண்டுகிளம்புவது இயல்பு.

அவளிடம் போய் ''போதும்... போதும் என்னதான் 'மேக் அப்' போட்டாலும் உன் முகம் மாறவா போகுது. உள்ளத்தைச் சொல்றேன். சின்ன வயசிலே நீ இருந்த அழகு இப்ப இல்லே!'' என்று தன் வார்த்தைகளால் கடுப்படிக்கும் கணவன்மார்களும் இருக்கிறார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்ட மனைவி என்னதான் பொன் நகைகளை வாரி அணிந்து கொண்டாலும் புன்னகையை முகத்தில் அணிய நிச்சயம் மறந்து விடுவாள்.

ரொம்ப நாள் கழித்து பொது இடத்தில் உங்களைச் சந்திக்கும் தோழியிடம் ''என்ன இப்படிக் குண்டாயிட்டே சொல்றேன்னு தப்பா நினைக்காதே. மனசிலே பட்டதைச் சொல்கிறேன். இடுப்பெல்லாம் டயர்...டயரா மாட்டியிருக்கே. எந்தக் கடையிலே அரிசி வாங்கிறே? கடையை மாத்து'' என்று நகைச்சுவையாக பேசுவதாக நினைத்துக்கொண்டு வெறுப்பேற்றாதீர்கள்.

தோழியிடம் அவள் உடல் பருமனைப் பற்றி பேசி, இளைக்க வைக்வேண்டியது அவள் ஆரோக்கியத்திற்கு அவசியம் என்று சுட்டிக் காட்ட வேண்டியது உங்கள் கடமைதான் என்றாலும் அதற்கான அணுகுமுறை சரியாக இருக்க வேண்டும்.

அதேபோல உங்கள் சினேகிதிகளிடம் அவர்கள் உடையைப் பற்றி மற்றவர் முன்னிலையில் கமெண்ட் அடிக்காதீர்கள். ''இந்த டிரஸ்ஸைப் போட்டுக்கிட்டு வந்து ஏன் எங்களை இந்தப் பாடு படுத்தறே?'' ''உள்ளதைச் சொல்லுறேன் இந்தக் கலர் உனக்கு கொஞ்சம் கூட ஸுட் ஆகலே. உன்னை இன்னும் கறுப்பாவே காட்டுது'' ஏற்கனவே நீ குள்ளம். இந்த டிரஸ்ஸிலே நீ ரொம்பவே குட்டையா தெரியுறே'' என்று எரிச்சலை கூட்டாதீர்கள்.

இன்னும் சிலர் இருக்கின்றார்கள். வசதி குறைந்தவர்களிடம் பேசும்போது அவர்களது ஏழ்மையைச் சுட்டிக் காட்டிப் பேசுவது அவர்களுக்கு இனிப்பு சாப்பிடுவது மாதிரி. ''உங்களிடம் போய் உங்கள் மகளுக்கு இத்தனை பவுண் நகை போடுங்கன்னு கேட்கலாமா? உங்க கஷ்'டம் தான் ஊருக்குத்தெரியுமே?'' —என்பார்கள்.

நீங்கள் வெளிப்படையாகப் பேசுபவராக இருக்கலாம். அதற்காக உள்ளதைச் சொல்கிறேன் என்று அவர்கள் ஏழ்மையைச் சுட்டிக்காட்டி அவர்களைத் தலைகுனிய வைக்காதீர்கள்.

வெளிப்படையாகப் பேசுகின்றேன் என்று வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதீர்கள்.

உள்ளதை உள்ளபடி பேசுகிறேன் என்று சமய சந்தர்ப்பம் தெரியாமல் உளறிக் கொட்டி உள்ளங்களைக் காயப்படுத்தாதீர்கள். ★

- கீதா -

## விடைகள்

IV ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### வார்த்தை விளையாட்டு

நண்டு, நடு, நகு, நதி, நரை, நகரு, குண்டு, குதி, குடு, குரு, குருடு, கண், கண்டு, கடு, கதி, கவண், கரை, கரு, கருதி, கருவண்டு, கடுகதி, திண், திகதி, திரை, திரு, வதி, வடு, வரை, வகுதி, வண்டு.

### முடியுமா?

I. (அ) கலை. (ஆ) கல். (இ) பல். (ஈ) பகல். (உ) பக்கம். (ஊ) பழம். (எ) பழக்கம். (ஏ) கழகம்.
II (அ) காது. (ஆ) துறை. (இ) ஊது. (ஈ) ஊர். (உ) கார். (ஊ) காவற்துறை.

### கண்டுபிடியுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 4 | 5 | 1 | 2 | 3 |
| 2 | 3 | 4 | 5 | 1 |
| 5 | 1 | 2 | 3 | 4 |
| 3 | 4 | 5 | 1 | 2 |

### வழி கண்டுபிடியுங்கள்

2 என இலக்கமிடப்பட்ட வழி மூலம் சென்றால் வண்ணத்துப் பூச்சி பூவை அடையும்.

### இயலுமா?

1) இலக்கம் 2 எனக்குறிப்பிடப்பட்ட குருவி.

2) இந்த எண்களைக் கூட்டும் போது 9876543210 என்ற இலக்க ஒழுங்கில் அமைந்த ஓர் எண்கிடைப்பது அதியசமல்லவா?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் பீனிக்ஸ் பறவையைப் போல் மீண்டும் எழுந்த ஜெயலலிதா!

## தி. மு. க. ஆட்சியைப் பதவி கவிழ்த்து கருணாநிதியை பழிவாங்க துடிப்பு

மத்தியில் பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர்கள் ஆட்சி அமைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள இந்த வேளையில், தமிழ் நாட்டு அரசியலும் சமீப காலத்தில் என்றும் இல்லாத வாறு சுறுசுறுப்படைந்து காணப்படுகிறது.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமிழ் நாடு மக்களவைத் தேர்தலில் ஈட்டிய எதிர்பாராத வெற்றியினால் அகில இந்திய ரீதியில் சகலரினதும் கவனத்தை ஈர்த்து வருகிறார்.

ஜெயலலிதாவின் ஆறு கட்சிகள் கூட்டணி 30 ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளது.



கருணாநிதி

இதில் ஜெயலலிதாவின் அ.தி.மு.கவுக்கு தனித்து கிடைத்த ஆசனங்கள் 18.

1996, மக்களவைத் தேர்தலில் தமிழ் நாட்டில் ஒரு தொகுதியிலாவது ஜெயலலிதாவின் அ. தி. மு. க வெற்றியீட்டவில்லை.

தேர்தல் படுதோல்வி, ஊழல் வழக்குகள் ஆகியவற்றால் ஜெயலலிதாவின் அரசியல் வாழ்வு அஸ்தமித்து விட்டதாகவே கருதப்பட்டது.

ஆனால் பீனிக்ஸ்(Pho nix) பறவை போன்று ஜெயலலிதா மீண்டும் எழுந்து விட்டார்.

பீனிக்ஸ் பறவைகளை அழித்துவிட முடியாது. அழிக்க, அழிக்க சாம்பல் மேட்டில் இருந்து அவை மீண்டும் எழும் என்பது புராணக் கதை.

மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதாக்கட்சி மாநிலங்களில் கூட்டுவைத்த தோழமைக் கட்சிகளில் பாரதிய ஜனதாவுக்கு அடுத்ததாக தனித்து கூடுதல் ஆசனங்களைப் பெற்ற கட்சி அ.தி.மு.க தான்.

### பழிவாங்க முயலும் ஜெயலலிதா

தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தலில் ஒரே கூட்டணியில் பாரதிய ஜனதாவும் அ.தி.மு.க.வும் போட்டியிட்டதால் பாரதீய ஜனதாக்கட்சி மத்தியில் அரசு அமைக்கும் பட்சத்தில் அ.தி.மு.க வும் ஆட்சியில் நேரடிப் பங்காளியாக இணைந்து கொள்ளும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் வெளியில் இருந்து நிபந்தனையற்ற முறையில் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு வழங்கப்போவதாக ஜெயலலிதா அறிவித்தார். ஆதரவுக் கடிதம் வழங்குவதிலும் இழுபறி நிலை.

இது பாரதிய ஜனதாத் தலைவர்களுக்கு சற்று ஏமாற்றத்தை அளித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

மக்களவைத்தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறிய நிலையில்—

உதிரிக்கட்சிகளையும் சுயேச்சைகளையும் தேடி வலை விரித்துக்கொண்டிருக்கும் வேளையில்—

தன்னுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட கட்சி ஒன்று வெளியில் இருந்து ஆதரவு வழங்கப் போவதாக அறிவித்திருப்பது பாரதிய ஜனதாத் தலைவர்கள் முற்றிலும் எதிர்பாராத ஒன்றே.

மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சி அமைத்தால் தமிழ் நாட்டில் கருணாநிதி தலைமையிலான தி. மு. க. ஆட்சி கலைக்கப்படவேண்டும் என்று ஜெயலலிதா நிபந்தனை விதித்திருந்தார்.

இந்த நிபந்தனையை பாரதீய ஜனதாத் தலைவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள்.

ஜெயலலிதாவை இணங்க வைக்கும் முயற்சியில் பாரதீய ஜனதாத் தலைவர்கள் வாஜ்பாய், அத்வானி ஆகியோர் ஈடுபட்டனர்.

ஜெயலலிதாவை டில்லிக்கு அழைத்துப் பேச்சு நடத்தினர். ஆனால் தனது நிலைப்பாட்டில் மாற்றம் கிடையாது என்று ஜெயலலிதா உறுதியாக அறிவித்துவிட்டார்.

கருணாநிதி தலைமையில் தி. மு. க. அரசு தமிழ்நாட்டில் பதவிக்கு வந்த பின்னர் ஜெயலலிதாவுக்கு எதிராக 13 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் அனேகமானவை ஊழல் தொடர்பான வழக்குகள்.



வாஜ்பாயுடன் செல்வி ஜெயலலிதா

இந்த வழக்குகள் சம்பந்தமாக ஜெயலலிதாவுக்கு பிணை மறுக்கப்பட்டு அவர் சிறையிலும் அடைக்கப்பட்டார். இதனால்தான் கருணாநிதியைப் பழிவாங்கத் துடிக்கிறார் ஜெயலலிதா. பாரதிய ஜனதா ஆட்சியில் இணைவதில்லை என்ற அவரின் நிலைப்பாட்டுக்கு இதுவே காரணம் ஆகும்.

எம், ஜி. ஆர். இறந்து பத்து வருடங்கள் சென்ற போதிலும் தமிழ் நாட்டின் கிராமப் புறங்களில் இன்றும் எம். ஜி. ஆருக்கு கணிசமான ஆதரவு இருந்து வருகிறது.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் எம். ஜி. ஆர். ஆட்சியை மீண்டும் கொண்டு வரப்போவதாகவே ஜெயலலிதா பிரசாரம் செய்தார்.

1996 மக்களவைத் தேர்தலில் தென்னிந்திய மாநிலங்களில் கால்லூன்ற முடியாது போன பாரதிய ஜனதாக் கட்சி, இந்த முறை எப்படியாவது ஆட்சியை அமைப்பது என்ற உறுதியுடன் செயற்பட்டது.

1996 மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஒரு தொகுதியையாவது கைப்பற்ற முடியாது போன அ. தி. மு. கவின் கூட்டணியில் பாரதிய ஜனதா இணைந்து போட்டியிட்டது ஒரு துணிச்சல்தான்.

நீண்டகால காங்கிரஸ் கூட்டை ஜெயலலிதா கைவிட்டதும் தமிழ் நாட்டில் காங்கிரஸின் படுதோல்விக்கு ஒரு காரணம் ஆகும்.

பாரதிய ஜனாதா — அ. தி. மு. க. கூட்டணி மூலம் முதல் தடவையாக தமிழ் நாட்டிலிருந்து மூன்று பாரதீய ஜனதா உறுப்பினர்கள் மக்களவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதுவும் தொடர் குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்த கோயம்புத்தூரில் 80 சத வீதமானோர் வாக்களித்துள்ளனர். பாரதீய ஜனதா வேட்பாளர் சி. ப. இராதாகிருஷ்ணன் ஒரு லட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இந்தக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள வை. கோபாலசாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு.க. 3 தொகுதிகளிலும் கடந்த காலங்களில் அடுத்தடுத்து பல தோல்விகளைச் சந்தித்து வந்த டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி 4 தொகுதிகளிலும் வெற்றியீட்டி உள்ளன. இந்த இரு கட்சிகளுமே தமிழ் நாட்டில் பலவீனமான கட்சிகளாகக்கருதப்பட்டு வந்தன.

ஜெயலலிதாவின் அரசியல் எதிரிகளாக ஒரு காலத்தில் கருதப்பட்ட ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, காங்கிரஸில் இருந்து பிரிந்து தமிழக ராஜீவ் காங்கிரஸ் என்ற பெயரில் புதிதாகக்கட்சி அமைத்த வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோரும் வெற்றி ஈட்டி உள்ளனர்.

இந்த வெற்றிகளுக்கு ஜெயலலிதா ஆதரவு அலையா? அல்லது தி. மு. க. எதிர்ப்பு அலையா? காரணம் என்பது இன்றும் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருந்து வருகிறது.

### தி. மு. க. - த. மா. கா. தோல்வி ஏன்?

கருப்பையா மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ், மற்றும் தி. மு. க. கூட்டணி இந்த தேர்தலில் 9 ஆசனங்களைப் பெற்று படுதோல்வி அடைந்ததுக்கு பல்வேறு காரணங்கள் காண்பிக்கப்படுகின்றன.

தமிழ் நாட்டில் தேர்தல் நடைபெற முன்னர் எடுக்கப்பட்ட பொது அபிப்பிராய கணிப்புகள், தி. மு. க. — த. மா. கா. கூட்டணி அமோக வெற்றியீட்டும் என்றே தெரிவித்திருந்தன.

ஆனால் எவரும் முற்றிலும் எதிர்பாராத விதத்தில் இந்த கருத்துக் கணிப்பையே பொய்யாக்கி விட்டனர் தமிழக வாக்காளர்கள்.

★ பஸ் கட்டணம் உயர்வு.
★ விலை வாசி உயர்வு.
★ மின் கட்டணம் உயர்வு.
★ சாதிக் கலவரங்கள்.
★ கோயம்புத்தூர்தொடர் குண்டு வெடிப்புக்கள்.

ஆகியவையே தி. மு. க. கூட்டணிக்குக் கிடைத்த தோல்விக்குக் காரணம் என்று பொதுவாகக்கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

கருணாநிதி பதவி ஏற்ற சமயம் நிர்வாகத் திறமை மிக்கவர், ராஜதந்திரம்மிக்கவர் என்றே கருதப்பட்டது.

மேற்கண்ட நெருக்கடிகள் ஆட்சியில் அ தி. மு. க. இருந்தாலும் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் அவற்றை கருணாநிதி கையாண்ட விதம் தான் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கும் என்று நம்பப்படுகிறது.

எல்லாப் பிரச்சினைகளையும் அரசியல் ஆக்க முயன்றார் கருணாநிதி. மக்களின் எதிர்ப்பார்ப்புகளை அவர்கள் நினைத்த வேகத்தில் நிறைவேற்ற கருணாநிதி தவறி இருந்தார்.



மூப்பனார்

தி. மு. க. — த. மா. கா. — இந்திய கம்யூனிஸ்ட் கூட்டணி 1996 மக்களவைத் தேர்தலில் தமிழ் நாட்டில் அமோக வெற்றியீட்டி இருந்தது.

இந்தக் கூட்டணியைச் சேர்ந்த 9 அமைச்சர்கள் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசில் இடம் பெற்றிருந்தனர்.

இந்த 9 அமைச்சர்களில் தி. மு. க. வைச் சேர்ந்த கைத்தொழில் அமைச்சர் முரசொலி மாறன் தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த நிதி அமைச்சர் பி. சிதம்பரம் ஆகியோர் மட்டுமே தற்போது நடந்துமுடிந்த தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

1996 மக்களவைத் தேர்தலில் 20 ஆசனங்களில் வெற்றியீட்டிய தமிழ் மாநில காங்கிரஸ் நடந்து முடிந்த தேர்தலில் 4 ஆசனங்களில் மட்டுமே வெற்றியீட்டி இருக்கிறது.

மத்தியில் நிலையான ஆட்சி அமையவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகவே தமிழ் நாட்டு மக்கள் அ. தி. மு. க.—பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு வாக்களித்துள்ளனர் என்று கருணாதியும் மூப்பனாரும் சமாதானம் கூறுகின்றனர்.

எனினும் அதனை ஏற்கும் நிலையில் இன்றைய அரசியல் போக்கு இல்லை.

அதாவது எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறிவிட்டன.

ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த தெலுங்கு தேசம் கட்சி தற்பொழுது எடுத்துள்ள நிலைப்பாடு காரணமாக ஐக்கிய முன்னணியின் உதவியுடன் ஆட்சி அமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் கட்சிக்குத் தடங்கல் ஏற்பட்டு விட்டது.

இந்தப் பின்னடைவைத் தவிர்க்கும் ஒரு முயற்சியாகவே சீதாராம் கேசரியின் பதவி விலகல் இடம்பெற்றுள்ளது. ★

நடந்து முடிந்த இந்திய மக்களவைத் தேர்தலில் காங்கிரஸுக்கு ஏற்பட்ட பெரிய தாக்கங்களில் ஒன்று உத்தரப் பிரதேச மாநிலத்தில் ராஜீவ் குடும்பத்தின்கோட்டையாகிய அமேதி தொகுதியைக் கோட்டை விட்டதுதான்.

ராஜீவ் காந்தியின் சகோதரர் சஞ்சே காந்தி 1980 இல் அமேதி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். அதே ஆண்டு சஞ்சே காந்தி விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

அவரது மரணத்துக்குப் பின்னர் இந்திரா காந்தியினால் பலவந்தமாக அரசியலுக்குக் கொண்டுவரப்பட்ட ராஜீவ் காந்தி இதே அமேதி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1991 இல் தமிழ் நாடு, ஸ்ரீபெரும்புதூரில் தற்கொலை குண்டுதாரியின் தாக்குதலுக்கு உள்ளாகிக் கொல்லப்படும் வரை அமேதி தொகுதியின் உறுப்பினராக ராஜீவ் காந்தி இருந்து வந்தார்.

ராஜிவ் காந்தியின் மரணத்தின் பின்னர், சோனியா காந்தி அரசியலுக்கு வர மறுத்தார்.

அவரை இணங்க வைக்கும் வரை ஒரு தற்காலிக ஏற்பாடாக ராஜீவ் காந்தியின் மிக நெருங்கிய நண்பரான சதீஷ் சர்மா அமேதி தொகுதியில் நிறுத்தப்பட்டார், இரு தடவைகள் இவர் மிகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருந்தார்.

காங்கிரஸின் தலைமையை சோனியா ஏற்கும் நேரம் வரும் போது அமேதி தொகுதியை அவருக்காக விட்டுக் கொடுக்க சதிஸ் சர்மா தயாராக இருந்தார். ஆனால் அதற்கான காலம் நெருங்கிவந்த சமயம் அதே தொகுதி பாரதீய ஜனதாவிடம் பறிபோய் விட்டது. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org